

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஏப்ரல் 07, 2011 | புரட்சி 10 | முழக்கம் 12 | விலை: ரூ.2.50

## வாக்காளருக்கு விலை; தனி நபர் விமர்சனங்கள்

# தமிழக தேர்தல் களத்தின் அவலம்

*தமிழ்நாடு தேர்தல் களத்தில் இப்போது விசித்திரமான காட்சி ஒன்று அரங்கேறியிருக்கிறது. தி.மு.க. - அ.தி.மு.க. அணிகளுக்கிடையே மட்டும் கடும் 'மோதல்' நடக்கவில்லை. ஆளும் கட்சியான தி.மு.க.வுக்கும், தேர்தல் ஆணையத்துக்குமிடையே மோதல் நடந்து கொண்டிருக்கிறது. தேர்தல் ஆணையத்தின் மீது முதல்வர் கலைஞர் கருணாநிதி குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகிறார். கேரளா, மேற்கு வங்காளம், அசாம் மாநிலங்களில் கூட தேர்தல்கள் நடக்கின்றன. அங்கெல்லாம், ஆளும் கட்சிகளோ, அம்மாநில முதல்வர்களோ தேர்தல் ஆணையத்தை குற்றக் கூண்டில் நிறுத்தவில்லை. தமிழ்நாட்டில் மட்டும் ஏன் இந்த நிலை என்ற கேள்வி நியாயமாக எழுகிறது.*

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து நமக்கும் விமர்சனங்கள் உண்டு. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வந்து போகும் தேர்தல் காலங்களில் மட்டுமே மக்கள் தங்கள் சொந்த வாழ்க்கைப் பிரச்சினைகளிலிருந்து சற்று விலகி, நாட்டில் நடக்கும் சமூக அரசியல் பிரச்சினைகளுக்கு காது கொடுக்கிறார்கள். வீதிக்கு வீதி நடக்கும் அரசியல் கூட்டங்களே அதற்குக் காரணம். அத்தகைய பரப்புரைகளுக்கு தேர்தல் ஆணையம் கடிவாளம் போடுவது, கட்டுப்பாடுகளை விதிப்பதில் நமக்கு உடன்பாடில்லை. அதே நேரத்தில் தேர்தல் முறை கேடுகளை தடுத்து நிறுத்துவதில் தேர்தல் ஆணையம் நேர்மையாக முனைப்பாக செயல் படுவதை எதிர்ப்பதில் எந்த நியாயமும் இல்லை.

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக, தேர்தல் என்றால், வாக்காளர்களுக்கு 'விலை' நிர்ணயிக்கும் விற்பனை சந்தையாக மாறி நிற்கிறது என்பது தமிழ்நாட்டையே தலைகுனிய வைக்கும் அருவெறுக்கத்தக்க உண்மை. தேர்தலில் முறைகேடுகள் என்பது பரவலாக எல்லா ஆட்சி காலத்திலும் நடந்தே வந்துள்ளன. ஆனால் முறைகேடுகளை கோட்பாடுகளாக்கி அதற்கான 'வழிமுறைகளை' விதிகளாக்கி அரசு எந்திரத்தைப் பணிய வைத்து, 'திருமங்கலம் பார்முலா' என்று பெயரும் சூட்டப்பட்டு, மக்கள் கருத்துக்கு விலை நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் முறையை தி.மு.க. தான் அறிமுகப்படுத்தியது என்பதை மறுக்கவே முடியாது; 'திருமங்கலம் பார்முலா' என்று பெயர் சூட்டியவரே தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தான். அந்த 'பார்முலா'வை செயல்படுத்த முடியாமல் தேர்தல் ஆணையம் தடுக்கிறது என்பதே, ஆளும் தரப்புக்கு, தேர்தல் ஆணையத்தின் மீதான ஆத்திரமாக உருவெடுத்திருக்கிறது. தி.மு.க. தொடங்கி வைத்த இந்த 'முறைகேடு' நாளைக்கு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் இன்னும் தீவிரமாகவே அமுலாகும். மக்களின் கருத்துகளை ஏலம் கூவி, விலை பேசும் ஒரு தேர்தல் முறையை 'ஜனநாயகம்' என்ற அமைப்புக்குள் புகுத்துவது கேவலத்திலும் கேவலம்.

1947 லேயே கட்சி தொடங்கி, 1957 ஆம் ஆண்டிலிருந்து போட்டியிட்டு, 1967-லேயே ஆட்சிக்கு வந்த நீண்ட பாரம்பர்யம் உள்ள கட்சி தி.மு.க. அ.இ. அ.தி.மு.க.வுக்கு அத்தகைய அரசியல் பின்புலமோ, சிறப்போ கிடையாது. மறைந்த மக்கள் செல்வாக்குப் பெற்ற எம்.ஜி.ஆர். என்ற தனி மனிதர் கட்சியாக செயல்பட்டதுதான் அ..அ.தி.மு.க. - இப்போது ஜெயலலிதா என்ற தனி மனிதரின் கட்சியாகவே இருக்கிறது. ஆனால், அறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன், ஈ.வெ.கி. சம்பத், என்.வி. நடராசன் போன்ற மூத்த தலைவர்களால் வழி நடத்தப்பட்ட தி.மு.க.வும், இப்போது கலைஞர் கருணாநிதி என்ற தனி மனிதரோடும், அவரது குடும்பத்துக்குள் அடங்கிய கட்சியாகவுமே மாறியிருப்பதை எவர்தான் மறுக்க முடியும்?

நடிகர் நடிகை பட்டாளங்கள் இரு தரப்பிலும் பிரச்சார பீரங்கியாக களம் இறக்கப்பட்டுள்ளனர். தி.மு.க. களம் இறக்கியுள்ள ஒரு சிரிப்பு நடிகர், தே.மு.தி.க. தலைவரை மட்டுமே தனிப்பட்ட முறையில் தரம் தாழ்ந்து பேசுவதை தி.மு.க. அனுமதித்து அதிலே மகிழ்ச்சியடைகிறது. இதற்கு சம போட்டியாக அ.தி.மு.க. தரப்பு மற்றொரு சிரிப்பு நடிகரை அதே தரத்தில் பேச களமிறக்கியுள்ளது. சங்கராச்சாரியைக் கைது செய்த ஜெயலலிதாவுக்கு "பிராமணர்கள்" ஓட்டுப் போடலாமா என்று திருவரங்கத்தில் தி.மு.க. பேச்சாளர் ஒருவர் கலைஞர் கருணாநிதி முன்னிலையிலேயே பேசியுள்ளார். கொலைக் குற்றமே செய்திருந்தாலும் காஞ்சி சங்கராச்சாரியைக் கைது செய்யக் கூடாது என்பது தான் தி.மு.க.வின் கருத்தா, என்பது நமக்குப் புரியவில்லை.

ஆணவத்தையும் அகம்பாவத்தையும் உறுதியின் வெளிப்பாடுகளாக நினைத்துக் கொண்டிருக்கும் ஜெயலலிதா, தி.மு.க. தரப்பை 'ரவுடிகள்' என்றும் 'தாதாக்கள்' என்றும் தரக்குறைவாக 'அர்ச்சித்து' வருகிறார்.

தே.மு.தி.க. தலைவர் விஜய்காந்த் ஏதோதோ உளறுகிறார்; இடதுசாரிகள் மட்டும் இவற்றுக்கு விதிவிலக்காக அரசியல் பேசுகிறார்கள் என்று கூறலாம்!

தி.மு.க. அணியை ஆதரித்து களம் இறங்கியுள்ள தி.க. தலைவர் கி. வீரமணியோ, பன்னாட்டு நிறுவனங்களை தமிழகத்தில் தொழில் தொடங்க அனுமதித்திருப்பது தான் தி.மு.க. 'சாதனை' என்கிறார். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தையும், வளத்தையும், உழைப்பு சக்தியையும் சுரண்டி, பார்ப்பன அதிகார வர்க்கத்தை கொழுக்க வைப்பதே, இந்த பன்னாட்டு நிறுவனங்கள் தான் என்ற அடிப்படையான பார்வைகூட அவரிடம் இல்லை. "தி.மு.க. ஆட்சியில் 57 ஆயிரம் கோடிக்கு மேல் வெளிநாட்டு முதலீடுகளுடன், தொழிற்சாலைகள் 5 ஆண்டுகளில் துவங்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் தடையில்லாமல் வழங்க வேண்டியுள்ளது. இதனால் தான் குறிப்பிட்ட அளவிற்கு அறிவிக்கப்பட்ட மின்தடை உள்ளது" என்று மக்களுக்கு எதிராக நோக்கியா, டாட்டா, அம்பானி நிறுவனங்களின் பிரதிநிதியாக நின்று பேசுகிறார், 'தமிழர் தலைவர்' என்று கூறிக் கொள்ளும் வீரமணி!

வாக்காளர்களுக்கு ஓட்டுக்காக பல்வேறு வழிகளில் பணம் கொண்டு போகப்படுவதும், பிடிபடுவதும் செய்திகளாக வருகின்றன. தலைவர்கள், அமைச்சர்கள் பாதுகாப்புக்காக உடன் செல்லும் காவல்துறை வாகனங்களில் பணம் கடத்தப்படுவதாக தேர்தல் ஆணையமே நீதிமன்றத்தில் மனுவாக தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன.

- பெரு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சாதகமான பொருளாதாரக் கொள்கைகள்.
- கிராமங்களில் தலைவிரித்தாடும் சாதி தீண்டாமை ஒடுக்கு முறைகள்.
- மனித உரிமைகளுக்கு எதிரான அடக்குமுறை சட்டங்கள்.
- ஈழத் தமிழர் பிரச்சினை.
- தமிழகத்தின் தொழில் வளர்ச்சி.
- தேசிய பாதுகாப்பு சட்டங்களை முறைகேடாகப் பயன்படுத்தி கருத்துரிமைகளை ஒடுக்குதல்.
- அழிந்து வரும் சிறு தொழில்கள்.
- வசதி படைத்தோருக்கும் வறுமையில் வாடும் மக்களுக்கும் இடையே அதிகரித்து வரும் இடைவெளி.
- மீனவர் மீது தொடரும் தாக்குதல்.
- அமைச்சர்களும், அரசியல் தலைவர்களும், 'தமிழர் தலைவர்களும்' நடத்தும் கல்வி வியாபாரங்கள்.
- பறிபோகும் நதி நீர் உரிமைகள்.

- இப்படி எத்தனையோ, அடிப்படைப் பிரச்சினைகள்-தேர்தல் களத்தில் மறைந்தே போய் விட்டன.

கிரைண்டர், மிக்சி, விசிறி, ஆடு - இவைகள் தான் தேர்தல் பிரச்னைகள். இவர் குடிக்கிறார்; அவர் அடிக்கிறார் என்பதையே தொலைக்காட்சிகள் - திருப்பி திருப்பி ஒளிபரப்புகின்றன.

மேற்கு வங்கம், அசாம், கேரள மாநிலங்களைவிட தமிழக தேர்தல் களம் தலைகுனிந்து கிடக்கிறது.

பெரியார் கூறுகிறார்: "பல கட்சிகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும் அவை எல்லாம் ஒரே கொள்கையும், ஒரே நோக்கமும் கொண்டவைகளாகவே இருக்கின்றன. மக்களை ஏய்க்கப் பல பெயர்களால் இருந்து வருகின்றன. அதாவது பொறுக்கித் தின்று வயிறு வளர்க்க வேண்டும்; பதவி வேட்டையாடிப் பெருவாழ்வு வாழ வேண்டும் – இவை இரண்டும் தான் கொள்கையும் நோக்கமுமாக இருந்து வருகின்றன. **அரசியல் சட்டத்தையோ – ஆட்சி முறையையோ** தவறு என்று சொல்ல அரசியல் பெயரால் கட்சியே இல்லாமல் போய் விட்டது."

– பெரியார் ('விடுதலை' 15.9.1957)

### மணிப்பூர் இராணுவ ஒடுக்குமுறையை சித்தரிக்கும் நாடகம்

*2.4.2011 சனிக் கிழமை அன்று மாலை 6.30 மணிக்கு சேலம் விசயராகவாச்சாரியார் அரங்கத்தில் பெரியார் திராவிடர் கழகம் மற்றும் சேலம் மக்கள் குழு சார்பாக* LE MASHALE *(தீ பந்தம் ஏந்திய பெண்) என்ற நாடகம் நடைபெற்றது. ஓஜோஸ் என்ற இளம்பெண் ஒருவர், இந் நிகழ்ச்சியை தனி ஒருவராக நிகழ்த்திக் காட்டினார். சிவிக் சந்திரன் என்பவர் மலையாளத்தில் நடத்திய இந்நிகழ்ச்சியை, ஓஜோஸ் ஆங்கிலத்தில் பல நகரங்களில் நடத்தி வருகிறார். ஆயுதப் படை சிறப்பு அதிகார சட்டத்தை திரும்பப் பெறக் கோரி சுமார் பத்து ஆண்டுகளாக உண்ணாநிலையிலிருந்து போராடும் கவிஞர் இரோம் சர்மிளா சானு என்பவரை கதாபாத்திரமாக்கி அவரது வரலாற்றை சித்தரிக்கும் நாடகம் இது. மணிப்பூரின் வரலாறு, மணிப்பூரில் தொடரும் அவலங்கள்,* AFSPA *(ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் 1958) சட்டத்தின் முறைகேடுகள் ஆகியவற்றை விளக்கும் இந்நாடகம் சுமார் 45 நிமிடம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி இந்நிகழ்வில் பார்வையாளராக கலந்து கொண்டார்.*

## ஜவகர்லால் நேரு பல்கலை பொதுக் கூட்டத்தில் வெளியான அதிர்ச்சித் தகவல்கள்

# ஈழத்தில் தமிழர்களின் கலாச்சார சின்னங்களை ராணுவம் அழிக்கிறது

*புது டில்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஈழப் பிரச்சினை தொடர்பான பொதுக் கூட்டம் கடந்த ஏப்.2 ஆம் தேதி நடை பெற்றது. 'ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழு' இந்த பொதுக் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்திருந்தது. பல்வேறு நாடுகளில் குறிப்பாக, கிழக்கு ஆசியாவில் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை உருவாக்கி, அவர்களின் நியாயமான உரிமைகளை மக்கள் மன்றத்தில் விவாதத்துக்குக் கொண்டு வரும் நோக்கத்தோடு, இந்த அமைப்பு கடந்த மார்ச் 2011 இல் உருவாக்கப்பட்டது.*

தொடக்கத்தில் - ஈழத்தில் - இந்திய ராணுவம் அமைதிப் படை என்ற பெயரில் நடத்திய படுகொலைகள் பாலியல் வன்முறைகளை விளக்கிடும் 39 பக்க ஆவணம் வெளியிடப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை பேராசிரியர் பிமோல் அகோய்ஜம் நூலை வெளியிட்டதோடு, கூட்டத்துக்கும் தலைமை தாங்கினார். ஆளும் அரசு 'பயங்கரவாதம்' என்ற சொல்லாடலை போராடும் தேசிய இனங்களுக்கு எதிராக வரையறுத்துள்ளதை சுட்டிக்காட்டிய அவர், "நேர்மையான அரசியல் பெற்றெடுத்த கள்ளக் குழந்தையே பயங்கரவாதம்" என்றார். உரிமைகளுக்கான அரசியல் இயக்கங்களை சட்ட விரோதமாக சித்தரிப்பதற்காக உருவாக்கப்பட்ட சொல்லாடலான 'பயங்கரவாத'த்தை சிறீலங்காவின் தேசிய இன அடக்குமுறைகளை நியாயப்படுத்த - இந்தியா, ஒரு கவசமாக பயன்படுத்திக் கொண்டது. சிறீலங்காவில் நடத்தி முடிதத இன "அழித் தொழிப்பு' முறையை நாகாலாந்திலும் நடத்து வோம் என்று நாகா விடுதலை இயக்கத்தை, இந்தியா மிரட்டிக் கொண்டிருக்கிறது.

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக கவுரவப் பேராசிரியர் எஸ்.சந்தோஷ் மற்றும் பல்கலைக் கழக முன்னாள் மாணவர் சாகிப் அகமது, இருவரும், அண்மையில் ஈழத்தில் தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணப் பகுதிக்கு நேரில் சென்று வந்திருந்தனர். யாழ்ப்பாணம் ஒரு திறந்த வெளி சிறைச் சாலையாகவே காட்சி அளிக்கிறது. மக்கள் ராணுவத்தின் பிடியில் கைதிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இராணுவம் - இராணுவ அதிகாரத்தை மிகக் கொடூரமாக வெளிப்படையாக மக்களுக்கு எதிராக பயன்படுத்தி வருகிறது என்று அவர்கள் கூறினர். இத்தகைய நெருக்கடியான சூழலில், 'அறிவு ஜீவிகளாக' வலம் வரும் சில குழுவினர், தங்களின் கடமைகளை கை கழுவி விட்டு, ராஜபக்சே, தமிழர்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்குவார் என்று அரசியல் ஆருடம் கணித்து கொண்டிருக்கிறார்கள்.

சிறீலங்கா அரசில் அரசுக்கு எதிரான மாற்றுக் கருத்துகளை வெளியிடுவதற்கான சுதந்திரம் முழுதாக மறுக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் கலாச்சார சுவடுகளையே அழிக்கும் திட்டமிட்ட முயற்சிகளில் சிறீலங்கா அரசு ஈடுபட்டுள்ளதை சுட்டிக் காட்டிய அவர்கள், வரலாற்று சிறப்பு மிக்க கட்டிடங்கள் தகர்க்கப்பட்டு, உள்ளூர் வரலாறுகள் புதைக்கப்பட்டு வருகின்றன என்றார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாக்கிய வரலாற்று சின்னங்களை அழித்து, அங்கே புத்தர் சிலைகளை அரசு நிறுவுவதை, மாணவர் சந்தோஷ், உதாரணங்களுடன் எடுத்துக் காட்டினார்.

சத்யா சிவராமன் என்ற பத்திரிகையாளர் பேசுகையில் - இலங்கைப் பிரச்னையில் இந்தியாவின் மோசமான தலையீடுகளை, இந்திய 'அறிவாளி வர்க்கம்' கண்டிக்காமல், மவுனப் பார்வையாளராக நின்றதை வன்மையாகக் கண்டித்தார். ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை நடத்திய ராணுவ அழித்தொழிப்பில் இந்தியா தரகராகவும், இராணுவத்துக்கு ஆலோசனைகளை வழங்கிய நிர்வாகியாகவும், ரகசியமாக உதவிகளைக் குவித்த நண்பனாகவும் செயல்பட்டது; உலகத்தின் கண் முன் - சமாதானக் காவலனாக நாடகமாடிக் கொண்டு, அதே நேரத்தில் தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தை தொடரச் செய்த இந்தியா, போர் நிறுத்தத்தைக் கொண்டு வரும் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்றார் சிவராமன். ஈழத் தமிழர் மீதான இனப் படுகொலைகளுக்கு சிறீலங்கா மட்டும் பொறுப்பல்ல; அதே பொறுப்பு இந்தியாவுக்கும் உண்டு என்று கூறிய அவர், இலங்கையில் இனப் படுகொலைக்குக் காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரும் இயக்கம், தொடங்கப்பட வேண்டும் என்றார். இது தொடர்பாக - இந்தியாவின் பங்கினை வெளிப் படுத்தும் வெள்ளை அறிக்கையை வெளியிடுமாறு இந்தியாவை நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும், அவர் வலியுறுத்தினார். "அண்டை நாட்டில், நடந்த இந்த இனப் படுகொலைகளைக் கண்டிக்காமல், அதை ஏற்றுக் கொண்டு விட்டால், அதே ஆபத்து, இந்தியாவிலும், நாளை திரும்பும் என்பதை மறந்து விட வேண்டாம்" என்று அவர் எச்சரித்தார். ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களோடு ஈழத் தமிழர்களுக்கான விடுதலை, குரலும் இணைந்து ஒலிக்க வேண்டும். அதற்கான இயக்கம் ஒன்றின் அவசியம் எழுந்துள்ளது" என்றார் சிவராமன்.

தொடர்ந்து வினா - விடை நிகழ்ச்சி நடந்தது. வடகிழக்கு மாநிலங்களைச் சார்ந்த மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தங்கள் மாநிலத்தின் ராணுவ ஒடுக்குமுறைகளைப் பகிர்ந்து கொண் டனர். ஈழப் போரில் இறுதி நாட்களில் இலங்கை இராணுவம் நடத்திய படுகொலைகளை சித்தரிக்கும் ஆவணப் படம் திரையிடப்பட்டது. சோமிதரன் என்பவர் இப்படத்தைத் தயாரித்து இருந்தார். அவரும் இந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்று மாணவர்களுடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். தமிழர்களுக்கு நீதியும், சுதந்திரமும் கிட்டாத வரை, ஈழத்தில் அமைதி திரும்பிவிட்டது என்பது வீண் பேச்சே என்று இந்தப் பொதுக் கூட்டம் உறுதியாக பிரகடனம் செய்தது.

**– நமது செய்தியாளர்.**

# இதோ, காங்கிரஸ் – தேர்தல் அறிக்கை

*தமிழ்நாட்டில் 'கதாநாயகர்', 'கதாநாயகி' களாக தேர்தல் அறிக்கைகள் வெளி வந்துள்ளன. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள இலவசப் பொருள் களின் பட்டியல்கள் வீதிதோறும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த இதழ் அச்சேறும் வரை தேர்தல் அறிக்கையை வெளி யிடாத ஒரே கட்சி காங்கிரஸ்தான். அக்கட்சிக்கு உதவிடும் நல்ல நோக்கத்தோடு, நாம் அவர் களுக்காக தயாரித்துள்ள தேர்தல் அறிக்கை இது.*

அன்னை சோனியாவின் தலைமையில் தமிழ்நாட்டில் காமராசர் ஆட்சியை அமைத்திடும் லட்சியத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் தமிழக வாக்காளர்கள் முன் பணிவுடன் இந்தத் தேர்தல் அறிக்கையை சமர்ப்பிக்கிறது. 63 தொகுதிகளிலே எங்கள் கட்சியின் வேட்பாளர்கள் நிறுத்தப்பட் டுள்ளார்கள். தமிழ்நாட்டிலே எங்கள் கட்சிக்குள் வெவ்வேறு தலைமையின் கீழ் இயங்கிவரும் வெவ்வேறு குழுக்களுக்கும் வேட்பாளர்களை பகிர்ந்தளித்துக் கொண்டு, சம உரிமையோடு போட்டியில் நிற்கிறோம். எங்களுக்குள் தேர்தல் முடியும் வரை எந்த சண்டை சச்சரவும் இருக்காது என்பதை, தமிழக வாக்காளர் பெருமக்களுக்கு உறுதியளிக்கிறோம். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரே சின்னத்தில் போட்டி யிடுவதிலிருந்தே எங்களின் உறுதியான ஒற்றுமையை தமிழ் கூறும் நல்லுலகம் புரிந்து கொள்ள வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

தி.மு.க.வுடன் நாங்கள் அமைத்துள்ள கூட்டணி, கொள்கை கூட்டணி என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறோம். தி.மு.க. ஆட்சியின் திட்டங்களுக்கு மத்திய அரசு தான் நிதி உதவி செய்து வருகிறது என்ற உண்மையை முதல்வர் கலைஞர், மக்களிடம் மறைக்கிறார் என்று, கடந்த காலங்களில் எங்கள் கட்சியைச் சார்ந்த ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் குற்றம்சாட்டிப் பேசியதை மக்கள் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம், ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன், குழந்தையாக இருந்தபோது முதல்வர் கலைஞர் மடியில் தவழ்ந்தவர் தான் என்ற வரலாற்று உண்மையை முதலமைச்சரே கூறியிருப்பதை நினைவூட்டுகிறோம்.

தமிழ்நாட்டில், விலைவாசி ஏற்றம், பெட்ரோல் விலை உயர்வு, மீனவர் மீது துப்பாக்கி சூடு, மின்சார வெட்டு போன்ற மக்கள் பிரச்சினைகளில் தமிழக காங்கிரஸ் அமைதியாக எந்த ஆர்ப்பாட்டமோ போராட்டமோ நடத்தாமல், கை கட்டி வாய் பொத்திக் கொண்டு, சட்டம் ஒழுங்குக்கு உட்பட்ட நல்ல குடிமகனாக செயல்பட்டதை தமிழக வாக்காளர்கள் மதித்து எங்களுக்கு வாக்களிக்க வேண்டும்.

எங்கள் கட்சிக்குள் அவ்வப்போது கொள்கைப் பிரச்சினைகள் வரும்போது அதை எங்கள் கட்சித் தலைமையிடமான சத்தியமூர்த்தி பவனுக்குள்ளேயே நாங்கள் செருப்படி, சட்டை கிழிப்பு, கொடும்பாவி எரிப்பு என்று அமைதி வழியில் போராடி வந்திருக்கிறோமே தவிர, பொது மக்களுக்கு எந்த இடையூறும் செய்தது இல்லை என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். தமிழ்நாட்டில் காமராசர் ஆட்சியை நாங்கள் அமைத்தே தீர வேண்டும் என்ற ஆவேசத்தினால், நாங்கள் அப்படி நடந்து கொள்கிறோமே தவிர வேறு எந்த காரணமும் இல்லை. எங்கே, காமராசருக்கு நூற்றாண்டு விழா, நடத்தக் கிளம்பி, அதன் காரணமாக, ஊருக்கு ஊர் கலவரம் வந்துவிடுமோ, என்ற பதட்டத்தின் காரணமாக, காமராசர் நூற்றாண்டு விழாக்களைக்கூட நடத்தாமல், நாங்கள் அடக்கமாக மக்கள் தொண்டாற்றியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் பொருளாதாரம் நன்றாக செழித்து வளர்ந்துள்ளது. இதற்கு உதாரணம் கூற வேண்டுமானால் அய்ந்து ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் கட்சி வேட்பாளர்கள், தி.மு.க. வேட்பாளாகள் அளித்த சொத்து கணக்கையும் இப்போது அளித்துள்ள சொத்துக் கணக்கையும் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். இந்த 'அபார' பொருளாதார வளர்ச்சிக்கு மத்தியில் மன்மோகன் சிங் தலைமையில் சோனியா வழிகாட்டுதலோ டு நாங்கள் நடத்தும் ஆட்சியின் சிறந்த பொருளாதார கொள்கைகள் தான் காரணம் என்பதை எவராலும் மறுக்கவே முடியாது.

பெட்ரோல், டீசல் விலை பற்றி தமிழ்நாட்டு வாக்காளர்களுக்கு சில விளக்கங்களை வழங்க வேண்டியது எங்களது கடமையாகிறது. பெட்ரோல் டீசல் விலையை அடிக்கடி உயர்த்துவதால்தான், அத்தியாவசியப் பொருள்களின் விலை உயருகிறது. அதனால் பணப் புழக்கம் அதிகரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கிறது. இந்த ஒரே ஒரு சாதனைக்காவது தமிழக வாக்காளர் பெரு மக்கள் எங்களை ஆதரிக்க வேண்டும்.

மக்களுக்கு கல்வித் தொண்டாற்ற விரும்பும் நாங்கள், அதற்காகவே பல சுயநிதி கல்வி நிறுவனங்களையும் நடத்தி வருவதை தமிழக வாக்காளர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மீண்டும் காமராசர் கால தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற லட்சியக் கனவில் நாங்கள் நடத்துவதுதான் இந்தக் கல்வி நிறுவனங்கள் ஆகும்.

பாபர் மசூதி பிரச்சினையிலும் சரி, ஈழத் தமிழர் பிரச்சினையிலும் சரி, அந்தப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை காங்கிரசுக்கே

(4 ஆம் பக்கம்)

## ‘ஆனந்த விகடன்’ படம் பிடிக்கிறது!

# இன்னும் தொடரும் இரட்டைக் குவளை கொடுமை!

*“வரலாற்றில் மகாத்மாக்கள் வருவார்கள் போவார்கள். ஆனால், எப்போதும் தீண்டப் படாதவர்கள், தீண்டப்படாதவர்களாகவே இருக்கிறார்கள்!” என்றார் பாபாசாகேப் அம்பேத்கர்.*

தமிழகத்தின் 103 கிராமங்களில் இன்றும் தீண்டாமைக் கொடுமை நிலவுவதாகச் சமீபத்தியப் புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கிறது. ஆனால், தமிழகத்தில் 12 மாவட்டங்களில் 213 பஞ்சாயத்துகளில் தீண்டாமைக் கொடுமை இருப்பதாகக் கள ஆய்வு தெரிவிக்கிறது. மதுரையில் இருந்து செயல்படும் ‘எவிடென்ஸ்’ அமைப்பு, தமிழகக் கிராமங்களில் இரட்டை தம்ளர் கொடுமை நிலவும் கிராமங்களைப் பட்டியல் இட்டு இருக்கிறது. இரட்டை தம்ளர் உடைப்புப் போராட்டம், திருச்சியில் உள்ள தீண்டாமை ஒழிப்பு அலுவலகத்தை இழுத்து மூடும் போராட்டம் ஆகியவற்றை நடத்தியிருக்கிறது, பெரியார் திராவிடர் கழகம். இந்தக் கழகம் வெளியிட்டு இருக்கும் தீண்டாமைக் கொடுமைகள் குறித்த பட்டியல்களும் அதிர்ச்சி அளிப்பவை. உதாரணத்துக்குச் சில....

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திலுள்ள ஊர் வெரியப்பூர். இங்குள்ள தபால் அலுவலகத்தில் உள்ள தபால்காரர் தலித் என்பதால், அவர் தரையில் அமர்ந்துதான் பணி புரிய வேண்டுமாம். இந்த ஊர், அமைச்சர் தங்கம் தென்னரசு மணம் முடித்து இருக்கும் ஊர். மேலும், சென்னை டிராஃபிக் கூடுதல் ஆணையர் ரவியின் சொந்த ஊர். அதே ஒன்றியத்தில் குப்பாயிவலசு என்ற ஊரில் தாழ்த்தப்பட்டவர்கள் சைக்கிளில் செல்ல அனுமதிக்கப்படுவது இல்லை. திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 24 பஞ்சாயத்துகளில், 14 பஞ்சாயத்துகளில் நிலவும் இரட்டைக் குவளை முறை,அனைத்துப் பஞ்சாயத்துகளிலும் 99 சதவிகித வழிபாட்டுத் தலங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அர்ச்சனை மறுப்பு ஆகியவற்றை ஆவணப்படுத்தி இருக்கிறது ‘எவிடென்ஸ்’ அமைப்பின் அறிக்கை. ‘2010-2011 ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்துக்கு தமிழக அரசு ஒதுக்கிய தொகை 49,80,000 ரூபாய் மட்டுமே. இதை வைத்து ஐந்து வீடுகள்கூடக் கட்ட முடியாது. நாடு முழுவதும் புரையோடி உள்ள தீண்டாமைப் பாகுபாடுகளை ஒழிக்க இந்தப் பணம் எந்த வகையில் போதுமானதாக இருக்கும்?’ என்பது அந்த அறிக்கையின் முத்தாய்ப்புக் கேள்வி.

“நமது கடவுள், சாதி காப்பாற்றும் கடவுள். நமது மதம், சாதி காப்பாற்றும் மதம். நமது அரசாங்கம், சாதி காப்பாற்றும் அரசாங்கம்!” என்றார் பெரியார். பெரியார் வழி வந்ததாகச் சொல்லிக் கொள்பவர்கள், எதைப் பின்பற்றுகிறார்களோ இல்லையோ... பெரியாரின் மேற்கண்ட வார்த்தைகளைப் பின்பற்றத் தயங்குவது இல்லை. நாமக்கல் மாவட்டம் வீசாணம் கிராமத்தில் மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனி சுடுகாடும் மற்றவர்களுக்குத் தனி சுடுகாடுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. “தமிழகம் முழுவதும் தீண்டாமை நீக்கமற நிறைந்துள்ளது. அதற்கு ஒரு சான்றுதான் திண்டுக்கல் மாவட்டம்!” என்கிறார் பெரியார் திராவிடர் கழகத்தின் தலைமை செயற்குழு உறுப்பினர் பெரியார் நம்பி. “அம்பிளிக்கை தபால் அலுவலகத்தில் லூர்துராஜ் என்ற தபால்காரர் இறந்து போனதால், கருணை அடிப்படையில் அவருடைய மகள் ரீட்டாவுக்கு வேலை கிடைத்தது. ஆனால், ரீட்டா ஒரு தலித் பெண் என்பதால், அவர் கையால் யாரும் தபால் களை வாங்க மாட்டார்கள் என்று, அம்பிளிக்கை ஊராட்சித் தலைவர் ராமசாமியே ஆதிக்க சாதிக்காரர்களுக்குத் தபால் பட்டுவாடா செய்கிறார். ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்தவர் மகாமுனி. அவர் ஒரு தலித். அதே காவல் நிலையத்தில் ஏட்டாகப் பணி புரிந்தவர் பெருமாள். அவர் ஆதிக்கசாதியைச் சேர்ந்தவர். மகாமுனி தனக்கு துணைக் கருவூலத்தில் பணி போட்டதற்காக ஒட்டன்சத்திரம் பஸ் ஸ்டாண்டில் ஏட்டு பெருமாள், மகாமுனியை அடித்து உதைத்தார். இப்போது மகாமுனி, பணி ஓய்வு பெற்று விட்டார். அரசு அலுவலகங்களும்கூட எந்த அளவுக்குச் சாதியைக் காப்பாற்றுகின்றன என்பதற்கு உதாரணங்கள் தான் மேற்கண்ட சம்பவங்கள்!” என்கிறார் பெரியார் நம்பி.

கே.கீரனூர் வடக்குத் தெருவைச் சேர்ந்த ராமலிங்கத்தின் சோகம், நாம் சினிமாக்களில்கூடப் பார்த்திராதது. “ஆறு மாசத்துக்கு முந்தி எங்க தெருவுலதெரு விளக்கு எரிய மாட்டேங்குதுன்னு சொல்லி, கரண்ட் வேலை பாக்குற பையன்கிட்ட சொன்னேனுங்க. அதுக்கு அந்தப் பையன், ‘எங்கிட்ட சொல்லி என்ன பிரயோஜனம். ஊர் தலைவருட்ட சொல்லுங்க’ன்னு சொன்னாருங்க. அதனால ஊர் தலைவர் நாட்டுத்துரை கிட்ட சொன்னேனுங்க. மூணு மாசம், நாலு மாசம் ஆச்சுங்க. ஆனா, லைட் எரியலைங்க. திருப்பியும் நாட்டுத்துரை ‘பண்ணாடி’ கிட்ட சொன்னேனுங்க. அதுக்கு அவரு, ‘நீ சொன்ன உடனே போடோணுமாக்கு’னு சொல்லிக்கிட்டே என்னை அடிச்சுப்புட்டாருங்க. மறுநாள் காலைல ஊர்த்தலைவர் மகன் அருண்குமார், அரப்பு வேலுச்சாமி, மடக்காட்டுத் துரை, சண்முக சுந்தரம், ஆனந்த்னு சில ஆளுங்க வந்து ‘அப்பாவை எதிர்த்துப் பேசுற துணிச்சல் உனக்கு எப்படிடா வந்தது’ன்னு சொல்லிக்கிட்டே, என்னை அடிச்சுட்டு, என் சின்னக் குழந்தையையும் மனைவியையும் வீட்டுக்கு வெளியில இழுத்துப்போட்டு அடிச்சுப் போட்டாங்க. ரெண்டு வருஷக் குழந்தைங்க அது. அது என்ன பாவம் பண்ணியிருக்கும்? அதையும் வீசி எறிஞ்சாங்க. உள்ளூர்த் தலைவரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாத ஆட்கள், எங்களை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போகக்கூட முன் வரலை. அம்பிளிக்கைல இருந்து டாக்சி வரவெச்சு அதுல நாங்களா ஒட்டன் சத்திரம் ஆஸ்பத்திரிக்குப் போனோமுங்க. அங்கேயும் எஃப்ஐ.ஆர். போடவிடாமத் தடுத்தாங்க. அங்கே மருத்துவம் பாக்க முடியாததால திருப்பூர் மாவட்ட பெரியாஸ்பத்திரிக்குப் போயி சிகிச்சை எடுத்தோமுங்க. இப்போ உடம்பு சரியான பிறவு, எங்க ஊர்ல இருந்து திருப்பூர் மாவட்டத்துல இருக்குற தோட்டத்துக்குத் தினமும் வந்து விவசாய வேலை செஞ்சு பிழைப்பு நடத்துறேனுங்க” என்கிறார் ராமலிங்கம்.

அம்பிளிக்கை, லக்கையன்கோட்டை, சிந்தலப்பட்டி, ஓடைப்பட்டி ஆகிய கிராமங்களில் வலம் வந்தோம். ஓடைப்பட்டி கிராமத்தின் கலையரங்கத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழையக் கூடாது என்பது கட்டுப்பாடு. அவர்களின் குழந்தைகள் விளையாடுவதற்குக்கூட உள்ளே நுழையக் கூடாது என்பதற்காக கலையரங்கத்துக்கு வெளியே ‘கிரில்’ கம்பிகளை வைத்துத் தடுப்பு அமைத்திருக்கிறார்கள். ஓடைப் பட்டி பேருந்து நிறுத்தத்தில் தாழ்த்தப்பட்ட முதியவர் ஒருவர், கொதிக்கும் வெயிலில் கருங்கல்லிலும், ஆதிக்கசாதிச் சிறுவன் பேருந்து நிறுத்த சிமெண்ட் திண்ணையிலும் அமர்ந்திருந்தார்கள். அப்படித்தான் அங்கு பழக்கமாம்.

இன்னமும் ஆதிக்க சாதியைச் சேர்ந்த சிறுவர்கள் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் ‘பண்ணாடி’ என்றுதான் அழைக்கிறார்கள். இங்கே இருக்கும் ஓட்டல்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரையில் இலை போட்டுத் தான் பரிமாறப்படும். நாம் சென்ற அனைத்துக் கிராமங்களிலும் டீக் கடைகளில் இரட்டைக் குவளை முறைதான் வழக்கத்தில் இருக்கிறது. சில புத்திசாலி டீக் கடைக்காரர்கள், இரட்டை தம்ளர் இருந்தால் மாட்டிக் கொள்வோம் என்பதற்காக ‘யூஸ் அண்ட் த்ரோ’ கப்புகளைப் பயன்படுத்துகிறார்கள். பெரமியம் என்ற கிராமத்தில் டீக் கடைக்குள்ளேயே மற்ற சாதிக்காரர்கள் பெஞ்சிலும், தலித் மக்கள் தரையிலும் அமர்ந்து இருந்தார்கள்.

“சமயங்களில், பொது சுடுகாடுகளில் தங்கள் உறவினர்களின் பிணங்களை எரிக்கவோ, புதைக்கவோ அனுமதி மறுக்கும்போது, தலித் மக்கள் சாலை ஓரத்திலேயே இறுதிச் சடங்குகளை முடிக்கும் அவலமும் திண்டுக்கல் மாவட்டத்தில் உண்டு. இத்தகைய கொடுமைகளைச் சுட்டிக் காட்டி காவல் துறையை அணுகும்போது, அமைதியா இருக்கிற ஊர்ல சாதிக் கலவரத்தை ஏற்படுத்தாதீங்க’ என்று ‘அறிவுறுத்தும்’ கொடுமையும் நடக்கும்.

தீண்டாமையைக் கடைப்பிடித்தால், கடுமையான தண்டனைகள் என்று அரசியல் சட்டத்திலும் “தீண்டாமை ஒரு மனிதத் தன்மையற்ற செயல்’ என்கிற வாக்கியம் பாடப் புத்தகங்களிலும் இருப்பதைத் தவிர, தீண்டாமை ஒழிப்பில் வேறு எந்த முன்னேற்றமும் இல்லை!” என்று விரக்தி தொனிக்கச் சொல்கிறார் திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி.

எங்கேயோ, எப்போதோ, வெண்மணியிலோ, உத்தப்புரத்திலோ... பாப்பாபட்டி, கீரிப்பட்டியிலோ தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தீண்டாமை திணிக்கப்படும்போது மட்டும்தான் அது ‘செய்தி’ ஆகிறது. உண்மையில், தமிழகத்தின் பல கிராமங்களில் இன்னும் தீண்டாமை என்னும் நச்சுக் குப்பி எவர் வாயிலாவது வலிந்து புகட்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

தமிழகம் முழுவதும் பெரியார் நினைவு சமத்துவ புரங்களை அமைத்து, ‘நானும் தலித் சம்பந்திதான். எங்கள் குடும்பமே சமத்துவபுரம்!’ என்று கருணாநிதி பெருமைப்பட்டுக் கொள்கிறார். ஜெயலலிதாவோ மற்ற கட்சித் தலைவர்களோ அவ்வப்போது தங்களைத் தலித் மக்களின் காவலனாகக் காட்டிக் கொள்ளவும் தயங்குவது இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை உறுதி செய்வதற்காக அரசியல் களத்துக்கு வந்த தலித் தலைவர்களோ, பெரிய கட்சிகளிடம் சில பல சீட்டுகளைப் பெறுவதையே ‘உரிமைப் போராட்டமாக’ எண்ணி முடங்கி விடுகின்றனர். தலித் மக்கள் மீதான வன்கொடுமைகளும் டீக்கடையில் இளிக்கும் இந்திய ஜனநாயகத்தின் எச்சில் இரட்டைக் குவளைகளும் முகத்தில் உமிழ்ந்து நமக்கு உணர்த்தும் உண்மை.... ‘ஊருக்கு வெளியே சமத்துவபுரங்களைக் கட்டுவதால், சமத்துவம் வந்து விடாது. தலித் மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றி, மற்ற சாதியினரின் உரிமைகள் அவர்களுக்கும் கிடைத்து, கிராமங்களே சமத்துவபுரங்களாக மாறினால் மட்டுமே... அது சமத்துவம்!”

**நன்றி: ‘ஆனந்த விகடன்’ 30.3.2011**

---

### கரூர் பூ.அர. குப்புசாமி முதலாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்

14.2.2011 திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு கரூர் உழவர் சந்தை அருகிலுள்ள காவேரியம்மாள் திருமண மண்டபத்தில் மறைந்த பெரியார் பெருந் தொண்டர் பூ.அர.குப்புசாமி முதலாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது. கரூர் மாவட்ட தமிழர் முன்னணி சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்திற்கு தமிழர் முன்னணி செயலாளர் ச.சு. தமிழ்ச் சேரன் தலைமையேற்றார். தமிழர் முன்னணி இரா. அதியமான் வரவேற்புரையாற்றினார். ஆதித் தமிழர் பேரவை வீரமுருகு, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை த. கார் வேந்தன், கழக மாவட்டத் தலைவர் கு.கி.தனபால், சமூக வரலாற்று சங்கம் இல. பரணன், தமிழர் பண்பாட்டு கழகம் ம. காமராசு, ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் கே.மணி, கரூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் க. நாச்சிமுத்து ஆகியோரது உரைகளை தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

### துவக்கப்பள்ளியில் பெரியார் பிறந்த நாள்

17.9.2010 அன்று பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் 132 ஆவது பிறந்த நாள் விழா ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி குட்டியாக்க அண்டனூரில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்விற்கு ஊராட்சித் தலைவர் வீரப்பன் தலைமையேற்று அய்யா படத்திற்கு மாலை அணிவித்தார். விழாவில் பள்ளி ஆசிரியர்கள், குழந்தைகள், பெற்றோர்கள், ஊர் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். விழாவிற்கு வந்தோரை பள்ளி தலைமையாசிரியர் சோமசுந்தரம் (பெரியார் பகுத்தறிவாளர் கழகம்) வரவேற்று நன்றி கூறினார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பட்டுக்கோட்டை அழகிரி 111வது பிறந்தநாள் பொதுக் கூட்டம்



வடசென்னையிலுள்ள பெரவள்ளூர் சதுக்கம் காமராசர் சிலை அருகில் 19.3.2011 அன்று அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி 111 ஆவது பிறந்த நாள் பொதுக் கூட்டம் வடசென்னை கழக சார்பில் மாவட்ட தலைவர் எ.கேசவன் தலைமையில் நடந்தது. மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு, துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் சிறப்புரையாற்றினர்.

**வந்த கடிதம்**

## தந்தை பெரியாரின் கொள்கை இதுதானா?

தமிழர் தலைவர் என்று சொல்லிக் கொள்ளும் கி. வீரமணி அவர்களே! தேர்தலுக்கு வாக்கு சேகரிக்க பட்டியலிட்டு வரும் வீரமணி அவர்களே! தமிழகத்தில் நிகழ்ந்து வரும் தீண்டாமை, சாதி இழிவுகள், இரட்டைக் குவளை முறை, சுடுகாடுகளில் தீண்டாமை சுவர், அரசு அலுவலகங்களில் ஆயுத பூசை, அலுவலகங்களில் மத உணர்வுகளை வெளிப்படுத்தும் கடவுளர்கள் படம், இத் தீண்டாமை செயல்பாடுகளை ஒழிப்பதற்கு எப்போது பட்டியல் போடுவீர்கள்? பெரியார் பணி முடிந்து விட்டதா? அரசியல் களம் இறங்குகிறீர்கள். 'விடுதலை' பத்திரிகையையே அரசியல் களமாக மாற்றி வீட்டீர்களே! பெரியாரின் செயல்பாடுகள் எதுவும் நினைவிற்கு எட்டவில்லையா?

**ஜெ.பழனி முருகன், அம்மாபாளையம், பெரம்பலூர் மாவட்டம்.**

## நன்கொடை

கோபி, அளுக்குளி தோழர் விசயசங்கர் - நித்யா ஆகியோர் திருமண விழா, மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் 23.3.2011 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.2000/- வழங்கப்பட்டது.

பவானி, புதுக்காடு அன்பரசு - பொள்ளேகால் மஞ்சாபுரம் ரேவதி ஆகியோர் இணையேற்பு விழா, அந்தியூர் கே.கே.எம். திருமண மண்டபத்தில் 28.3.2011 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கினர்.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் பகுதி தோழர்கள் மாதுராஜ் - சரசுவதி ஆகியோரின் 16 ஆம் ஆண்டு திருமண நாளை முன்னிட்டு ரூ.150, புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆர்)

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு என்று மார்தட்டி கூற முடியும்! பாபர் மசூதியை - சங் பரிவாரங்கள் இடித்தபோது, அதைத் தடுக்காமல் அப்படியே இடிக்க விட்டதால்தான் இப்போது அப்பிரச்சினைக்கே 'தீர்வு' கிடைத்தது. அதேபோல், ஈழத் தமிழர் பிரச்சினை எத்தனை காலம் தான் நீடிப்பது என்று 'கவலைப்பட்ட' அன்னை சோனியா, அதற்கு அருமையான திட்டம் தீட்டி செயல்பட்டார். பாபர் மசூதியை ரைமட்டமாக்கியதுபோல், ஈழத் தமிழர்களையும் போராளிகளையும் முழுமையாக 'சமாதி' கட்டி பிரச்சினையை சுமூகமான தீர்வுக்குக் கொண்டு வந்துள்ளோம். வாக்குச் சாவடிக்கு செல்லுவதற்கு முன் ஒவ்வொரு தமிழரும், இந்த சதனையை நெஞ்சில் நிறுத்த வேண்டும் என்று தமிழன் என்ற உணர்வோடு கேட்டுக் கொள்கிறோம்.

இலவச அறிவிப்புகள் வெளியிடப்படாவிட்டால், இதை தேர்தல் அறிக்கையாக மக்கள் மதிக்க மாட்டார்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும், கூடுதலாக, புதிதாக அறிவிக்க இலவசம் எதுவும் எங்களுக்கு தெரியவில்லை. எல்லா இலவசங்களும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டதால், நாங்கள், அறிவிக்கப்பட்ட 'இலவசங்களை' எல்லாம் இலவசமாக வாங்கித் தருவோம் என்ற உறுதியைத் தருகிறோம்.

காங்கிரஸ் வேட்பாளருக்கு நீங்கள் அளிக்கும் வாக்கு விலை மதிப்பற்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று தி.மு.க. அணியில் நிற்கும் நாங்கள், நாளைக்கு எந்த அணியில் நிற்போம் என்பதற்கு உறுதி கூற முடியாது. தேவைப்பட்டால் அணிகளை மாற்றி, மக்களுக்கும் தேசத்துக்கும் தொண்டாற்ற தயாராகவே இருப்போம். எனவே எங்களுக்கு அளிக்கும் வாக்கு எல்லா அணிகளுக்கும் பொதுவான வாக்கு என்பதை மறந்து விடாதீர்கள்!

நாங்கள் செய்துள்ள தியாகங்கள் மகத்தானவைகளாகும். கொள்கை, தன்மானம், நேர்மை, தமிழின உணர்வு, மக்கள் தொண்டு போன்ற வாழ்க்கைக்கு தேவையற்ற அர்த்தமற்ற பண்புகளை தியாகம் செய்துவிட்டு, உங்கள் வீடு தேடி, கைகால்கள் உள்ள னிதர்களாக வாக்குக் கேட்டு வரும் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்; ஜெய்ஹிந்த்!

**– கோடங்குடி மாரிமுத்து**

### சென்னையில் நூல் வெளியீட்டு விழா

# தமிழிசைக்கு பெரியார் இயக்கத்தின் பங்களிப்பு

தமிழர் இசை மற்றும் கலையில், பிற பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து பெரியார் இயக்கம் போராடிய வரலாற்றை மறைத்து, பெரியாரை தமிழுக்கு எதிரானவராக சிலர் எழுதியும் பேசியும் வருகிறார்கள். இது குறித்து 1943 - 44 'குடிஅரசு' ஏட்டில் வெளிவந்த செய்திகள், பெரியார் மற்றும் தமிழ்ச் சான்றோர்களின் கட்டுரைகளைத் தொகுத்து "கலை எனப்படுவது இனக் கொலை என்றால்..." எனும் தலைப்பில் 'சாளரம்' பதிப்பகம் 304 பக்கங்களில் நூலாக வெளியிட்டுள்ளது. தோழர் எஸ்.வி. ராஜதுரை, இந்த நூலைத் தொகுத்து, ஒரு நீண்ட முன்னுரையையும் எழுதியுள்ளார். இந்நூலின் வெளியீட்டு நிகழ்ச்சி 31.3.2011 அன்று மாலை சென்னை 'இக்சா' மய்யத்தில் நிகழ்ந்தது. இரா. எட்வின் தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூலை வெளியிட, திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு நூலைப் பெற்றுக் கொண்டார். இவர்களோடு எழுத்தாளர் பாமரன், எஸ்.வி. இராசதுரை ஆகியோரும், நூலின் உள்ளடக்கம் பற்றி, விரிவாகப் பேசினர். முத்து வேல் நன்றி கூறினார்.




தோழர் எஸ்.வி. இராஜதுரை எழுதிய முன்னுரையில் நிறைவாக குறிப்பிட்டுள்ள கருத்து:


"கல்வி, பாட நூல்கள், பண்டைத் தமிழ் இலக்கியம், தனித் தமிழ் இயக்கம், வடமொழி ஆதிக்க எதிர்ப்பு, பண்டைத் தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்தல், கல்விக் கூடங்களில் சாதிப் பாகுபாடு, தமிழர்களின் இழிநிலைக்குக் காரணமாக உள்ள சாத்திரங்கள், நம்பிக்கைகள் ஆகிய பல்வேறு விடயங்களில் கவனஞ் செலுத்தியும் தக்கத் திறனாய்வுகள் செய்தும் பிற தமிழறிஞர்களும் தமிழ்த் தேசியர்களும் காண விரும்பிய 'தமிழ'ருக்கு முற்றிலும் மாறான சுயமரியாதை திராவிட 'தமிழரை' உருவாக்க முனைந்தார் பெரியார். அவராலோ, 'திராவிடர்' என்னும் குறிப்புச் சொல்லாலோ தமிழரின் அடையாளம் மறைக்கப் படவில்லை; மாறாக, அந்த அடையாளம் துலங்கப் பெற்றது. தமிழ் மக்களால் தமிழர் தலைவராக ஏற்கப்பட்டு வந்த ஒரே தலைவராக இருநதவர் பெரியார் தான் என்பதற்குச் சான்று பகரும் கட்டுரைகள் இங்குள்ளன. தமிழர்களை இழிவுபடுத்தும் 'வருஷப் பிறப்பு' கதைகளைப் பெரியார் 1944 இல் எடுத்துச் சொன்னார். ஐம்பத் தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகே, தமிழ்ப் புத்தாண்டு தைத் திங்கள் முதல் நாள் பிறப்பதாக அரசாங்கம் அறி விக்கும் நிலை ஏற்பட்டது. 'சூத்திரன்', 'பறையன்' பட்டங்கள் நீங்கப் பெற்ற தமிழரைக் காண்பதுதான் பெரியாரின் கனவாக இருந்ததேயன்றி புற நானூற்றுத் தமிழரையோ, சிலப்பதிகாரத் தமிழரையோ, இராஜராஜன் காலத்துத் தமிழரையோ அல்ல".

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 7th April 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஏப்ரல் 14, 2011 | புரட்சி 10 | முழக்கம் 13 | விலை: ரூ.2.50


## தமிழக சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை

# மனித நேயத்துடன் விடுதலை செய்வீர்!

## அமையவிருக்கும் புதிய ஆட்சிக்கு நாடு கடந்த தமிழீழ அரசின் முதன்மை அமைச்சர் உருக்கமான வேண்டுகோள்

*தமிழ்நாட்டில் அமையவிருக்கும் புதிய ஆட்சி, தமிழ் ஈழத்தை அங்கீகரித்து சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரவேண்டும். தமிழக சிறப்பு முகாமிலும் வேறு மாநில சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசு சார்பில் அதன் முதன்மை அமைச்சர் உருத்திரகுமாரன் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து:*


நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் உங்கள் அனைவருக்கும் எமது வணக்கங்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தமிழகத்தில் தேர்தல் காலம். தமிழகத்தை, தமிழக மக்களை யார் ஆளுகை செய்வது என்பதனை தமிழக மக்கள் தீர்மானிக்கும் நேரம். இந் நேரத்தில் உங்கள் தொப்புள்கொடி உறவுகளாக வாழும் ஈழத் தமிழ் மக்களாகிய நாங்கள் எமது இன்றைய நிலையினை உங்களின் கவனத்துக்கு எடுத்து வரவே இம் மடலை வரைகின்றோம். 'தானாட மறந்தாலும் தசையாட மறக்காது' என்பார்கள். உங்களைத்தவிர நமது மக்களின் சோகத்தையும் அவலத்தையும் நாம் யார்க்கெடுத்துரைப்போம்?

இன்று ஈழத்தமிழ் மண் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பகுதியாகவே உள்ளது. அது இராணுவத்தினருக்குப் போகபூமியாகவும் தமிழ் மக்களுக்கு நரக பூமியாகவுமே காட்சியளிக்கிறது. இராணுவத்தினர், கடற்படையினர், காவற்துறையினர், துணைப்படையினர் எனத் தமிழ் மண்ணில் நிலை கொண்டுள்ள ஆயுதப்படையினரின் தொகையை மொத்தத் தமிழ் குடும்பங்களின் தொகையால் வகுத்தால் ஒரு குடும்பத்துக்கு ஒரு ஆயுதப்படையினன் என்ற வீதத்தில் ஈழத் தமிழ்மண் மொத்த இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்ற உண்மை பச்சையாகப் புலப்படும். எந்நேரத்திலும் இராணுவத்தால் மக்கள் இம்சைப்படுத்தக்கூடியவகையிலான இராணுவ ஆட்சியே அங்கு நிலவுகிறது. இன்னும் சில வருடங்கள் தாமதித்தால் இலங்கைத்தீவில் முழுத் தமிழ் மண்ணும் சிங்களமயப்பட்டுவிடும் ஆபத்து துல்லியமாக உள்ளது. அவ்வாறு ஈழத் தமிழ் மண் சிங்கள மயமாகி விட்டால் இலங்கைத்தீவு முழுமையாக தமிழக, இந்திய எதிரி நாடுகளின் கொல்லைப்புறமாக மாறிவிடும் ஆபத்தும் அதேயளவு துல்லியமானதாக உள்ளது.

உலகில் ஒரு மக்கள் கூட்டம் சுதந்திரமாக வாழ்வதா அல்லது அடிமைகளாக வாழ்வதா என்பதை உள்நாட்டு நிலைமைகள் மட்டும் தீர்மானிப்பதில்லை. உலக அரசுகள் அதுவும் சக்தி மிக்க அரசுகள் ஒரு பிரச்சினையில் எடுக்கும் முடிவுகள் ஒரு மக்கள் கூட்டத்தின் எதிர்காலத்தை தீர்மானித்து விடுகின்றன. ஈழத் தமிழ் மக்களாகிய நாம் இன்று சிங்களத்திடம் தோல்வியடைந்து சிறுமைப்படுவதற்கும் உலக அரசுகள் எடுத்த முடிவுகளே முக்கிய காரணம். இது ஈழத் தமிழ் மக்களின் தோல்வி மட்டுமல்ல தமிழக மக்களின் தோல்வியும்கூடத்தான் என்பதனையும் உங்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.

இதனால் இந்நிலையினை மாற்றியமைத்து இந்தியா உட்பட உலக அரசுகளின் ஆதரவினை நமது பக்கம்



வென்றெடுப்பதனைத் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் அடுத்த கட்டத்தில் முக்கியமானது என நாம் கருதுகிறோம். அதேவேளை சுயநலன்கள் என்ற அச்சில் சுழலும் இன்றைய உலக ஒழுங்கில் நியாய தர்மங்களை விட உலக அரசுகளின் நலன்களே வரலாற்றுச் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டிருக்கின்றன என்பதனையும் நாம் நன்கு அறிவோம்.

உலக அரசுகளை நம் பக்கம் வென்றெடுப்பதற்கு தமிழக மக்களின் முதன்மைப் பாத்திரம் இன்றியமையாதது என்பதனை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். இதேவேளை உள்நாட்டு நிலைமைகள் ஒரு அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை என்பதனையும் நாம் கவனத்திற் கொண்டுள்ளோம்.

இத்தகைய ஒரு சூழலில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் தமிழகத்துக்கு மிக முக்கிமான பங்கு உண்டு. ஈழத் தமிழர் தேசத்தை விழுங்கி விடத் துடிக்கும் சிங்கள இனவாதப்பூதத்திடம் இருந்து நமது மக்களைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பும் தமிழக மக்களிடத்தில், தமிழக அரசியத் தலைவர்களிடம் உள்ளது என்பதனையும் தங்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

சுதந்திரத் தமிழீழம் என்ற தனியரசு இலங்கைத்தீவில் அமைக்கப்படுவதே ஈழத் தமிழ், தமிழக, மற்றும் இந்திய மக்களது நலன்களை ஒரே நேர்கோட்டில் சந்திக்க வைக்கக்கூடியது என்பதனையும் உறுதியாக வெளிப்படுத்த விரும்புகிறோம்.

இத்தகையதொரு வரலாற்றுச் சூழலில், இன்றைய தேர்தல் காலத்தில் நாம் சில வேண்டுதல்களை முன் வைக்கிறோம். எம்மால் முன்வைக்கப்பட்டிருக்கும் பின்வரும் கோரிக்கைகளுக்கு தமிழகக் கட்சிகளும் மக்களும் ஆதரவு வழங்க வேண்டுமென மனதார வேண்டிக் கொள்கிறோம்.

1. ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழீழத் தனியரசே தீர்வாக அமைய முடியும் என்பதனை வலியுறுத்தியும் தமிழீழத் தனியரசினை அங்கீகரித்தும் தற்போதைய தேர்தலில் தெரிவு செய்யப்படும் தமிழக சட்டசபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றச் செய்தல்.
2. சுதந்திரத் தமிழீழ அரசினை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழக மக்களின் சார்பில் இந்திய அரசிடம் முன்வைத்து அதனை வென்றெடுப்பதற்காகச் செயற்படல்.
3. தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ள ஈழத் தமிழ் மக்களின் கௌரவமானதும் பாதுகாப்பானதுமான வாழ்வு உறுதிப்படுத்தப்படுவதுடன் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ள திபெத் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் ஈழத் தமிழ் மக்களுக்கும் வழங்கப்படுவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
4. தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபடுத்தி தமிழக மற்றும் இந்தியச் சிறைக்கூடங்களிலும் சிறப்பு முகாம்களிலும் தடுத்து வைத்திருக்கப்படும் தமிழர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கு மாநில, மத்திய அரசுகளைத் தூண்டுதல்.
5. போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் மக்களின் வாழ்க்கை மீளக்கட்டியெழுப்பப்படுவதற்குத் தேவையான உதவிகள் மக்களை நேரடியாகச் சென்றடைவதற்கான ஏற்பாடுகளை இந்திய அரசின் ஊடாகவும் மற்றும் ஏனைய அனைத்துலக நிறுவனங்கள் ஊடாகவும் முன்னெடுத்தல்.

துயர் தோய்ந்த எமது ஈழத் தமிழர் பிரச்சினையினை தேர்தற்களத்தில் முதன்மைப்படுத்துவதன் மூலம் ஈழத் தமிழர்களின் பாதுகாப்பான கௌரவமான வாழ்வுக்கு தோள் கொடுப்பீர்கள் என்ற மேலான நம்பிக்கையுடன் தங்களின் மேலான கவனத்துக்கு இதனைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

### சாதியை ஒழிக்காமல்...

*இந்தியாவில் வெளிப்படையாக மேலோங்கி நிற்கிற சமூகப் பிரச்சினை, எந்த ஒரு சோசலிஸ்டும் சந்திக்க வேண்டிய ஒரு பிரச்சனை. இந்தப் பிரச்சனையைக் கவனிக்காமல் புரட்சியை வென்றடைய முடியாது. நல்வாய்ப்பால், புரட்சி நடந்து விட்டாலும்கூட, தன் குறிக்கோளை அடைய ஒரு சோசலிஸ்டு, சாதிப் பிரச்சனையோடு மல்லுக்கு நிற்க வேண்டி இருக்கும். இது என் ஆணித்தரமான கருத்து புரட்சிக்கு முன்னால் சாதிப் பிரச்சனையைக் கையாள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியே தீருவார்கள். அதாவது, நீங்கள் எந்தத் திசையில் சென்றாலும் – சாதிக் கொடூரன் வந்து வழி மறிப்பான். இந்த சாதிக் கொடூரனை ஒழிக்காமல், அரசியல் சீர்திருத்தத்தையோ, பொருளாதார சீர்திருத்தத்தையோ அடையவே முடியாது.*



– அம்பேத்கர்

**தலையங்கம்**

## ஒழியுமா இலஞ்சம்?

‘பிரதமர், உயர் அதிகாரிகள் மீதும் ஊழல் புகார் வந்தால், அதை நீதிமன்றம் விசாரிக்கலாம்; தண்டனை தரலாம்; இதற்காக முழுமையான அதிகாரங்களைக் கொண்ட விசாரணை மன்றம் ஒன்றை, இந்திய நாடாளுமன்றம் அமைக்கப் போகிறதாம். அதற்குப் பெயர் ‘லோக்பால்’. இதற்கான சட்ட வரைவுகளை மன்மோகன்சிங் ஆட்சியே தயாரிக்க இருந்தது. அரசே தயாரித்தால் அது வலுவிழந்து விடும் என்பதால், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று, அதை தயாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு ‘உண்ணாவிரதம்’ என்ற காந்தியின் போராட்ட வடிவத்தை கையில் எடுத்தார், அன்னா ஹசாரே எனும் மராட்டியத்தைச் சார்ந்த மூத்த காந்திய வாதி. கோரிக்கையை மன்மோகன் சிங் ஆட்சி ஏற்றதால், அவரது 97 மணி நேர பட்டினிப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. ஹசாரே போராட்டத்துக்கு பின்னணியாக இருந்தது, ‘இந்துத்துவ’ கட்சிகள்! பார்ப்பன ஏடுகளின் பேராதரவும் கிடைத்தது.

கோரிக்கையின் நியாயத்தையேற்று, இடதுசாரிகளும் ஆதரவு தெரிவித்தனர். மதத்தின் பெயரால் படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, உலக அரங்கில் ‘குற்றவாளி’யாக சித்தரிக்கப்பட்ட குஜராத் முதல்வர் மோடியின் சாதனைகளை புகழ்ந்தார் ஹசாரே. எதிர்ப்பு வந்ததும், குஜராத் வன்முறை கலவரங்களை தாம் ஏற்கவில்லை என்று தன்னிலை விளக்கம் அளித்தார். பசுவதை செய்தால் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று நாடு முழுதும், ‘யோகா’ என்ற பெயரில் மதவெறிப் பரப்புரை நடத்தி வரும் பாபாராம் தேவும், ஹசாரேவுடன் கைகோர்த்துக் கொண்டு விட்டார். தமிழ்நாட்டில் ஆன்மீகத்துக்காக அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ள ‘கொலைக் குற்றவாளி’ ஜெயேந்திரனும், இந்த அணியில் தன்னை இணைத்துக் கொள்ள வாய்ப்புகள் உண்டு. ஊழலை ஒழிக்க, அரசியலுக்கு அப்பாற்பட்ட இயக்கம் தேவை என்று ஊடகங்களும் வலியுறுத்தி வருகின்றன.

பார்ப்பன மதம், கடவுளுக்கு லஞ்சம் தந்தால், பாவங்களிலிருந்து மீண்டுவிடலாம் என்று லஞ்சத்தை பக்திக்குள் கொண்டுவந்து நுழைத்துவிட்டது. அரசியலிலும் தமிழ்நாட்டில் ‘திருமங்கலம் பார்முலா என்ற ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு வாக்காளர்கள் லஞ்ச ஊழலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை ஓட்டு பெற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் தந்தார் என்பதும், மதுரை திருமங்கலம் தொகுதியில் வாக்காளர்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டதும், ‘எங்கள் அப்பா போட்டியிட்ட சிவகங்கை தொகுதியில் முழுமையாக வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுக்க முடியவில்லை’ என்றும் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்தின் மகன் கார்த்திக் வேதனைப்பட்டதும், அமெரிக்க தூதரகத்தின் ரகசியக் குறிப்பேடுகளில் பதிவாகியுள்ளதை ‘விக்கி லீக்ஸ்’ இணையதளம் அம்பலப்படுத்தியுள்ளது. தற்போது கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ள மராட்டியத்தைச் சார்ந்த ஹசன் அலிகான் – அலைக் கற்றை வழியாகக் கிடைத்த பல்லாயிரம் கோடி லஞ்சப் பணத்தை வெளிநாடு வங்கிகளில் முதலீடு செய்வதற்கு பல அரசியல் தலைவர்களுக்கு உதவினார் என்றும், அந்தப் பணம் மீண்டும் தேர்தல் களத்தில் புழங்குவதற்கும் அவரே ஏற்பாடு செய்து தந்தார் என்றும், சி.பி.அய். விசாரணையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளதாக ஆங்கில ஏடு ‘பிரண்ட் லைன்’ கட்டுரை வெளியிட்டுள்ளது. இது தான் நாட்டின் நிலை. இந்த லோக்பால் சட்டத்தால் எதுவுமே மாறிவிடப் போவதில்லை என்கிறார், மத்திய மனித வளத் துறை அமைச்சர் கபில்சிபல். அவரும், லோக்பால் அமைப்புக்கு விதிகளை உருவாக்கும் குழுவில் ஒரு உறுப்பினர். அப்படியானால், அவர் குழுவில் ஏன் இடம் பெற வேண்டும்; விலக வேண்டியது தானே, என்கிறார் ஹசாரே!

அய்.நா. மன்றமே ஊழலை ஒழிக்க வேண்டும் என்று சர்வதேச உடன்பாடு ஒன்றை 2005 ஆம் ஆண்டு உருவாக்கியது. இதற்கு 140 நாடுகள், தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளன. அதில் இந்தியாவும் ஒன்று. ஆனால், அய்.நா.வின் உடன்பாட்டுக்கான ஆதரவை நாடாளுமன்றத்தில் வைத்து ஒப்புதல் பெற்றால் தான், சட்ட அங்கீகாரம் கிடைக்கும். அய்.நா. உடன்பாட்டில் உலக நாட்டின் கவுரவத்துக்காக கையெழுத்திட்ட இந்தியா, நாடாளுமன்றத்தில் கடந்த 6 ஆண்டுகளாக ஏற்பு வழங்கவில்லை. இந்த நிலையில் லோக்பால் சட்டம் கடுமையான விதிகளைக் கொண்டு உருவாகப் போகிறதாம். லோக்பால் சட்டம் வந்துவிட்டாலே இந்த நாட்டில் லஞ்சம் ஒழிந்து விடுமா? வன்கொடுமை தடுப்புச் சட்டம்கூட அமுலில்தான் இருக்கிறது. தீண்டாமை குற்றங்கள் ஒழிந்துவிட்டதா என்ன? எல்லாமே கண்துடைப்பு நாடகம்தான்.

‘லஞ்சம் ஒழிய வேண்டுமானால், தனி உடைமைத் தர்மம் அழிந்து, ஒழிந்து, பொதுவுடைமை நிலை ஏற்பட்டால்தான் முடியும்’ என்கிறார் பெரியார். பார்ப்பன – பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்பு லஞ்சத்தை தொழில் தர்மமாக்கி, ஆட்சியாளர்களையே விலைக்கு வாங்கிவரும் ‘யுகத்தில்’ லோக்பால், என்ன சாதித்துவிடப் போகிறது?

## பாபாராம் தேவுக்கு கோவையில் எதிர்ப்பு – கைது!




கழக செயற்குழு கூட்டம் சென்னையில் கூடியபோது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மார்ச் 31 ஆம் தேதி கோவை வந்த பாபாராம்தேவை கண்டித்து அதிகாலை 6 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மார்ச் 31 அன்று காலை 5 மணியளவில் கோவை வ.உ.சி. மைதானத்தில் பாபா இராம்தேவின் யோகா நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கு அதே இடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த, கழகம் அறிவிப்பு வெளியிட்டிருந்ததால் திருமலையம்பாளையம், அன்னூர் பகுதி தோழர்கள் முதல் நாள் இரவே கழக அலுவலகத்திற்கு வந்து தங்கியிருந்தனர்.

31.3.11 அன்று காலை 4 மணி முதலே தோழர்கள் அணி அணியாக கழக அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தனர். அதிகாலை 5 மணிக்கே 100க்கும் மேற்பட்ட தோழர்கள் குவிந்தனர். அத்தனை தோழர்களும் வ.உ.சி. மைதானம் சென்று அங்கு, “உணவில் மதத்தை கலக்காதே! பாபா இராம்தேவே திரும்பிப் போ!” போன்ற முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர். 500-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். கழக தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு கழக செயற்குழு உறுப்பினர் ஆறுச்சாமி தலைமையேற்றார். வடக்கு மாவட்ட தலைவர் இராமசாமி, செயலர் நாகராசு, பொருளாளர் மதியழகன், அமைப்பாளர் சண்முகசுந்தரம், தெற்கு மாவட்ட தலைவர் கலங்கல்வேலு, மாநகர செயலாளர் சாஜித், பொருளாளர் இரஞ்சித் பாபு, தலைவர் கோபால், அலு வலக பொறுப்பாளர் கதிரவன், துணைத் தலைவர் இராசக்குமார், உள்ளிட்ட பொறுப்பாளர்களும், மாணிக்கம், மாநகர துணைச் செயலாளர்கள் இளங்கோ, தமிழரசன், கணேசன், வீரபாண்டி பாபு, அன்னூர் பொறுப்பாளர் ஈசுவரன், ஜோதி ராம், செல்வராஜ், இரமேசு, திருமலையம் பாளையம், பாலமுரசு, சிலம்பரசன், காளியாபுரம் விக்னேசு, இரமேசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். கோவை தெற்கு மாவட்ட செயலாளர் காசு நாகராசு தலைமையில் 10 தோழர்கள் பங்கேற்றனர். போராட்டத்திற்கு வந்திருந்த தோழர் களுக்கு காலை உணவாக இட்லியுடன் மாட்டிறைச்சியும் வழங்கப்பட்டது. கீழ்க்கண்ட துண்டறிக்கை பொது மக்களிடம் வழங்கப்பட்டன.

### பசுவை பாதுகாப்போர் சிந்தனைக்கு!

உயிர்களின் மீது உங்களுக்கு அக்கறை இருக்குமேயானால் அந்த அக்கறையை எல்லா உயிர்களின் மீதும் காட்டலாமே!

பால் தரும் பசுத் தாயை உண்ணக் கூடாது என்கிறீர்களே! பால் தரும் எருமையை மட்டும் உண்ணலாமா? பால் தரும் எருமையையும் பாதுகாக்கலாமே!

இயற்கை விவசாயத்தைப் பற்றி பேசும் நீங்கள், விவசாயிகளின் வேலைக்குப் பயன்படும் காளையையும் பாதுகாக்கலாமே!

பசுவை நீங்கள் கடவுள் என்பீர்களானால், சிவனுடைய வாகனம் காளை, முருகனுடைய கொடியின் சின்னமான சேவல், விஷ்ணுவின் அவதாரங்கள் பன்றி, மீன், ஆமை, எமதர்ம வாகனம் எருமை, பைரவ மூர்த்தியான நாய், இது போன்ற எண்ணற்ற அவதாரங்களாகக் கூறப்படும் உயிரினங்களையும் பாதுகாக்கலாமே!

வயதான, பயனற்ற மாடுகளை மட்டும் தான் உணவுக்காக வெட்டுகிறார்கள். அப்படி வயதான பசுக்களை பாதுகாக்க வேண்டும் என்றால், நீங்கள் விலைகொடுத்து வாங்கி பாதுகாக்கலாமே!

அதற்காக கோசாலை என்ற பெயரில் நான்கு, அய்ந்து மாடுகளை மட்டும் வாங்கி கட்டி வைப்பதோடு நிற்காமல், பயன்படாமல் உள்ள எல்லா மாடுகளையும் வாங்கி பாதுகாக்கலாமே?

பசுக்களுக்காக கண்ணீர் விடும் நீங்கள் இராமேசுவரம் பகுதியில் சுட்டுக் கொல்லப்படும் தமிழக மீனவர்களுக்காகவும், ஈழத்தில் சிங்கள இனவெறியர்களால் கொல்லப்பட்ட இந்துக்களுக்காகவும் குரல் கொடுக்கவில்லையே ஏன்?

பசுவை மட்டும் பாதுகாப்போரே... பதில் சொல்லுங்கள்...! - என்ற துண்டறிக்கைகள் மக்களிடம் வழங்கப்பட்டன.

**செய்தி: இ.மு. சாஜித்**

### வந்த கடிதம்

அன்புடையீர்!

‘ஜெயேந்திரனைக் காப்பாற்ற அரசு தரப்பு தீவிரம்’ என்ற செய்தியில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஜெயேந்திரன் மீதான கொலைக் குற்றத்தை விசாரித்த முதன்மை அதிகாரி, உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் முழுத் தகவலையும் வெளியிட்டிருந்தது. ஜெயேந்திரனைக் காப்பாற்ற ஆளும் அரசு தரப்பினர் மேற்கொண்டுள்ள முயற்சிகளை சரியாகவே அம்பலப்படுத்தியது.

இது தொடர்பாக 6.4.11 ‘ஜூனியர் விகடன்’ ஏட்டில் வெளிவந்த ஒரு செய்தியையும் சுட்டிக்காட்ட வேண்டும். உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தனது தொகுதியில் பேசியது அதில் வெளிவந்துள்ளது.

அதில் தி.மு.க. ஆட்சியில் நடந்த சம்பவங்களை ஆதரித்தும், அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த சம்பவங்களுக்கு தனது எதிர்ப்பை தெரிவித்தும் பேசியுள்ளார். அப்படி அவர் பட்டியலிட்ட அ.தி.மு.க. ஆட்சியில் தமக்கு உடன்பாடில்லாத நிகழ்வுகளில் ஒன்றாக, காஞ்சி சங்கராச்சாரியை சிறையில் அடைத்ததைக் குறிப்பிடுகிறார்.

கொலைக் குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, வழக்கு விசாரணையில் இருக்கும் போது நடுவண் அரசின் உள்துறை அமைச்சர் இப்படிப் பேசினால், அது வழக்கு விசாரணையைப் பாதிக்காதா?

காஞ்சி சங்கராச்சாரிக்காக வாதாடுவது என்று ப. சிதம்பரம் முடிவெடுத்துவிட்டால், அவர் பதவியை உதறிவிட்டு, வெளியே வந்து அதை செய்வதுதான் நல்லது.

**– அழகிய சங்கரபாண்டியன்,**
**திருநெல்வேலி–10.**

குறிப்பு: கலைஞர் தொலைக்காட்சியில் ஜெயலலிதா ஆட்சி முறைகேடுகளை விளக்கும் தேர்தல் விளம்பரத்தில், ஜெயேந்திரன் கைதை யும் முறைகேடாக சித்தரித்து ஒளிபரப்புகிறது. (ஆர்)

# தமிழிசைக்காக – பெரியார் இயக்கத்தின் போராட்டங்கள்!

*தமிழில் பாடுவதற்கே தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் மறுத்தனர்; பெரியாரின் சுயமரியாதை இயக்கம் – தமிழிசைக்காக இயக்கம் நடத்தியது.*

அன்று பார்ப்பனரல்லாத இசைக் கலைஞர்கள் ஒட்டு மொத்தமாகவே பார்ப்பனர்கள், பணக்காரர்கள், படித்தவர்கள் ஆகியோரால் புறக்கணிக்கப் பட்டும் அங்கீகாரம் மறுக்கப்பட்டும் இருந்ததோடு இழிவாகவும் நடத்தப்பட்டனர். இசை உலகில் ஆணாதிக்கமும் மேலோங்கியிருந்தது. அந்த இழி நிலையைப் போக்குவதற்காகப் போராடிய சுயமரியாதை இயக்கம், ஈரோட்டில் நடந்த இரண்டாவது மாநில சுயமரியாதை இயக்க மாநாட்டில் 'சங்கீத மாநாடொ'ன்றையும் நடத்தியது. அதனையொட்டி, பார்ப்பனரல்லாத வாய்ப்பாட்டு, கருவியிசைக் கலைஞர்களின் பட்டியலையும் வெளியிட்டது. அம்மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தவர் காரைக்குடி சொ. முருகப்பா. அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத் துறை பேராசிரியர் பொன்னையா பிள்ளை போன்றோர் கலந்து கொண்ட அம்மாநாட்டின் முக்கியத்துவம் பற்றிப் பெரியார் எழுதியதாவது:

.... பார்ப்பனரல்லாத பெண் வித்வான்களாக இருந்தால் உட்கார்ந்து பாடும்போது சபைக்கு ஒவ்வொரு மனிதன் வரும்போதும் எழுந்து எழுந்து கும்பிட்டு விட்டுத்தான் உட்கார வேண்டியிருக்கிறது. ஆண் பாட்டுக்கார வித்வான்களோ பிரபுக்களுடன் பேசும்போதும், இடுப்பின் மேல் வேட்டியை எடுத்து சுருட்டி கட்டிக் கொண்டும் இடக்கையை வலகக்கத்தில் வைத்து வலக்கையால் வாயை பொத்தி குனிந்து மகாராஜா', 'எஜமான்', 'சுவாமி', 'சமூகம்' என்று மேல் மரியாதை வைத்து பேச வேண்டியிருக்கிறது. இப்பிரபுக்களும் வித்வான்களிடம் பேசும்போது நீ, அவன், டேய் என்கின்ற ஒருமை அடிமை முறையில் பேசுவது வழக்கமாயிருக்கின்றது. இதே தொழிலில் இருக்கும் பார்ப்பனர்களும் பார்ப்பனர் அல்லாதவர்களாயிருந்தால் அவர்களிடமும் இப்படியேதான் நீ, அவன், அடே என்கின்ற வரிசை வைத்துத்தான் பேசுகிறார்கள். ஒரு இரண்டு, மூன்று சாண் பையனாயிருக்கும் பார்ப்பன வித்வான் கூட எட்டரை சாண் இருக்கும் பார்ப்பனரல்லாத வித்வானை ஒருமையில்தான் அவன், நீ, அடே என்று பேசுகிறான். அந்த சிறு வித்வானிடம் இந்தப் பெரிய வித்வான்கள் பேசம்போது 'சுவாமிகள்' என்று மரியாதை வைத்துப் பேசுகிறார்கள். நிற்க. நமது பிரபுக்கள் என்பவர்களும் பார்ப்பன வித்வான் களிடம் பேசும் போதெல்லாம் மரியாதையாகவே பேசுவதும் தாங்களாகவே முதலில் கும்பிடுவதும் இதற்கு பார்ப்பனர்கள் இடது கையை தங்கள் இடுப்புக்கு கீழாக காட்டி 'ஆசீர்வாதம்' என்று சொல்வதுமான காரியங்கள் தினமும் நடந்து வருகின்றன.

பார்ப்பன பிரபுக்கள் தங்கள் வீட்டு விசேஷங்களுக்கும் சடங்குகளுக்கும் மேளம் வாசிப்பதற்கு தவிர மற்றபடி சபை கச்சேரிகளுக்கு பாடவோ, கதைகள் செய்யவோ கண்டிப்பாய் பார்ப்பனர் அல்லாதவர்களை கூப்பிடுகின்ற வழக்கமே ஒரு சிறிதும் இல்லை. அதுமாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதார் பாடுவதையோ கதை சொல்லுவதையோ புராணம் உபநியாசம் முதலியன சொல்வதையோ பார்ப்பனர்கள் கேட்பது மத சம்பிரதாயப்படி தோஷம் என்றே கருதியிருக்கிறார்கள்.

ஒரு பார்ப்பன சிறுவன் பாடினாலும் கருவியால் வாசித்தாலும் சுற்றிலும் பார்ப்பனர்கள் 'பலே, பலே', 'பேஷ் பேஷ்' என்று கைதட்டுவதும் தலையை ஆட்டுவதும் மெய்மறந்ததுபோல் கண்களை மேலே சொருகுவதுபோல் வேஷம் போடுவதும், அதை ஒன்றுக்கு இரண்டாக விளம்பரம் செய்து அவனுக்கு ப்ரக்யாதி சம்பாதித்துக் கொடுப்பதும் அதி கவலையாய் இருக்கிறார்கள்.

ஆனால், பார்ப்பனரல்லாத வித்துவான்களாயிருந்தால் அவர்கள் எவ்வளவு பெரிய வித்வான்களாயிருந்தாலும் வேண்டுமென்றே 'கட்டை சாரீரம்' என்பதும், கணக்கு போதாது என்பதும், மேல் ஸ்தாயியில் அகப்படாது என்பதும் மற்றும் ஏதேதோ பொருத்தமற்றவைகளை சொல்லி விஷமப் பிரச்சாரம் செய்வது எங்கும் வழக்கமாக இருக்கிறது.

எனவே, நாம் சங்கீத மகாநாட்டில் கலந்து கொள்ள ஆசைப்பட்டதன் முதல் காரணம் சங்கீத ஞானத்தின் வளர்ச்சிக்காகவோ சங்கீத கலை வளர்ச்சிக்காகவோ மாத்திரமல்ல என்றும், பார்ப்பனரல்லாதார் என்னும் உயர்வு தாழ்வு விஷம் சங்கீதத்துக்குள்ளும் புகுந்து அதன் மூலம் பார்ப்பன ரல்லாதார் சுயமரியாதைக்கு விரோதமாயிருக்கும் கொடுமையை ஒழிக்கவே என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். (கு.அ., 20.4.1930)

இந்த அடிப்படையில்தான் பின்னாளில் பெரியாரும் சுயமரியாதை இயக்கத்தினரும் தமிழிசை இயக்கத்திற்கு, 'சூத்திர நீச பாஷையான' தமிழில் பாடுவதற்கு ஆதரவளித்தனர். தமிழ்ப் புலவர்களின் சுயமரியாதையைக் காக்க முன் வந்தனர். இசைத் துறையுடன் தொடர்புடைய வேறு இரு நிகழ்ச்சிகளையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஒன்று சலவைத் தொழிலாளர்கள் தொடர்புடையது. 1930களில் திரைப்பட நடிகையாகவும் நாடக நடிகையாகவும் இருந்த சிவபாக்கியம் பாடிய 'வண்ணான் வந்தானே' என்ற பாட்டு கிராமபோன் இசைத் தட்டில் பதிவு செய்யப்பட்டு பிரபலமாயிருந்தது. திருச்சி வண்ணார்குல சங்கம் அந்தப் பாட்டைத் தடை செய்யுமாறு உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. 3.11.1933 இல் திருச்சியில் நடந்த தென்னிந்திய வண்ணார் சங்கப் பொதுக் கூட்டத்திலும் (இதில் கி.ஆ.பெ. விசுவநாதமும், கே.வி.அழகர்சாமியும் சிறப்புரையாற்றினர்) மேற் சொன்ன பாட்டும், இசைத்தட்டும் தடை செய்யப் பட வேண்டும் என தீர்மானம் செய்யப்பட்டது (நகர தூதன் 5.11.1933). அதே திருச்சியில் 1934 பிப்ரவரியில் நடந்த சலவைத் தொழிலாளர்கள் மாநில மாநாட்டில் தலைமை உரை ஆற்றிய என். சிவராஜ், சலவைத் தொழிலாளிகளின் சுயமரியாதை உணர்வை வலுப் படுத்தும் சிறப்புரை ஆற்றினார் (நகர தூதன், 4.2.1934).

கே.பி. சுந்தராம்பாள் மிகப் புகழ்ப் பெற்ற நாடக, சினிமா நடிகை. காங்கிரஸ் ஆதரவாளர். எஸ். சத்தியமூர்த்தி அய்யரின் மிக நெருக்கமான நண்பர், காங்கிரஸ் பிரச்சாரம் செய்து வந்தவர். நாடக மேடைகளிலும் சரி, பொதுக் கூட்ட மேடை களிலும் சரி, சுயமரியாதை இயக்கத்தையும், பார்ப்பனரல்லாத இயக்கத்தையும் கடுமையாகத் தாக்கி வந்தவர். ஆயினும் பார்ப்பனரல்லாத கீழ்சாதிக் குடும்பத்தில் பிறந்த அவர், அடைந்த புகழ், ஈட்டிய செல்வம் ஆகியவற்றால் எரிச்சலடைந்த பார்ப்பனப் பத்திரிகைகளான 'சுதேசமித்திரன்', 'ஆனந்த விகடன்' ஆகியன அவரது சாதியைக் குறிப்பிட்டு இழிவாக எழுதியபோது, அவருக்கு ஆதரவாக குரல் கொடுத்தது சு.ம. இயக்கம்.


பார்ப்பன பத்திரிகைகள் எல்லாம் பெரிதும் இப்போதே திடீரென்று ஒன்று சேர்ந்து கொண்டு தோழர் சுந்தராம்பாள் ஞானத்தையும் நடிப்பையும் இகழ்ந்தும் பரிகாசம் செய்தும் விஷமப் பிரச்சாரமாய் எழுதுவதும் பேசுவதும் ஒரு புறத்தில் நடக்கவும் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களும் சில காங்கிரஸ் பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லா தார் கட்சியை வைவதற்காகக் கூட்டம் கூட்டிக் கொள்வதற்காகவும் அம்மாளை பயன்படுத்திக் கொண்டு ஆளுக்கொரு தொண்டை ஏற்றுக் கொண்டு தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்கின்றனர்; சாதித்து வருகின்றனர் (கு.அ., 4.8.1935).

'குடி அரசு' போலவே டாக்டர் வரதராஜுலு (காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தவர்) நடத்தி வந்த 'தமிழ்நாடு' மற்றும் 'ஊழியன்', 'நகரதூன்' ஆகிய ஏடுகளும் சுந்தராம்பாளை ஆதரித்துக் கட்டுரைகளும் தலையங்கங்களும் எழுதின. அதன் பிறகே சுந்தராம்பாளைப் பற்றி இழிவாக எழுதுவது நிறுத்தப்பட்டது.

**– எஸ்.வி. ராஜதுரை – வ.கீதா எழுதிய**
**'பெரியார் : சுயமரியாதை சமதர்மம்' நூலிலிருந்து.**

## புராண நாடகங்கள் நடந்தால் எதிர்ப்பு முழக்கமிடுங்கள்!

### – பெரியார் –



நாடகம் எதற்கு? அது படிப்பிக்கும் படிப்பினை என்ன? புராணக் கதைகளை நடிப்பினால் அனுபவிப்பதால் மூட நம்பிக்கை, ஒழுக்க ஈனம், கட்டுத் திட்டமற்ற காம உணர்ச்சி, கண்ட மாத்திரத்தில் காம நீர் சுரக்கும்படியாகப் பெண் மக்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளுதல் முதலியன பிடிபடுவதல்லாமல் வேறு என்ன ஏற்படுகிறது. இரணியன் நாடகத்தில் விஷ்ணு தூணிலிருந்து வெளிவரும்போது கூத்துப் பார்க்கும் மக்கள் கைகூப்பிக் கும்பிடுகிறார்கள். வள்ளித் திருமண நாடகத்தில் வள்ளியை சுப்பிரமணியன் காதலித்துக் காதல் சேட்டை செய்யும்போது, பல ஆண்கள் பெண்கள் பக்கமும், பல பெண்கள் ஆண்கள் பக்கமும் திரும்பிப் பார்த்து கண்ணோடு கண்ணை முட்ட வைப்பது போல் ஆகி மூர்ச்சையாகி விடுகிறார்கள்.

ஒரே கதை நாடகமும், சினிமாவுமாக ஒரு மாதம் 2 மாதம், 3 மாதம் ஆடுவதின் காரணம் என்ன? முதலிரண்டு மூன்று நாட்களிலேயே பல பெண்களும், ஆண்களும் நாடகக் கொட்டகையைத் தங்கள் சங்கேதஸ்தலம் (அதாவது பார்வையால், சந்திப்பால் ஒரு அளவு காதலைத் தீர்த்துக் கொள்ளவும், காதல்குறியைக் கண்டு அனுபவிப்பதால் ஒரு அளவு இன்பங்கொள்ளவும் அனுகூலமான இடம்) ஆக ஆக்கிக் கொள்கிறார்கள். வெறும் சாதாரண நிலையில் ஆண், பெண் சந்தித்துக் கொள்வதைவிட நல்ல உடை, நல்ல நடை, நல்ல அலங்கரிப்பு, நல்ல சாயலோடு செல்ல உரிமை இருக்கிற இடங்கள், இவைகளோடு அதற்கேற்ற சைகைகள் நடக்கும் சமயத்தில் சந்திப்பு வைத்துக் கொள்ளுவது, உண்மையிலே யாருக்கும் ஒரு இன்பத்தையும், திருப்தியையும் கொடுத்துத்தான் தீரும். இது இயற்கையே ஆகும். ஆனால் நாம் இதை வளர்க்கச் செய்யலாமா? இளம் வயதாகவும், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் போதிய சக்தி இல்லாதவர்களாகவும் இருக்கிற சிறுவர் சிறுமிகளுக்கும் மனோபலமற்றவர்களுக்கும் இதை ஒரு பழக்கமாகச் செய்யலாமா என்று பாருங்கள். அப்படிச் செய்வதானாலும், அதிலிருந்து சிறிது அறிவும் மானமும் பெறும்படியாகவாவது அந்த நடிப்பைத் திருப்ப வேண்டாமா? அதை விட்டுவிட்டு காட்டுமிராண்டிகள் போல் மூடநம்பிக்கையும் காமமும் காதலுமே நமது கலைகளை நிரப்பி வருவதானால் கலையினால் மனிதன் அறிவாளியாவானா, மடையனாவானா? சிந்தித்துப் பாருங்கள். நந்தனார் சரித்திரத்தால் தீண்டாமை ஒழியுமா, நிலைக்குமா? யோசித்துச் சொல்லுங்கள், பார்க்கலாம். கிருஷ்ண லீலையால் விபசாரித்தனம் வளருமா, குறையுமா சொல்லுங்கள் பார்க்கலாம். திருவிளையாடல் புராண சிவலீலையால் ஒழுக்க ஈனங்களும் அயோக்கியத்தனங்களும் வளருமா, குறையுமா என்று கூர்ந்து பாருங்கள். இராமாயணத்தினால் அடிமைத் தனமும் சூழ்ச்சிகளும் வளருமா, குறையுமா என்று பாருங்கள். இப்படிப்பட்ட புராண சம்பந்தமான கதைகளின் நடிப்பு ஏதாவது ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படுகிறதா என்று கேட்கிறேன். இப்படியே ஒவ்வொரு புராணக் கதையிலும் கேடு இருப்பதோடு நாட்டுக்குப் பெருமித நட்டமும், முன்னேற்றத் தடையும் இருந்து வருகிறது. வாலிபர்கள் ஆண்களும், பெண்களும் முன் வந்து இந்தக் கேட்டை ஒழிக்க வேண்டும். நாடகங்களில் போய் உட்கார்ந்து கொண்டு இப்படிப்பட்ட காதல் வரும் சந்தர்ப்பங்கள் வரும்போது, "வெட்கம் வெட்கம், மானங்கெட்ட பெண்கள் தான் இதைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள், மானம் ஒழுக்கமும் உள்ள பெண்கள் இந்த நாடகங்களை எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்கள்" என்றும், மூடநம்பிக்கை வரும் சந்தர்ப்பங் களில், "வெட்கம் வெட்கம், பகுத்தறிவற்றவர்களும், காட்டுமிராண்டிகளும் தான் இந்தக் காட்சிகளைக் காண வருவார்கள். அறிவும் மானமும் உள்ளவன் இதைத் திருத்தத்தான் முற்படுவான்" என்றும் சொல்ல வேண்டும்.

"அதுபோலவே இசையரங்குகளிலும் பஜனைப் பாட்டுகள் வரும்போது அவை காதுகளில் கேட்காதபடி, "யாயா யாயாயா" என்று கூப்பாடு போட்டு, அந்தச் சப்தம் மற்றவர்கள் காதுகளில் கேட்காமல் இருக்கும்படி செய்ய வேண்டும். யுத்தத்தின் காரணமாக நமது சர்க்கார் ரேடியோவில் ஜப்பான், ஜெர்மன் பேச்சுகள் வரும்போது வேறு யாரோ ஒருவர் அப்பேச்சுகள் நம காதுகளில் விழாமல் இருப்பதற்கு ஆக 'யாயா யாயா' என்று சொல்லச் செய்கிறார்கள் அல்லவா, அதுபோலதான் நானும் சொல்லுகிறேன்.

**– (அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பெரியார் உரை. 'குடிஅரசு' 26.2.1944,**
**'கலை எனப்படுவது இனக்கொலையென்றல்....' நூலிலிருந்து)**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# தூத்துக்குடியில் பெரியாரியல் பயிலரங்கம்



தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டையில் 27.3.2011 அன்று தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் தூத்துக்குடி, நெல்லை மாவட்ட மாணவர்கள், இளைஞர்கள் பயன் பெறும் வகையில் பெரியாரியல் பயிலரங்கம் நடைபெற்றது. பயிலரங்கை தூத்துக்குடி தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்ற கழக பிரமுகருமான என். தனசேகரன் துவக்கி வைத்து உரையாற்றினார். "பெரியாரின் தேவை குறித்தும் இளைஞர்கள் அவரைப் பற்றியும் திராவிடர் இயக்கம் செய்திருக்கும் சாதனைகள் பற்றியும் அறிந்து கொள்வது அவசியமென்றும், உங்களுக்கு சரி என பட்டதை எடுத்துச் சொல்வதையும் செயலாற்றுவதிலும் தயக்கம் வேண்டாம்" என கேட்டுக் கொண்டார்.

மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, பெரியாரும் பகுத்தறிவும் என்ற தலைப்பில் உரையாற்றினார். வகுப்புரிமை, பெரியாரின் போராட்டங்கள் குறித்து, கோ.அ.குமார், வே. பால்ராசு உரையாற்றினர். இறுதியில் நீதிக்கட்சி முதல் பெரியார் திராவிடர் கழகம் வரையிலான திராவிடர் இயக்க வரலாறு, சாதி ஒழிப்பு அவசியம் குறித்தும், கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் விளக்கவுரையாற்றினார். நிகழ்வுக்கு வந்த மாணவர்கள் இளைஞர்களுக்கு குறிப்பேடு எழுதுகோல் வழங்கப்பட்டது. அவர்கள் ஆர்வமுடன் குறிப்பு எடுத்துக் கொண்டனர். காலை, மாலை தேநீர், மதியம் அசைவ உணவு வழங்கப்பட்டது. மேற்சொன்ன விருந்து உபசரிப்புகளை மாவட்டத் தலைவர் பொறிஞர் அம்புரோசு மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

பெரியாரியல் பயிலரங்கத்தை ஒருங்கிணைத்து மாணவர்களையும், இளைஞர்களையும் பயிலரங்கில் பங்கு பெற வைத்து பயிலரங்கம் சிறப்பாக நடைபெற கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் ஏற்பாடு செய்திருந்தார். தொடர்ந்து இது போன்ற பயிலரங்கை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நெல்லை, தூத்தக்குடி மாவட்டங்களை ஒருங்கிணைத்து நடத்திட தூத்துக்குடி, நெல்லை மாவட்ட கழகப் பொருப்பாளர்கள் உறுதியளித்தனர். பெரியாரியலின் அடிசுவட்டை அறிந்த மனநிறைவோடு தோழர்கள் சென்றனர்.

## பணத்தால் பெறும் வெற்றி

பணத்தால் பெறும் வெற்றி பணத்தின் பிரதிநிதித்துவமாகத்தான் விளங்குமே ஒழிய மக்கள் பிரதிநிதித்துவமாக விளங்காது. அதுபோலவே காலித்தனத்தாலும், பொய், பித்தலாட்டம் ஆகியவைகளாலும் பெறும் வெற்றி காலித்தனத்துக்கும் பொய்ப் பித்தலாட்டத்துக்கும் பிரதிநிதித்துவமாய் விளங்குமே தவிர மக்களுக்குப் பிரதிநிதித்துவமாய் விளங்காது. ஆகையால் பணச் செலவில்லாமலும் பொய், பித்தலாட்டப் பிரச்சாரமில்லாமலும் தேர்தல்கள் நடைபெற வேண்டுமென்பது நமது ஆசை. **(பெரியார் 17.1.38 'குடிஅரசு')**

தேர்தல் என்பவைகள் மனிதன் அயோக்கியத்தனமும், சுயநலமும், பொய்யும், பித்தலாட்டமும், திருட்டும், பழி வாங்கும் தன்மையும் கற்றுக் கொள்ளும் இடம் என்றும், ஏன், கட்டாயப் பாடமாகக் கற்றுக் கொள்ளும் இடம் என்றும் வன்மையாய் அழுத்திக் கூறுவோம். **(பெரியார் 3.10.37 'குடிஅரசு')**

## மும்பையில் இராஜபக்சேவுக்கு எதிர்ப்பு



கொடுங்கோலன் சிங்கள இன வெறியன் இராஜபக்சே மும்பையில் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட்டின் இறுதி போட்டியை காண மும்பைக்கு வருகை தந்ததை எதிர்த்து, மும்பையிலுள்ள தமிழ் அமைப்புகள், பெரியார் திராவிடர் கழகம், உலக தமிழர் பேரமைப்பு, தமிழர் பாதுகாப்புக் குழு, நாம் தமிழர் இயக்கம் மற்றும் இன உணர்வாளர்கள் கலந்து கொண்டு எதிர்ப்பைக் காட்டினர்.

# மத நம்பிக்கையே இல்லாமல் வாழும் மக்கள்

உலகின் ஒன்பது நாடுகளில் சமீபத்தில் நடந்த ஓர் ஆய்வில், அந்நாடுகளில் பெரும்பான்மையான மக்கள் மத நம்பிக்கையே இல்லாமல் வாழ்ந்து வருவது தெரிய வந்துள்ளது. இதனால், அவற்றில் தற்போது இருக்கும் மதங்கள் விரைவில் காணாமல் போய்விடும் என்று அந்த ஆய்வு கூறுகிறது.

ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, கனா, செசன்ய குடியரசு, பின்லாந்து, அயர்லாந்து, நெதர்லாந்து, நியூசிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய ஒன்பது நாடுகளில் சமீபத்தில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. இந்நாடுகளில் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, அங்குள்ள மக்களின் மத விவரங்கள்சேகரிக்கப்பட்டன. அதன்படி, அந்நாடுகளில் பெரும்பான்மையான மக்கள் மத நம்பிக்கை இல்லாமலேயே வாழ்ந்து வருவது தெரிய வந்துள்ளது.

இப்படியே போனால் இன்னும் சில ஆண்டுகளில் அங்கு மதங்களே இல்லாமல் போய்விடும் என்ற அந்த ஆய்வு எச்சரித்துள்ளது. அமெரிக்காவின் டல்லஸ் நகரில் நடந்த ஓர் கூட்டத்தில் இந்த ஆய்வின் முடிவு வெளியிடப்பட்டது. அதன்படி, மிக குறைந்தபட்சமாக நெதர்லாந்தில் 40 சதவிதம் பேரும், அதிகபட்சமாக செசன்ய குடியரசில் 60 சதவீதம் பேரும் மத நம்பிக்கை அற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவிக்கும் நிபுணர்கள் சிலர், 'இது ஒரு சாதாரண கணக்குதான். அதாவது, நாம் மேற்கொள்ளும் ஒரு காரியத்தால் ஏதாவது பயன் விளைந்தால் அக்காரியத்தை நாம் தொடர்ந்து செய்வோம்.

உதாரணமாக, ஸ்பானிய மொழி பேசுவதால் விளையும் பயன், பெரு நாட்டில் தற்போது வழக்கழிந்து வரும் கொச்சுவான் மொழியைப் பேசுவதால் விளையும் பயனைவிட மிக அதிகம். இதே கணக்கை மதநம்பிக்கையிலும் நீங்கள் வைத்துப் பார்க்கலாம்' என்று தெரிவித்தனர்.

## சென்னையில் உதைக்குத்து பயிற்சி முகாம்



தமிழ்நாடு 'உதைக் குத்து சங்கம்' (கிக் பாக்ஸ்சிங் அசோசியேசன்) ஒரு நாள் பயிற்சி முகாம் 3.4.2011 காலை சென்னை பெரம்பூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள கல்கி இரங்கநாதன் மான்ட் ஃபோர்டு மெட்ரிக் உயர் நிலைப் பள்ளியில் காலை 9 மணியளவில் தொடங்கியது. கிராண்ட் மாஸ்டர் எ. தங்கப்பன் தலைமையில் தபசி. குமரன் (தென் சென்னை மாவட்ட கழகத் தலைவர்) வரவேற்புரையாற்றினார். கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். பிற்பகல் 4 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி உரையாற்றினார். உதை குத்து சங்கப் பொதுச் செயலாளர் கோ. சிவப்பெருமாள், ஒருங்கிணைப்பாளர் சு. பிரகாசு உரையாற்றினர். ஆ. கருணா நன்றி கூறினார்.

### நன்கொடை


தென்சென்னை பொருளாளர் கரு. அண்ணாமலை- வெ. தமிழ்ச்செல்வி ஆகியோரின் 2வது மகன் அண். அன்பரசன், 12.4.2011 அன்று 13வது பிறந்த நாளை முன்னிட்டு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு ரூ.2000 வழங்கினர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 15th April 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஏப்ரல் 21, 2011 | புரட்சி 10 | முழக்கம் 14 | விலை: ரூ.2.50


## சுவர்களை 'சுயமரியாதைக் கள'மாக்கியவர்

# சுவரெழுத்து சுப்பையாவின் 'டைரி' நூலாகியது



தமிழ்நாட்டுச் சுவர்களை 'சுயமரியாதைக் களமாக்கிய' சுவரெழுத்து சுப்பையா, பெரியார் இயக்க வரலாற்றில் நீங்காத இடம் பெற்றவர்களில் ஒருவர். சொந்த வாழ்க்கையை மறந்து கொள்கை வாழ்க்கை வாழ்ந்தவர். சாலை போடுவதற்காக வீதிகளில் கிடத்தப்பட்டுள்ள தார்க் குவளைகளில் உள்ள தாரில் கெரசினைக் குழைத்து துண்டுத் துணியை அந்தக் கலவையில் நனைத்து, சுவர்களில் எழுதுவதே அவரது வழக்கம். கையில் தார்ச் சட்டியுடன் ஊருக்கு ஊர் நடந்தே செல்வார். வழிநெடுக சுவர்களில் எழுதிக் கொண்டே போவார்.

பெரியாரின் சுயமரியாதை கருத்துகளை சொற் சித்திரமாக அவரது சிந்தனையில் செதுக்கி, உள்ளத்தில் பதியச் செய்யும் சொற்களில் எழுதுவார். கடவுள் மறுப்பு, பகுத்தறிவு, பார்ப்பன எதிர்ப்பு, புராணம், தமிழ் இலக்கியம், பெண்ணுரிமை, சுயமரியாதை வாழ்வியல் என்று அவரது சிந்தனை ஆழமாக பரந்து விரிந்திருந்தது.

தன்னிடம் நெருக்கமாகப் பழகிய தோழர்களிடம் தனது கைப்பட எழுதிய நாட்குறிப்பை அவர் தந்திருந்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடமும், அவரது நாட்குறிப்பு ஒன்று இருந்தது. அவரது இறுதி காலத்தில் நெருங்கிப் பழகி, உதவிகள் புரிந்த கோவை ஆறுச்சாமியிடமும், அவரது நாட்குறிப்பு ஒன்று இருந்தது. கழக சார்பில் இதை நூலாக வெளிக் கொண்டுவர தோழர் ஆறுச்சாமி, மேற்கொண்ட இடைவிடாத முயற்சியால் இப்போது நூலாக வெளி வந்துள்ளது.

17.4.2011 ஞாயிறு அன்று மாலை 7 மணிக்கு, கோவை வி.கே.கே. சாலையில் கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழக சார்பாக, "சுவரெழுத்துப் புரட்சியாளர் சுவரெழுத்து சுப்பையா சிந்தனைப் பொறிகள்" நூல் வெளியீட்டு விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சிற்பி ராசன், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியோடு துவங்கிய, இந்நூல் வெளியீட்டு விழா நிகழ்விற்கு, கழகப் பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் தலைமையேற்றார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூலை வெளியிட, துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் பெற்றுக் கொண்டார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரை ஆற்றினார். இரா. இரஞ்சித் பிரபு நன்றியுரை ஆற்றினார்.


(கட்டுரை - உள்ளே)


## இனப்படுகொலைக்கு துணை போன இந்திய அரசே; தமிழர்களிடம் மன்னிப்புக் கேள்!

# மாவட்ட தலைநகரங்களில் கழகம் ஆர்ப்பாட்டம்

ஈழத்தில் இனப்படுகொலைக்கு துணை நின்ற இந்திய அரசு, தமிழர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று வலியுறுத்தி, ஏப். 21 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் மா வட்ட தலைநகர்களில் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. ஒத்தக் கருத்துள்ள அமைப்புகளுக்கும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடந்த 17 ஆம் தேதி கோவையில் கூடிய மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கழகத் தலைவர், துணைத் தலைவர், பொதுச் செயலாளர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். தொடர்ந்து சுவரெழுத்து சுப்பையா, சிந்தனை பொறிகள் நூல் வெளியீட்டு பொதுக் கூட்டத்தில் இத் தீர்மானத்தை கழகத் தலைவர் அறிவித்தார்.

அடுத்த நாள் 18 ஆம் தேதி கோவையில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்திலும் இத் தீர்மானத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் அறிவித்தனர். தீர்மானம்:

ஈழத்தில் தமிழர்கள் மீதான இறுதிக் கட்டப் போரில் இலங்கை அரசு போர்க் குற்றங்களையும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும் நடத்தியிருப்பது உண்மைதான் என்று அய்.நா. பொதுச் செயலாளர் பான்.கி.மூன் அவர்களால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையில் உறுதி செய்துள்ளது. ஏற்கனவே அயர்லாந்து நாட்டில் டப்ளின் நகரில் விசாரித்து தீர்ப்பாயமும் இதே கருத்தை வலியுறுத்தியிருந்தது. இலங்கையின் போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு இந்தியா உட்பட சில நாடுகள் அய்.நா. மனித உரிமைக் குழுவில் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்தையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அய்.நா.வின் குழு கூறியுள்ளது.

ஈழத்தில் நடந்த இனப் படுகொலைகளை மறைத்து, போர் நிறுத்தம் வேண்டும் என்ற தமிழகத்தின் குரலையும் நிராகரித்து, அய்.நா. மனித உரிமைக் குழுவிலும் சில மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக கொண்டு வந்த தீர்மானத்தையும் முறியடிக்க முழு வீச்சில் செயல்பட்ட இந்திய அரசு, இப்போது அய்.நா. குழுவின் விசாரணை அறிக்கையால் அம்பலப்பட்டு நிற்கிறது.

ஈழத் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும் இந்திய அரசு இழைத்த மாபெரும் துரோகத்துக்கு தமிழர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று பெரியார் திராவிடர் கழகம் வற்புறுத்துகிறது.

இனியும், ஈழத் தமிழர்களுக்கு எதிரான துரோக நடவடிக்கைகளைத் தொடராமல் அய்.நா. குழு சுட்டிக் காட்டியுள்ள இலங்கை அரசின் போர்க் குற்றம் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இந்திய அரசு கண்டிக்க வேண்டும்; போர்க் கொடுமைக்கு உள்ளாகியுள்ள ஈழத் தமிழர்களின் நியாயமான உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்று பெரியார் திராவிடர் கழகம் வலியுறுத்துகிறது.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 21.4.2011 வியாழன் அன்று அனைத்து மாவட்ட தலைநகர்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளது. ✦

# ‘தார்ச்சட்டியை தலையில் கவிழ்த்தது காவல்துறை’


*மயிலாடுதுறையில் பெரியார் இயக்கத்தின் உறுதியான தொண்டர் மறைந்த டெய்லர் மாரிமுத்து. சுவர் எழுத்து புரட்சியாளர் சுப்பையாவுடன் நெருக்கமாக குடும்பத்துடன் பழகியவர். தனது சொந்த வாழ்க்கையை எவருடனும் பகிர்ந்து கொள்ள விரும்பாதவர் சுப்பையா. ஆனாலும் டெய்லர் மாரிமுத்துவிடம் கொண்டிருந்த நெருக்கமான கொள்கை நட்பால், சுப்பையாவின் வாழ்க்கைப் பாதையை அவர் பகிர்ந்து கொண்டார். ‘சுவரெழுத்து புரட்சியாளர் சுப்பையா சிந்தனைப் பொறிகள்’ நூலுக்கு தோழர் மாரிமுத்து, மறைவுக்கு முன் வழங்கிய அணிந்துரையை கழக இளைய தலைமுறையினர் அறிவதற்காக இங்கு வெளியிடுகிறோம்.*

காரைக்குடிக்கு அருகில் உள்ள சூரக்குடி கிராமம் தான் சுவரெழுத்து சுப்பையாவின் சொந்த ஊர். இளமையில் அவர் மயிலாடுதுறை அஞ்சலகம் அருகில் தேனீர்க் கடை ஒன்றில் வேலை செய்து வந்தார். அருகிலிருந்த தாயுமானவன் என்ற தையல் கடைக்காரர் பெரியாரைப் புகழ்ந்து பேசியபோது சுப்பையா அவரிடம் எதிர்வாதம் செய்து பெரியாரை தப்பாகப் பேசிவிட்டார். கோபமுற்ற தாயுமானவன் இவரை அடித்து விட்டு, பெரியாரைப் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளார். அதன்பின் பெரியார் என்னதான் சொல்கிறார் எனக் கவனிக்க ஆரம்பித்து அடிக்கடி பெரியாரின் கூட்டங்களுக்குச் சென்று அவர் பேச்சைக் கேட்டு சிந்திக்கத் தொடங்கினார்.

முற்றிய இளமையில் மயிலாடுதுறை நண்பர்கள் இவருக்கு ஒரு துணை வேண்டும் என்று எண்ணி திருமணம் செய்வதென முடிவு செய்தனர். பல நாட்கள் தட்டிக் கழித்து விட்டு இவரும் சரியென தலையாட்டிச் சம்மதித்தார். இந்தப் பொறுப்பை யார் செய்வதென யோசித்து, “பேட்டை தானா” என்று அழைக்கப்பட்ட கழகத்தின் மூத்த தொண்டரும் பெருநிலக்கிழாருமான முத்துப்பேட்டை தருமலிங்கம் அவர்களிடம் சொன்னார்கள். பெரியார் கூட்டம் மயிலாடுதுறையில் நடக்கின்ற போதெல்லாம் முத்துப்பேட்டை தருமலிங்கம் அங்கு வந்து விடுவார். அவர் சொன்னால் சுவரெழுத்துச் சுப்பையாவும் காது கொடுத்துக் கேட்பார் என்பதால் அவரிடம் சொன்னோம். அதே போல, நடிகவேள் எம்.ஆர்.ராதாவிடம் சுப்பையா நெருக்கமாக இருந்தார். எம்.ஆர். ராதாவும், பேட்டைதானாவும் நல்ல நண்பர்கள். (கம்யூனிஸ்டுகளை அரசு ஒடுக்கிய போது, மணலி கந்தசாமி போன்ற பல கம்யூனிஸ்டுகளை அரவணைத்துக் காப்பாற்றியவர்களில் இந்த இருவரும் முக்கியமானவர்கள்) எனவே, எம்.ஆர். ராதாவிடம் சொல்லி திருமண ஏற்பாடு செய்வோம். அவர் மூலம் அறிவித்தால் பணம் சேர நல்ல ஏற்பாடாக இருக்கும் என்று “தானா” அவர்கள் இராதாவிடம் சொல்லி பணம் வசூல் செய்யத் தொடங்கினார். திருமணம் செய்வதென்றால் திருமணச் செலவு மட்டுமின்றி குடியிருக்கக் கூரை வீடாவது வேண்டும். எனவே, கிடைக்கின்ற பணத்தையெல்லாம் அவ்வப்போது சுப்பையா அவர்களிடம் கொடுத்து வந்தோம். அவர் சுவரெழுத்து செய்கின்ற பணிக்கே செலவழித்து விட்டார். பின்னர் திருமண எண்ணமே நீர்த்துப் போய்விட்டது.

ஒரு முறை, சென்னையில் சுவரெழுத்து செய்து கொண்டிருந்தபோது, யாரோ ஒருவர் தந்த புகாரின் பேரில் தார் சட்டியுடன் அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். காவல் நிலையத்தில் காவலர்கள் தார்சட்டியை இவரது தலையில் கவிழ்த்து விட்டனர். யார் உதவியும் கோராமல் உழைப்பின் பரிசு என சுப்பையா பேசாமல் இருந்து விட்டார். இவரைத் தெரிந்தவர் சென்னையில் உள்ள தோழர்களுக்குத் தகவல் சொல்ல தோழர்கள் உடனே காவல் நிலையத்திற்குச் சென்று இவரை விடுவித்ததுடன் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே ஒழிய அடாத செயல் செய்யக் கூடாது எனக் கூறி, அந்தக் காவலரை மன்னிப்புக் கேட்கச் செய்த பின்னரே அவரைத் திரும்ப அழைத்துச் சென்றனர்.

காவலர் செய்த அடாவடித்தனமான செயலால் சுவரெழுத்து சுப்பையாவின் கண்கள் மிக விரைவாக ஒளியை இழந்து மங்கத் தொடங்கியது. அந்தக் குறைந்த பார்வையோடுதான் தனது இறுதிக் காலம் வரை சுப்பையா அவர்கள் தனது பணியைச் செய்தார். பார்வைக் குறைவு அவரது கொள்கையை -



கடமையை - உழைப்பை குறைத்து விடவில்லை.

இராஜகோபாலாச்சாரி குலக் கல்வித் திட்டம் கொண்டு வந்த போது, அதனை எதிர்த்து மன்னார்குடியில் சுவரெழுத்து செய்து வந்தார். அங்கு ஒரு சுவரில் இவர் எழுதிக் கொண்டிருந்தபோது பார்ப்பனர் ஒருவர் இவரைக் குச்சியால் தட்டினார். ஏனென்றால், அது அந்தப் பார்ப்பனரின் வீடு. இவர் எழுதிக் கொண்டே இருந்தார். அந்த பார்ப்பான் தட்டிக் கொண்டே இருந்தான். இவர் எழுதி முடித்த பின் தான் திரும்பிப் பார்த்தார். இவரது வழக்கமே இதுதான். சுவரெழுத்துச் செய்கின்றபோது யாராவது திட்டினாலும் கூட திரும்பியே பார்க்க மாட்டார். தன்னுடைய வேலை முடியும் வரை எந்த இடையூறும் அவரைத் தடுக்க முடியாது. அதுபோலவே, அன்றும் எழுதிய பிறகே திரும்பிப் பார்த்தார்.

“யாரைக் கேட்டுடா என் சுவற்றில் எழுதினாய்” என்று அந்தப் பார்ப்பான் கேட்டான். “யாரை கேட்டுடா இராமானுஜர் பிரச்சாரம் செய்தார்?” என்று சுப்பையா எதிர்க் கேள்வி கேட்டார். அந்தப் பார்ப்பனர் சிறிது நேரம் எதுவும் பேசாமல் யோசித்தபடியே நின்று கொண்டிருந்து விட்டு தானே வீட்டுக்குள் சென்று தாழிட்டுக் கொண்டார்.

அதுபோல, தந்தை பெரியாரைப் பற்றி யாராவது தவறாகப் பேசினால் பொறுத்துக் கொண்டு இருக்க மாட்டார். விபூதி வீரமுத்து என்று ஒரு நபர் இருந்தார். பக்தி நிகழ்ச்சிகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டு பேசுவார். இவரது பேச்சில் நாகரிகமே இருக்காது. கொச்சையாகப் பேசுவதே இவரது பேச்சின் சாரம். இவர் நிகழ்ச்சியில் தந்தை பெரியாரைப் பற்றியும் தரக்குறைவாகப் பேசுவதுண்டு. ஒரு முறை மயிலாடுதுறையில் லாகடம் என்ற பகுதியில் இவரது கூட்டம் போட்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் மயிலாடுதுறை கூறைநாடு பகுதியில் சுவரெழுத்து எழுதும்போது சுப்பையா அவர்கள், “கறுப்புக்கு மறுப்புக் கூறும் வீரமுத்துக்கு செருப்புப் பரிசு” என்று எழுதி விட்டார். இது தோழர்களைச் சூடு ஏற்றும் வகையில் அமைந்துவிட்டது. கூட்டம் தொடங்கி, நடக்கும் போது வீரமுத்து தந்தை பெரியாரைப் பற்றி விமர்சிக்க தொடங்கியவுடன் கூட்டத்தில் கலந்து இருந்த தோழர்கள் மேடையை நெருங்கி தகராறு செய்து அடிதடி ஆகிவிட்டது. விபூதி வீரமுத்து மேடையில் இருந்து தப்பி, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்து கொண்டார். கூட்டம் நிறுத்தப்பட்டு விட்டது.

சுப்பையா அவர்களுடைய எழுத்து உணர்ச்சியைத் தூண்டுவதாக மட்டுமே இருந்ததில்லை. படித்தவர்களை சிந்திக்கத் தூண்டும்; கேள்வி கேட்கத் தூண்டும்; இப்படியும் பதில் சொல்ல முடியுமா! என்று புது வழியை உருவாக்கும். “பார்ப்பானே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு” என்ற முழக்கம் தமிழ்நாட்டில் எழுந்தபோது, திருவாரூர் சுவர்களில் “பார்ப்பானே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு” என்று சுப்பையா அவர்கள் எழுதி வைத்திருந்தார். அப்படி எழுதப்பட்டிருந்த சுவரில் சிலர், “அவர்கள் எங்கே போவார்கள்?” என்று அருகிலேயே எழுதி வைத்து விட்டனர். அடுத்த நாளே அவர்கள் எதிர்த்து எழுதிய இடத்திலேயே “மேலே ஏழு லோகம், கீழே ஏழு லோகம் இருக்கிறது என்கிறான்களே பார்ப்பான்கள். அங்கே ஏதாவது ஒரு லோகத்துக்குப் போகட்டுமே, உனக்கேன்டா அந்தக் கவலை” என்று மடக்கி எழுதி வைத்தார். பின்னர் அதற்கு எதிர்க் கேள்வி வரவில்லை.

அவருடைய சுவரெழுத்து எத்தனையோ பேரை தந்தை பெரியாரின் இயக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. அவரைப் போல சுவற்றில் சிந்தனைகளை எழுதிக் குவித்தவர் இதுவரை யாருமே இல்லை.

# வன்னியில் ஒரு லட்சம் தமிழர்களை ராணுவம் படுகொலை: ‘சேனல் 4’ அம்பலப்படுத்துகிறது

இலங்கை அரசின் இனப் படுகொலைகளை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி வரும் லண்டன் தொலைக்காட்சி ‘சேனல்-4’. அந்தத் தொலைக்காட்சி மற்றொரு அதிர்ச்சியான தகவலை ஆவணங்களுடன் கடந்த சனிக்கிழமை ஏப்.16 ஒளிபரப்பியுள்ளது. ஈழத்தின் இறுதி கட்டப் போரில் ஒரு லட்சம் அப்பாவித் தமிழர்கள் என்ன ஆனார்கள் என்பதை இலங்கை அரசு மூடி மறைத்துள்ளதை அம்பலப்படுத்தியுள்ளது.

வன்னிப் பகுதியில் அரசு மக்கள் தொகை பதிவேட்டில் 2008 ஆம் ஆண்டு நடுவில் 4,30,000 பேர் இருந்தனர். அரசு பதிவேடுகள் இந்த புள்ளி விவரத்தைத் தந்துள்ளன. இறுதி கட்டப் போரில் வன்னிப் பகுதியை இராணுவம் சுற்றி வளைத்தபோது அங்கிருந்து புலம் பெயர்ந்து வந்தவர்களாக அய்.நா. ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள கணக்கு 2,90,000 பேர் மட்டுமே!

அண்மையில் வன்னிப் பகுதிக்கு நேரில் சென்று சேனல்-4 செய்தியாளர்கள் இதை உறுதி செய்துள்ளனர். வன்னிப் பகுதிக்குள்ளிருந்த 40 சதவீத மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 60 சதவீத மக்களே முகாமுக்கு வந்துள்ளனர். போர் நடந்தபோது அய்.நா.வின் அதிகாரபூர்வ பேச்சாளராக இருந்த கோர்டன் வெய்ஸ் (Gorden Weiss) அப்போதே, போரில் இறந்தவர்கள் எண்ணிக்கை அதிர்ச்சி தரக் கூடியதாக இருக்கும் என்று கூறியிருந்தார்.

இப்போது அய்நா. குழுவின் அறிக்கை வெளிவந்தவுடன், வெய்ஸ் ஆஸ்திரேலியா வானொலிக்கு அளித்த பேட்டியில் இந்த அறிக்கையை அய்.நா. புறக்கணித்து விட முடியாது. இலங்கையின் போர்க் குற்றத்தை மறைக்க முயன்ற அய்.நா. உறுப்பு நாடுகள் இப்போது கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.

இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் சர்வதேச விசாரணைகள் நடைபெறாமல் தடுக்கும் அத்தனை முயற்சிகளிலும் ஈடுபட்டன. அடுத்து, மேலும் விரிவான, உறுதியான மறுக்க முடியாத ஆவணங்களைக் கொண்ட அறிக்கையை தயார் செய்ய வேண்டும்.

நிச்சயமாக இலங்கை அரசு இதற்கு ஒத்துழைக்காது. ஆனால், இலங்கை அரசே நடத்தும் விசாரணைகள் பயன் தராது. எனவே சர்வதேச மட்டத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். வெய்ஸ் இப்போது பதவி ஓய்வு பெற்று விட்டார்.

## அய்.நா. நியமித்த குழு அறிக்கை

# போர்க் குற்றம் புரிந்த ராஜபக்சே: பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்

***இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போரில் நடந்துள்ள போர்க் குற்றங்கள், வன்னி முகாம்களில் நடந்த அத்து மீறல்கள் ஆகியவற்றின் மீது பன்னாட்டு அமைப்பு கண்காணிப்பின் கீழ் இலங்கை அரசு விசாரணை நடத்தி, போர்க் குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.***

இலங்கையில் நடந்த போரில் நடந்த அத்து மீறல்கள், படுகொலைகள் குறித்து பன்னாட்டு மனித உரிமை சட்டங்களின்படி எப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து தனக்கு ஆலோசனை வழங்குமாறு ஐ.நா.பொதுச் செயலர் பான் கி மூன் அமைத்த மூன்று பேர் கொண்ட நிபுண்ாகுழு தனது அறிக்கையை பான் கி மூனிடம் அளித்தது.

அக்குழுவின் அறிக்கை அப்போதே ஐ.நா.விற்கான இலங்கை அரசின் இரண்டாம் நிலை தூதர் ஷாவேந்திர சில்வாவிடம் அளிக்கப்பட்டது. இலங்கை அரசின் பரிசீலனையில் அந்த அறிக்கை உள்ள நிலையில், அதன் முழு விவரத்தையும் இலங்கை அரசு சார்பு ஏடான 'ஐலண்ட்' வெளியிட்டுள்ளது.

இந்தோனேசிய அரசின் முன்னாள் தலைமை வழக்குரைஞரான மார்சுகிதாருஸ்மான் தலைவராகவும், தென் ஆப்ரிக்காவின் யாஷ்மின் சூக்கா, அமெரிக்க சட்ட நிபுணர் ஸ்டீவன் ராட்னர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் கொண்ட அக்குழு அளித்த அறிக்கையின் முக்கிய விவரங்கள் வருமாறு:

1. **இலங்கை அரசு கூறியது உண்மையல்ல:** விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களை மீட்க மனிதாபிமான நடவடிக்கையைத்தான் அரசு மேற்கொண்டது என்றும், அதனை ஒரு அப்பாவி கூட கொல்லப்படாத நிலையில் நிறைவேற்றுவதுதான் நோக்கம் என்றும் இலங்கை அரசு கூறியதற்கு நேர் மாறாகவே உண்மை இருக்கிறது என்பதையே எங்களிடம் உள்ள ஆதாரங்கள் தெளிவாக்குகின்றன. இந்த ஆதாரங்கள் உண்மையானவை என்று நிரூபிக்கப்பட்டால், அங்கு மிகப் பெரிய அளவிலான போர்க் குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளது உறுதியாகும். இதனை இலங்கை அரசு படைகள் செய்துள்ளன. போர்க் காலத்திலும் மனித கண்ணியத்தைக் காக்க வேண்டும் என்ற நோக்ககோடு உருவாக்கப்பட்ட பன்னாட்டுச் சட்டங்கள் அனைத்துக்கும் எதிரான இந்தப் போரில் நடத்தப்பட்ட பெரியத் தாக்குதல் நிரூபிக்கிறது.
2. 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் தேதி வரை நடந்த இறுதி கட்ட யுத்தத்தில் பெருமளவில் நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல்களில் ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 3,30,000 மக்கள் நாளுக்கு நாள் சுருங்கி வரும் நிலப் பகுதியில், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் போரில் மக்கள் பெருமளவிற்கு கொல்லப்பட்டதை வெளியே கொண்டு செல்ல முயன்ற ஊடகங்களை இலங்கை அரசு மிரட்டி அடக்கியுள்ளது. அப்படிப்பட்ட மிரட்டல்களுக்கு வெள்ளை வேன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
3. அரசு அறிவித்த 3 மக்கள் பாதுகாப்பு வளையப் பகுதிகளுக்கு வருமாறு போர் நடந்த பகுதியில் இருந்த மக்களை அழைத்துவிட்டு, அப்பகுதியின் மீதே இலங்கை அரசு படைகள் பெரும் தாக்குதல் நடத்தியுள்ளன. கனரக ஆயுதங்களை பயன்படுத்த மாட்டோம் என்று உறுதியளித்துவிட்டு, அப்படிப்பட்ட ஆயதங்களை பெருமளவிற்கு இலங்கை அரசு பயன்படுத்தியுள்ளது. ஐ.நா. அமைத்திருந்த உணவு வழங்குமிடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமுற்றவர்களை அழைத்துச் செல்ல வந்த செஞ்சிலுவைச் சங்க கப்பலுக்கு அழைத்துவரப்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவை யாவும், முன்னறிவிப்பு அளிக்கப்பட்ட பகுதிகளாகும். இறுதிக் கட்ட போரில் இலங்கை அரசு படைகளின் பீரங்கித் தாக்குதலிலேயே பெருமளவிற்கு மக்கள் கொல்லப்பட்டனர்.
4. வன்னிப் பகுதியில் இயங்கி வந்த மருத்துவமனைகள் அரசு படைகளால் திட்டமிட்ட தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மருத்துவமனைகளின் இருப்பிடங்கள் அனைத்தும் அரசுக்கு தெரிந்தவையே அவ்வாறிருந்தும் அவைகள் தொடர் தாக்குதலிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. போர் நடந்த பகுதியில் சிக்கியிருந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் எதுவும் சென்று சேராமல் திட்டமிட்டு தடுத்துள்ளது இலங்கை அரசு. உணவு, மருந்துப் பொருள்கள், அவசர அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் என்று எதையும் அனுமதிக்கவில்லை. போர் நடந்த பகுதியில் சிக்கியிருந்த மக்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டியே இப்படிப்பட்ட உதவிகளை இலங்கை அரசு மறுத்துள்ளது. இதனால் 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே வரை பல பத்தாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். குறிப்பாக கடைசி இரண்டு நாட்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.
5. போர் முடிந்த பிறகு தங்களுடைய கட்டுப்பாட்டிற்கு வந்த மக்களை மேலும் துன்புறுத்தலுக்கு இலங்கை அரசு ஆளாக்கியுள்ளது. விடுதலைப் புலிகள் என்ற ஐயத்திற்குள்ளானவர்கள் எவ்வித வெளி பார்வையாளர் கண்காணிப்பும் இன்றி சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். விடுதலைப் புலிகள் என்ற அடையாளம் காணப்பட்டவர்கள் அப்போதே படுகொலை செய்யப்பட்டுள்ளனர். புலிகள் இயக்கத்தின் பெண் போராளிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர். இவையாவும் இலங்கை அரசு அமைத்த ஆணையத்திலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. போரினால் இடம் பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் ஒரே இடத்தில் நெருக்கமாக அமைக்கப்பட்ட முகாம்களில் சிறை வைக்கப்பட்டனர். குறைவான நிலப் பகுதியில் பல இலட்சக்கணக்கான மக்கள் அடைத்து வைக்கப்பட்டதால் அங்கு மோசமான சூழல் உருவானது. அவர்களின் சமூக, பொருளாதார உரிமைகள் அத்துமீறலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இதனால் பல உயிர்கள் பலியாயின. இந்த முகாம்களில் இருந்த பலர் விசாரணை என்ற பெயரில் சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் என்ற ஐயப்பாட்டிற்குட்பட்டவர்கள் வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் இருப்பிடங்கள் தெரிவிக்கப்படவில்லை. அங்கு அவர்கள் மேலும் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டனர்.

எனவே, இலங்கை அரசு கீழ்கண்ட அத்து மீறல்களை செய்துள்ளதாக நம்பத் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் இந்த நிபுணர் குழு முடிவு செய்கிறது:

1. பீரங்கித் தாக்குதல்கள் மூலம் பொது மக்களை கொன்று குவித்துள்ளது.
2. மருத்துவமனைகள் உள்ளிட்ட மனிதாபிமான பகுதிகளை குறி வைத்து தாக்குதல்களை நடத்தியுள்ளது.
3. மனிதாபிமான உதவிகளை மறுத்துள்ளது.
4. இடம் பெயர்ந்த மக்களிடமும், புலிகள் என்று ஐயப்பட்டவர்களிடமும் மனித உரிமை மீறல்களைச் செய்துள்ளது.
5. போர் நடந்த பகுதிக்கு வெளியே, ஊடகங்கள் மீதும், அரசை விமர்சித்தவர்கள் மீதும் மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியுள்ளது.

இலங்கையில் நடந்த போர் குறித்து விசாரிக்க இலங்கை அதிபர் அமைத்த ஆணையம் (கற்ற பாடங்கள் மற்றும் சமசரத்துக்கான ஆணையம்)

4 ஆம் பக்கம்

### அய்.நா.வின் தீர்மானம் மாற்றப்படுமா?

2009, மே 26, 27 ஆகிய நாட்களில் அய்.நா.வில் அய்ரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் 17 நாடுகள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தன. இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க வேண்டும். முகாம்களில் வதைபடும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைக் கொண்டு வரவேண்டும் என்று அத் தீர்மானம் வலியுறுத்தியது.

சுவிட்சர்லாந்து, செர்மனி, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, கனடா, சிபி, மெக்சிக்கோ, போஸ்னியா, கெர்சகோவினா, நெதர்லாந்து, சுலோவேக்கியா, சுலோவேனியா உள்ளிட்ட 17 நாடுகள், இத் தீர்மானத்தைக் கொண்டு வந்தன.

இத் தீர்மானத்தை முறியடிப்பதில் இந்தியா தீவிரமாக செயல்பட்டது. இந்தியாவின் 'பகைமை' நாடுகளான சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட 22 நாடுகள் ஆதரவைத் திரட்டி, அத் தீர்மானத்தை இந்தியா முன்னின்று தோற்கடித்தது. தீர்மானத்தை தோற்கடித்ததோடு மட்டுமல்ல; இலங்கை அரசே கொண்டு வந்த ஒரு தீர்மானத்தை ஆதரித்தது; போரில் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகளை வன்மையாக அத் தீர்மானம் கண்டித்தது. போரில் கொன்று குவிக்கப்பட்ட அப்பாவித் தமிழர்கள் பற்றியோ, அகதிகள் முகாமில் அல்லல்படும் தமிழர்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்வது பற்றியோ அத் தீர்மானத்தில் எதுவும் இல்லை.

படுகொலைகள் – வன்முறைகள் எல்லாம் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்றும், அதில், பிற நாடுகள் தலையிடக் கூடாது என்றும் கூறிய அத்தீர்மானத்தை, இந்தியா உள்ளிட்ட நாடுகள் – ஆதரித்து நிறைவேற்றச் செய்தன. இது அய்.நா.வுக்கே தலைகுனிவு என்று சர்வதேச ஏடுகளான 'பைனான்சியல் டைம்ஸ்', தி 'டைம்ஸ்' ஆகிய நாளேடுகள் கண்டித்தன.

அந்தத் தீர்மானத்தை (மே 2009, அய்.நா. சிறப்பு கூட்ட தீர்மானம் எண்.A/HRC/8-11/L.1/Rev2) – அய்.நா. குழு அம்பலப்படுத்தியுள்ள உண்மைகளின் அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும் என்றும், இதற்கு, அய்.நா. மனித உரிமைக் குழுவை கூட்ட வேண்டும் என்றும், அய்.நா. குழு இப்போது தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

## நாடு கடந்த தமிழீழ அரசு வற்புறுத்தல்

# இலங்கை அதிபரையும் – ராணுவ அதிகாரிகளையும் கூண்டில் ஏற்ற வேண்டும்

நாடு கடந்த தமிழீழ அரசின் முதன்மை அமைச்சர் உருத்திர குமார் விடுத்துள்ள அறிக்கை:

அய்.நா. குழுவின் இந்த அறிக்கை நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும், மற்றையோரும் ஒட்டு மொத்தத் தமிழர் படுகொலை சம்பந்தமாகக் கூறி வந்ததை உறுதிப்படுத்துகின்றது. போர்க் குற்றங்கள், மனிதாபிமானக் குற்றச் செயல்கள் ஆகியவை பற்றி அறிக்கை தெளிவுபடக் குறிப்பிடுகின்றது. இவ்வறிக்கை வெளியனதுடன் சிறிலங்கா அரசின் தமிழர் படுகொலை சம்பந்தமான கண் துடைப்புப் பிரச்சாரம் தோல்வியுற்றுள்ளது. இறுதியாக, சிறிலங்காவின் தலைவர்கள், அவர்கள் தமிழர்களின் மேல் நடத்திய கொலைகளுக்குரிய விலையைக் கொடுப்பதுடன் நீதி வழங்கப்படும் எனும் நம்பிக்கை ஏற்படுவதற்குக் காரணமாயும் அமைகிறது.

அறிக்கையில், கற்பழிப்பு, சட்டத்திற்கு முரணான உயிர்ப் பறிப்பு, ஆட்கடத்தல், பரந்துபட்ட குண்டுத் தாக்குதல், உணவு மருந்து மறுப்பு, ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் மிரட்டல் முயற்சிகள் ஆகியன கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. சிறிலங்கா அரசாங்கத்தின் மீது நம்பிக்கையற்ற தமிழ் மக்கள் ஆதியிலிருந்தே அபிப்பிராயப்பட்டது போன்று அரசால் ஏற்படுத்தப்பட்ட "கற்ற பாடங்களும் சமரசத்திற்குமான ஆணையம்" (LLRC) பலத்த விமர்சனங்களுக்கும், கண்டனங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. "கற்ற பாடங்களும் சமரசத் திற்குமான ஆணையம்" கணிசமான அளவு குறைபாடுகளுடையது என்பதுடன் சர்வதேசத் தரத்திற்கு அமைய நம்பகத் தன்மையற்றதும், செயற்திறன் அற்றதும் ஆகும்" என அறிக்கை கூறுகிறது.

சிறிலங்கா அரசாங்கம் நடாத்திய தமிழ்ப் பொது மக்களின் படுகொலைகள் சம்பந்தமான விவர அறிக்கை ஒன்று ஏற்கனவே ஐ.நா. குழுவிற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினரால் சமர்ப்பிக்கப்பட்டதுடன், நடேசன் அவர்களின் மகனுடைய நேர்முக வாக்குமூலத்திற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நடேசன் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்தவர். அவருடைய மகனது வாக்குமூலம், நடேசனின் இறுதிக் கணங்கள் சம்பந்தமான உண்மையான தகவல்கள் அடங்கியது. இன்னுமொரு நம்பகரமான சாட்சியம், கேணல் ரமேஷ் மனைவியால் வழங்கப்பட்டது.

சிறிலங்கா அரச தலைவர்களையும், படைத் தலைவர்களையும் கூண்டிலேற்ற இதுவே முதற்படி என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நம்புவதுடன் இவர்கள் நாளடைவில் போர்க் குற்றங்கள், மனித விரோதக் குற்றங்கள், இனப் படுகொலைக் குற்றங்கள் ஆகியவற்றிற்கும் முகம் கொடுத்தே ஆக வேண்டுமெனவும் நம்புகின்றது.

இவ்வறிக்கை, இறுதிப்போர் நடைபெற்ற காலத்திலும் போர் முடிவுற்ற அண்மைக் காலத்திலும் ஐ.நா.வினதும், மனித உரிமைகள் குழுவினரதும் மோசமான நடவடிக்கைகளையும் கண்டிக்கத் தவறவில்லை. இவ்வறிக்கை ஐ.நா.வின் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த உந்துதலாக அமையுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுக்கும் கருத்துப் பரிமாறலை இவ்வறிக்கை ஆரம்பித்து வைக்கும் என்பது எங்கள் உளமார்ந்த நம்பிக்கை. தமிழ் தேசத்தையும், சிங்கள தேசத்தையும் ஒவ்வாத பிணைப்பால், நல்ல அயலவர்களாக நிரந்தர முரண்பாட்டுப் போருடன் கூடியிருக்கச் செய்வது உசிதமல்ல என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இங்கே கோடிட்டுக் காட்டுகிறது. ✦

### அய்.நா. குழுவை அவமதித்த ராஜபக்சே

அய்.நா. பொதுச் செயலாளர் நியமித்த குழு இலங்கையில் விசாரணை நடத்த அந்நாட்டு அரசு அனுமதி மறுத்து விட்டது. இது அய்.நா.வை அவமதிக்கும் செயலாகும். இந்நிலையில் இறுதி கட்டப் போரில் சிக்கி உயிர் பிழைத்து, அங்கிருந்து தப்பி வந்தவர்களையும் உலக நாடுகளில் போருக்குப் பிறகு, குடிபெயர்ந்தவர்களையும் ராணுவத்தின் தாக்குதலில் உடன்பாடு இல்லாத பல ராணுவ அதிகாரிகளையும் சந்தித்து இந்தக் குழு அறிக்கையை தயாரித்துள்ளது.

### அய்.நா. குழு அறிக்கை: தி.மு.க. – அ.தி.மு.க. மவுனம் ஏன்?

இலங்கை அரசு தமிழர்கள் மீதான போரில், போர்க் குற்றம் இழைத்துள்ளது என்ற குற்றச்சாட்டு, 'மறுக்க முடியாதது' என்று அய்.நா. பொதுச் செயலாளர் நியமித்த குழு – அறிக்கை வெளிவந்த தமிழ்நாட்டில், பெரியார் திராவிடர் கழகம், தமிழ் ஈழ ஆதரவு அமைப்புகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருத்து தெரிவித்துள்ள நிலையில், முக்கிய அரசியல் கட்சிகளான தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியோ, அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவோ, எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் உறுதியாக மவுனம் சாதிக்கிறார்கள் என்று 'டெக்கான் கிரானிக்கல்' (ஏப். 19) நாளேடு சுட்டிக் காட்டியுள்ளது.

2009 நாடாளுமன்ற தேர்தலில் ஈழத் தமிழர்களுக்காக தி.மு.க. தலைவர் உண்ணாவிரதம் இருந்ததையும், அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலாளர், இந்திய ராணுவத்தை அனுப்பி தமிழ் ஈழத்தை அமைக்க பாடுபடுவேன் என்று பேசியதையும், அந்த ஏட்டின் செய்தியாளர் மு. குணசேகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

# செஞ்சிலுவை சங்கம், மருத்துவமனைகள் மீதும் இராணுவம் தாக்குதல்

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பன்னாட்டு அளவில் ஏற்கத்தக்க சுதந்திரமான, நடுநிலையான ஆணையமாக இல்லை. அக் குழுவில் இடம் பெற்ற உறுப்பினர்கள் சிலரே அதன் நோக்கத்திற்கு எதிரானவர்களாக உள்ளனர். போரில் நடந்த மனித உரிமை, போர்க் குற்ற அத்துமீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் நோக்குடனோ அல்லது இப்போருக்கு அடிப்படையான காரணங்களை ஆராயவோ இந்த ஆணையம் அமைக்கப்படவில்லை. அது அரசியல் ரீதியான பொறுப்பு மற்றும் இணக்கப்பாடு குறித்த விஷயங்களுக்காகவே அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை அது நடத்திய விசாரணையில் இருந்து, அது உண்மையை கண்டறியும் நோக்குடன் செயல்படவில்லை என்பதை நிரூபிக்கிறது. எனவே, இந்த ஆணையம்,போரில் நடந்த குற்றங்களுக்குக் காரணமானவர்களை பொறுப்பாக்க பன்னாட்டு தரத்தில் அமைக்கப்பட்டதன்று. எனவே, அது இலங்கை அதிபரும், ஐ.நா. பொதுச் செயலரும் ஒப்புக் கொண்ட உறுதி மொழியை நிறைவேற்று வதாக இல்லை.

**ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகள்**

- போர்க்காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் மனித நல மற்றும் மனித உரிமைக் குற்றங்கள் குறித்து, பன்னாட்டு, மனிதாபிமான மனித உரிமை சட்டங்களின்படி நியாயமான விசாரணையை அரசு உடனடியாக துவக்க வேண்டும்.
- வன்னி போரில் பாதிக்கப்பட்டவர்கள், தப்பியவர்கள் ஆகியோருக்கான குறுகிய கால நடவடிக்கைகளை செயல்படுத்த வேண்டும். அரசு மற்றும் துணை ராணுவப் படையினரின் அத்து மீறல்களை நிறுத்துவது, போரில் இறந்த போனவர்களின் உடல்கள், அஸ்தி உள்ளிட்டவற்றை உறவினர்களிடம் ஒப்படைப்பது, இறந்து போனவர்களுக்கான இறப்புச் சான்றிதழ்களை உரிய மரியாதையுடன் எந்தக் கட்டணமும் இல்லாமல் வழங்குவது, போரில் பிழைத்தவர்களுக்குத் தேவையான மனநல ஆலோசனைகளைத் தருவது, முகாம்களில் வசிப்பவர்களை உடனடியாக விடுவிப்பது, மறுகுடியமர்வுப் பணிகளை மேற்கொள்வது, இடைக்கால நிவாரண உதவிகளைச் செய்வது போன்றவை இதில் அடக்கம்.
- கடத்தப்பட்டு பின்னர் காணாமல் போனவர்கள் தொடர்பான உண்மை நிலையை அறிவிக்க வேண்டும்.
- அவசர நிலையைத் திரும்பப் பெற வேண்டும், சர்வதேச சட்டங்களுக்குப் பொருந்தும் வகையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களைச் செய்ய வேண்டும்.
- விடுதலைப் புலிகள் என்கிற சந்தேகத்தின் பேரில் பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்களை வெளியிட வேண்டும். அவர்கள் மீது சட்ட ரீதியாகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீதிமன்றத்தில் அவர்கள் சார்பில் வழக்குத் தொடுப்பதற்கு குடும்பத்தினருக்கு அனுமதி அளிக்க வேண்டும். கொடிய குற்றங்களுக்கான ஆதாரங்கள் இல்லாதவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.
- அரசே நிகழ்த்தும் வன்முறைகளை நிறுத்த வேண்டும். மக்கள் கூடுவதற்கும், இடம் பெயர்வதற்கும், கருத்துகளைத் தெரிவிப்பதற்கும் எதிராக நடவடிக்கைகள் எடுப்பது நிறுத்தப்பட வேண்டும்.
- அய்.நா. மனித உரிமைக் குழு இலங்கையின் போர்க் குற்றங்களை மறைத்து, 'உள்நாட்டுப் பிரச்சினையில் பிற நாடுகள் தலையிடக் கூடாது' என்று நிறைவேற்றிய தீர்மானத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.
- இனப் பிரச்னை, பல்வேறு மனித உரிமை மீறல்கள் நடந்த கடுமையான போர் உள்ளிட்டவை தொடர்பாக அனைத்து சமூகத்தினரும் பங்கேற்று ஆய்வு செய்யும் நடவடிக்கைகளை அரசு உடனடியாகத் தொடங்க வேண்டும்.
- இறுதி கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக அரசு தனது பொறுப்பையேற்று, அதுபற்றி அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்.
- போரின்போது நடந்த மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் வகையிலான திட்டங்களை அமல்படுத்த வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இதில் சிறப்பு; கவனம் அளிக்கப்பட வேண்டும்.

இலங்கைக்கு மேலும் அழுத்தம் கொடுக்கும் வகையில் இவ்வறிக்கை அமைந்துள்ள நிலையில், இவ்வறிக்கை தொடர்பாக மௌனம் காப்பதே நல்லது என இலங்கை அரசு கருதுவதாகவும், எது நடந்தாலும் தாம் அதனைப் பற்றி அலட்டிக் கொள்ளாது இருப்போம் என அவர்கள் முடிவெடுத்துள்ளதாகவும் அரசு வட்டாரங்களில் பேசப்படுகிறது. ✦

# இனப்படுகொலையில் இந்தியாவின் ரகசிய உதவிகள்

*‘என்.டி.டிவி’ எனும் தொலைக்காட்சி நிறுவனத்தின் இராணுவச் செய்தியாளர் நிதின் ஆனந்த் கோகலே. ஈழத்தில் நடந்த தமிழர்களுக்கு எதிரான போர்க் காலத்தில் களத்திலிருந்து செய்திகளை சேகரித்தவர். அவர் தனது அனுபவங்களை இலங்கை : சமாதானத்தி லிருந்து போர் வரை (Srilanka : From war to peace) என்ற தலைப்பில் நூலாக எழுதியுள்ளார். அதில் இலங்கை அரசின் இனப் படுகொலைக்கு இந்திய அரசு செய்த உதவிகளை பட்டியலிட்டுள்ளார். நூலிலிருந்து சில முக்கிய பகுதிகள்:*

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ராஜபக்சே இலங்கையின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அடுத்த மாதமே அவர் இந்தியாவுக்கு வருகை தந்தார். அப்போது விடுதலைப் புலிகளை அழிக்க அவர் உறுதியுடன் இருந்ததும், அதை மிகப் பெரிய லட்சியமாக கொண்டிருந்ததையும் இந்திய அரசு புரிந்து கொண்டது.

இதைப் பயன்படுத்திக் கொள்ள இந்தியத் தரப்பு முடிவு செய்தது. தொடக்கத்தில் பேச்சு வார்த்தை மூலம் விடுதலைப் புலிகளுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுமாறு அவருக்கு அறிவுரை கூறப்பட்டது. ஆனால் அதனால் எந்தப் பயனும் விளையாது. விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையையே சாக்காக வைத்து மீண்டும் ஆயுதங்களை குவிப்பார்கள். ஒன்று கூடுவார்கள். சண்டை முடிவின்றி நீளும் என்று இந்தியத் தரப்பிடம் வாதிட்டார் ராஜபக்சே.

அவரது பேச்சை இந்திய அரசும் ஏற்றுக் கொண்டது. அதே சமயம் விடுதலைப் புலிகளுடன் மோதுவதாக இருந்தால் ஒரே மூச்சாக சண்டையிட்டு வெற்றி பெற வேண்டும். அவர்களிடம் இலங்கை படையினர் சிக்கித் தவிக்கும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது. அதற்கு இலங்கை படையினரைப் பலப் படுத்திக் கொண்டு களம் இறங்க வேண்டியது அவசியம் என்பதையும் ராஜபக்சே இந்தியத் தரப்பிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு வெளிப்படையான ஆயுத உதவிகளை, ராணுவ ரீதியிலான உதவிகளைச் செய்வ தில்லை என்ற முடிவை காங்கிரஸ் கூட்டணி அரசு எடுத்தது.

2006 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்தியா தனது மறைமுக ராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்கத் தொடங்கியது. முதலில் ஐந்து எம்.17 ரக ஹெலிகாப்டர்களை இலங்கை விமானப்படைக்கு இந்தியா ரகசியமாக அனுப்பி வைத்தது. ஆனால் இந்த ஹெலிகாப்டர்களை இலங்கை விமானப் படையின் பெயரில்தான் பயன்படுத்த வேண்டும். இந்தியாவின் பெயர் இதில் வந்துவிடக் கூடாது என்று இலங்கைக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது.

அதற்கு முன்பாக 2002 ஆம் ஆண்டு இந்திய கடலோரக் காவல்படை, இலங்கைக்கு சுகன்யா என்ற அதி நவீன கடல் ரோந்துப் படகை வழங்கியிருந்தது.

இந்தியா வாங்கிய ஹெலிகாப்டர்கள்தான் இலங்கைக்குப் பேருதவியாக இருந்ததாக இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர். இலங்கை ராணுவம் அமைத்த எட்டு வீரர்களைக் கொண்ட சிறு சிறு குழுக்கள், ராணுவத்தில் ஆழ் ஊடுருவும் பிரிவினர் உள்ளிட்டோரை புலிகளின் பகுதிகளுக்கு கொண்டு செல்ல இந்த ஹெலிகாப்டர்கள் உதவியாக இருந்தன.

இலங்கை ராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவினர் திறமையாக செயல்பட இந்தியா வழங்கிய ஹெலிகாப்டர்கள் பேருதவியாக இருந்ததாக இலங்கை இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய மூன்று பேரையும் சரி சமமாகப் பயன்படுத்திக் கொள்ள திட்டமிட்ட ராஜபக்சே, அவரது சகோதரர் பசில், கோத்தபாயா மற்றும் அதிபரின் செயலாளர் லலித் வீரதுங்கா ஆகியோரைக் கொண்ட குழுவை அமைத்தார்.

இந்தக் குழுவின் வேலை தினசரி இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு போர் குறித்த நிலவரங்களை கூறுவது.

அதேபோல இந்தியத் தரப்பிலும் ஒரு ரகசியக் குழு அமைக்கப்பட்டது. சிவசங்கர மேனன், எம்.கே. நாராயணன், பாதுகாப்புத் துறைச் செயலாளர் விஜய் சிங் ஆகியோர் அந்தக் குழுவில் இடம் பிடித்தனர்.

இந்த இரு குழுக்களும் தினசரி போர் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொண்டன. ஒருவருக் கொருவர் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர். இரு குழுக்களும் பெரும்பாலும் தொலைபேசி மூலம் பேசிக் கொண்டாலும் கூட அவ்வப்போது நேரிலும் சந்தித்துக் கொள்ளத் தவறவில்லை. மேலும் ஒவ்வொரு சந்திப்புக்கும் ஏதாவது ஒரு காரணம் கூறி வைக்கப்பட்டது. ஆனால் இவர்களின் ஒவ்வொரு சந்திப்பின் போதும் புலிகள் அழிப்பு குறித்துத்தான் முக்கியமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

2007-09 ஆம் ஆண்டுகளில் இலங்கைக் குழு இந்தியாவுக்கு ஐந்து முறை வந்தது. இந்தியக் குழு 3 முறை இலங்கை போனது.

இந்தியக் குழுவின் பயணங்களிலேயே மிகவும் முக்கியமானது 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிவசங்கர மேனன் தலைமையிலான குழு இலங்கை போனதுதான். அப்போது விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் விறுவிறுப்படைந்திருந்தது. 2008 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கொழும்பில் சார்க் அமைப் பின் 15 ஆவது மாநாடு நடக்கவிருந்தது. இந்நிலையில் சூன் மாதம் இந்திய விமானப்படை மூலம் ரகசியமாக வந்து சேர்ந்தனர் நாராயணன், மேனன், விஜய் சிங் குழுவினர். இவர்களது வருகை ரகசியமாக வைக்கப் பட்டது. மேலும் பாதுகாப்பு என்கிற பெயரில் இந்தியப் பாதுகாப்புப் படையினரை இலங்கை அனுமதிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

## அய்.நா.வில் படுகொலைகளை மறைந்தவர் விஜய் நம்பியார்

*அய்.நா. குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து உலகப் புகழ் பெற்ற ‘டைம்ஸ்‘ ஏட்டின் எழுத்தாளர் கேத்தரின் பிலிப். அந்த ஏட்டில் கட்டுரை ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை (ஏப்.15) எழுதியுள்ளார். அதில் பான்கிமூன் தலைமை ஆலோசகராக இருந்த விஜய நம்பியார், கொழும்புலிருந்த அய்.நா. அலுவலக ஊழியர்களுக்கு, “படுகொலை செய்யப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கையை, அய்.நா.வுக்கு தெரிவிக்க வேண்டாம்; இதனால் இலங்கை அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டு விடும் என்று உத்தரவிட்டிருந்தார். இந்த விஜய் நம்பியாரின் சகோதரரான சதீஷ் நம்பியார், இலங்கை ராணுவத்துக்கு ஆலோசகராக ஊதியம் பெற்றுக் கொண்டு வேலை செய்தார். இதில் அய்.நா. மீது படிந்துள்ள கறையை துடைக்கவே முடியாது என்று கேத்தரின் பிலிப் எழுதியுள்ளார்.*

அதன்படி இந்தியக் கடற்படைக் கப்பல்கள் விமான எதிர்ப்புப் பீரங்கிகள், ஹெலிகாப்டர்கள் ஆகியவை கொழும்பு மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் குவிக்கப்பட்டன.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான இந்தியக் குழு கொழும்பு வந்து சேர்ந்தபோது பத்திரிகையாளர் குழுவில் நானும் இடம் பெற்றிருந்தேன். இதுபோன்ற ஒரு பாதுகாப்பை நான் அதுவரை இலங்கையில் பார்த்ததே இல்லை. அந்த அளவுக்கு வரலாறு காணாத பாதுகாப்பு முற்றுகையில் இருந்தது இலங்கை தலைநகர். கிட்டத்தட்ட கொழும்பு நகரம் மூடப்பட்டதைப் போன்ற ஒரு சூழ்நிலைக் காணப்பட்டது.

பண்டாரநாயகே விமான நிலையத்திலிருந்து மாநாடு நடந்த இடத்திற்கு மன்மோகன் சிங் உள்ளிட்ட இந்திய அதிகாரிகள் இந்திய விமானப் படை ஹெலி காப்டர்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். அனைத்து சாலைகளும் பல மணி நேரத்திற்கு மூடப் பட்டன. பாதுகாப்பு கெடுபிடி காரணமாக கொழும்பில் வசித்து வந்த பலர் வீடுகளை விட்டே வெளியேறியதும் எனக்கு நினைவில் உள்ளது. பிரச்சனை எதுவும் இல்லாமல் சார்க் மாநாடு முடிந்தது.

இந்த பயணத்தின்போது இந்திய அதிகாரிகள், விடுதலைப் புலிகளுடனான போரின் நிலவரம் குறித்து முக்கியமாக ஆலோசித்தார்கள். இலங்கை ராணுவ தளபதி பொன் சேகா, கடற்படைத் தளபதி கரன்ன கோடா ஆகியோருடன் இந்தியக் குழு ரகசியமாகச் சந்தித்துப் பேசியது.

இந்தச் சந்திப்பின்போது சீனா மற்றும் பாகிஸ்தான் தலையீடுகள் குறித்து இந்தியத் தரப்பினர் கவலை தெரிவித்தனர். ஆனால் இந்தியா ஆயுத உதவிகளைச் செய்ய மறுத்ததால்தான் சீனா, பாகிஸ்தான் உதவியை நாட நேரிட்டதாக இலங்கைத் தரப்பு கூறியபோது இந்தியாவால் அதற்குப் பதிலளிக்க முடியவில்லை என்று இலங்கை அதிகாரி ஒருவர் பின்னர் என்னிடம் தெரிவித்தார்.

இருப்பினும் அதைப் பொருட்படுத்தாத இந்தியா, ராஜபக்சேவிடம் ஒரே ஒரு முக்கியச் செய்தியை மட்டும் சற்று உறுதிபடத் தெரிவித்து விட்டு வந்தது. அது 2009 இல் நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக போரை முடித்துவிடுங்கள் என்பதுதான்.

தேர்தலின் போது ஈழப் போரின் நிழல் விழுவதையும் அதனால் தங்களது வெற்றி வாய்ப்புகள் பாதிக்கப்படுவதையும் காங்கிரஸ் அரசு விரும்ப வில்லை. மேலும், தேர்தல் நேரத்தில் போர் நீடித்துக் கொண்டிருந்தால் அது சரியாக இருக்காது. தமிழகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் காங்கிரஸ் அரசு பயந்தது.

இந்தியாவின் கவலையைப் புரிந்து கொண்டார் ராஜபக்சே. அதே சமயம் அவர் காலக்கெடு எதையும் நிர்ணயித்துக் கொள்ளவில்லை. அதே சமயம் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாக அவர் உறுதியளித்தார்.

இதையடுத்து மேனன், நாராயணன், விஜய் சிங் கோஷ்டியினர் பாதி கோரிக்கைகள் நிறைவேறிய அரைகுறை திருப்தியுடன் டெல்லி திரும்பினர்.

### கை கொடுத்த இந்தியக் கடற்படை

இலங்கையின் போர் நடவடிக்கைகளுக்கு இந்த சமயத்தில் பெரும் உதவியாக வந்து சேர்ந்தது இந்தியக் கடற்படை.

இந்தியக் கடற்படையின் பேருதவியால் விடுதலைப் புலிகளின் பத்து ஆயுதக் கப்பல்களை தாக்கி தகர்த்தது இலங்கை கடற்படை. சிறிய ரக ஆயுதங்கள் முதல் மிகப் பெரிய கனரக ஆயுதங்கள் வரை இந்தக் கப்பல்கள் மூலம் புலிகளுக்காகக் கொண்டு வரப்பட்டன. இவற்றை இலங்கை தாக்கி அழித்ததால் புலிகளுக்கு அது பெரும் இழப்பாக அமைந்தது.

2006 ஆம் ஆண்டு முதல் போர் முடியும் காலம் வரை இந்தியா மற்றும் இலங்கை கடற்படைகள் மிகத் திட்டமிட்ட ஒருங்கிணைப்பை மேற்கொண் டிருந்தன. இந்த கூட்டுச் செயல்பாடுகள் காரணமாக விடுதலைப் புலிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

உதாரணத்திற்கு ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி மையத்திலிருந்து இந்திய கடற்படை, உளவு மற்றும் ரோந்து விமானங்கள் தொடர்ந்து இலங்கைக் கடல் பகுதியை அங்குலம் அங்குலமாக கண்காணித்து வந்தன. தொடர்ந்து அவை இலங்கைக் கடற்பகுதியைச் சுற்றி வந்தன.

அதிக சக்தி வாய்ந்த ரேடார்கள் பொருத்தப்பட்ட இந்த விமானங்கள் இலங்கை கடல் பகுதியில் ஐயத்திற்கிடமான கப்பல் அல்லது படகின் நடமாட்டம் தெரிந்தால் இவை உடனே இலங்கைக் கடற்படைக்கு தெரிவிக்கும்.

உடனடியாக விரையும் இலங்கைக் கடற்படை யினர் அந்த மர்மக் கப்பல் அல்லது படகை தாக்கி அழிப்பார்கள். இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை கடல் மார்க்கமாகக் கொண்டு வருவது முற்றிலும் தடைபட்டது. இந்தியாவின் இந்த உளவு வேலையால் கடற் புலிகள் பெரும் பாதிப்பைச் சந்தித்தனர்.

இப்படி இந்தியாவின் உதவியால் 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதி விடுதலைப் புலிகளின் மிகப் பெரிய ஆயுதக் கப்பலை இலங்கை கடற்படை தாக்கி அழித்தது. 2007 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மேலும் 3 கப்பல்கள் அழிக்கப்பட்டன.

6 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# நாள்தோறும் ரகசியமாக ஆலோசனை வழங்கியது, இந்திய அதிகாரிகள் குழு

(5 ஆம் பக்க தொடர்ச்சி)

இது தவிர இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய கடற்படை மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படையினர், பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் தொடர்ந்து ரோந்து சுற்றி வந்தனர். இதனால் கடற்புலிகளின் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட முற்றிலும் நின்று போயின.

இந்திய கடற்படையின் உதவி குறித்து இலங்கை கடற்படைத் தளபதி வசந்த் கரன்ன கொடா 2008 ஆம் ஆண்டு இவ்வாறு கூறினார். 'இந்தியாவுடன் ஏற்பட்ட ஒத்துழைப்பு விடுதலைப் புலிகளை வெற்றிகரமாக எதிர்க்க பேருதவியாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்திய கடற்படை மற்றும் கடலோரக் காவல் படையினருடன் நான்கு முறை இலங்கைக் கடற்படையின் சந்திப்புகளை மேற்கொள்கின்றனர். இந்திய கடற்படையுடன் இணைந்து ஒருங்கிணைந்த ரோந்துப் பணியையும் இலங்கை கடற்படை மேற்கொள்கிறது' என்றார்.

மேலும் விடுதலைப் புலிகளின் அனைத்து ஆயுதக் கப்பல்களையும் தகர்த்துவிட்டோம். இந்தக் கப்பல்களில் பிரித்துக் கொண்டு வரப்பட்ட 3 விமானங்களின் உதிரி பாகங்கள், ஆர்ட்டில்லரி, மார்ட்டர்கள், குண்டு துளைக்காத வாகனங்கள், நீர் மூழ்கி சாதனங்கள், ஸ்கூபா டைவிங் செட், ரேடார் உள்ளிட்டவை முக்கியமானவை.

இந்தியாவின் உதவியால் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு முறை கிட்டத்தட்ட ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசிய கடல் எல்லை வரை இலங்கை கடற்படை சென்று புலிகளின் மூன்று கப்பல்களை தகர்த்தனவாம். அக்டோபர் 7 ஆம் தேதி மேலும் ஒரு கப்பலை இலங்கை கடற்படை தகர்த்தது.

இலங்கை கடற்படையிடம் போர்க் கப்பல்கள் எதுவும் இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனாலும் அவர்கள் தங்களிடம் இருந்த ரோந்துப் படகுகள் உள்ளிட்டவற்றை வைத்துத் தான் விடுதலைப்புலிகளின் கப்பல்கள், படகுகளை தகர்த்தனர். இந்த நடவடிக்கைகளை அவர்கள் தெளிவாகவும், துல்லியமாகவும் செய்ய முக்கிய காரணமாக அமைந்தது. இந்தியக் கடற்படை கொடுத்து வந்த உளவுத் தகவல்களே.

கடல் பகுதியில் எங்கு எந்தக் கப்பல் வருகிறது என்பதை துல்லியமாக இலங்கைக் கடற்படைக்கு இந்தியா சொல்லிக் கொண்டே வந்தது. அதை வைத்து அங்குச் சென்று திடீர்த் தாக்குதல்களை நடத்தி புலிகளை நிலை குலைய வைத்தது இலங்கை கடற்படை

புலிகள் இதை எதிர்பார்க்கவில்லை. காரணம், இலங்கைக் கடற்படையின் திறமை மற்றும் அவர்களின் தாக்குதல் வசதி மகா ஓட்டையானது என்பது அவர்களுக்குத் தெரியும். உண்மையில் இலங்கைக் கடற்படையை விட கடற்புலிகளின் பிரிவு பெரும்பலம் படைத்தது. ஆனால், இந்தியா இப்படி உளவு சொல்லி இலங்கைக் கடற்படைக்கு உதவி செய்ததை அவர்கள் அறிந்து கொள்ளாமல் விட்டுவிட்டதால் பேரிழப்பை சந்திக்க நேரிட்டது.

2009 மார்ச் மாதமே இந்தியாவின் உதவிகள் குறித்து அரசல் புரசலாக செய்திகள் வெளியாகத் தொடங்கின. ஆனாலும் இதை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளாமல் இருந்தது இலங்கை. காரணம் அப்போது இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் ஜுரம் தீவிரமாக இருந்ததால். ஆனால் இந்தியக் கடற்படை செய்த உதவிகள் இலங்கைக்கு மிகப் பெரிய உதவியாக அமைந்தன என்பது நிதர்சனம். கடற்படையின் தென்பிராந்திய கமாண்டர் மூலமாக மூன்று அதி விரைவு படகுகள், ஒரு ஏவுகணை பொருத்தப்பட்ட கப்பல் ஆகியவை இலங்கைக்காக தீவிரமாக பணியாற்றிக் கொண்டிருந்தன. 2007 ஆம் ஆண்டின் பின் பகுதியிலிருந்தே இந்தியாவின் இந்த உதவி தொடங்கிவிட்டது.

இப்படி இந்தியக் கடற்படையும், இலங்கை கடற்படையும் சேர்ந்து கடல் பகுதியை முற்றுகையிட்டு தொடர்ந்து இறுக்கி வந்ததால் கடற்புலிகள் கிட்டத்தட்ட செயலாற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்த நிலையில் நெடுந்தீவு, புலிகளுக்கு பெரும் அடியாக அமைந்து போனது. யாழ்ப்பாணம் குடா பகுதியில் மக்கள் அதிகம் வசிக்கும் தீவுதான் நெடுந்தீவு. இந்தத் தீவு இராமேஸ்வரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களிலிருந்து கிட்டத்தட்ட சம தொலைவில் உள்ளது.

இந்தத் தீவை கடற்புலிகளை கண்காணிக்க மையமாக மாற்றிக் கொண்டது இலங்கைக் கடற்படை. யாழ்ப்பாணம் கடல் பகுதியை மட்டுமல்லாது மன்னார் மற்றும் தமிழக கடலோரப் பகுதிகளையும் இந்தத் தீவிலிருந்தே கண்காணித்து வந்தது இலங்கைக் கடற்படை.

ஆனால், 2007 ஆம் ஆண்டு மே மாதம் நெடுந் தீவில் உள்ள கடற்படை முகாமை விடுதலைப் புலிகள் துணிச்சலுடன் தாக்கினர். அங்கிருந்த 7 வீரர்களைக் கொன்ற கடற்புலிகள் 2 விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் 2 மெஷின் கன், ஒரு ஆர்.பி.ஜி. லாஞ்சர், எட்டு ரைபிள்களைத் தூக்கிக் கொண்டு தப்பினர்.

இந்த முகாமிலிருந்து ஒரு ரேடாரையும் புலிகள் எடுத்துக் கொண்டு போய் விட்டதாக கூறப்பட்டது. இது கடற்படைக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இதையடுத்து இந்தியாவிடம் உதவி கோரியது. இந்த முறை இந்தியா உடடினயாக உதவி செய்தது. ஆனால், என்ன மாதிரியான உதவி என்பதை இரு தரப்பும் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

இப்படி இலங்கைக்கு மறைமுகமாக பல வழிகளில் ஒத்துழைப்பு கொடுத்தும் கூட பாகிஸ்தான் சீனாவுடனான தனது நெருக்கத்தை இலங்கை அதிகரித்துக் கொண்டே போனது.

நன்றி : 'விடுதலை முழக்கம்'

# திருப்பூர் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்

தலைமை செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்தவாறு, கழகத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர்கள் கலந்து கொள்ளும் மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்களின் சுற்றுப் பயணம் துவங்கியது. முதல் கலந்துரையாடல் கூட்டமாக, 16.4.2011 சனிக்கிழமை அன்று மாலை 5 மணிக்கு உடுமலைபேட்டையில் திருப்பூர் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் கருமலையப்பன் வரவேற்புரையாற்றியதைத் தொடர்ந்து, தோழர்கள் அனைவரும் ஒவ்வொருவராக தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசிய கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், கருத்துகளை கூறுமாறு தோழர்களை கேட்டுக் கொண்டார்.

திருப்பூர் நகர செயலாளர் முகில்ராசு, நகர தலைவர் ரமேஷ் பாபு, ஒன்றிய தலைவர் அகிலன், ஒன்றிய செயலாளர் குமார், ஒன்றிய அமைப்பாளர் வெங்கடேசன், பல்லடம் ஒன்றிய செயலாளர் விசயன், பல்லடம் நகரத் தலைவர் திருமூர்த்தி, நகரச் செயலாளர் சூரி, மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் மோகன்குமார், அவினாசி ஒன்றிய அமைப்பாளர் செந்தில், பொங்கலூர் ஒன்றிய அமைப்பாளர் கார்த்திகேயன், பெரியார் முத்து, தியாகு, தண்டபாணி, சம்பூகன், குணசேகரன் ஆகியோர் தங்களது கருத்துகளை கூறினர்.

தொடர்ந்து தோழர் மோகன், மாவட்ட தலைவர் துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் அங்ககுமார் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர்மணி சிறப்புரையாற்றினர்.

## திருப்பூரில் அம்பேத்கர் சிலைக்கு மாலை

14.4.2011 அன்று புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் 121வது பிறந்த நாளை முன்னிட்டு கழகம் சார்பாக அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்விற்கு கழக பாடகர் தியாகு மாலை அணிவிக்க, இரட்டை தம்ளர் - இரட்டை சுடுகாடுகளை ஒழிக்க தோழர்கள் உறுதியேற்றனர். நிகழ்விற்கு மாவட்ட தலைவர் சு. துரைசாமி, மாநகர செயலாளர் முகில் இராசு, ஒன்றிய தலைவர் அகிலன், பரிமளம், ஆசிரியர் வி.சிவகாமி, தண்டபாணி, சு. மணிகண்டன், ஜெனீசு, பெரியார் முத்து, மாணவர்கழக அரிசு, குமார், கதிர் முகிலன், கர்நா தென்றல் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## மதம் – தாலி மறுப்பு புரட்சிகர மண விழா

உடுமலை ஒன்றிய கழகத் தோழர் காந்தியின் நண்பரும், பெரியாரியலாளருமான தோழர் சுப்ரமணி - மதீனா மத மறுப்பு, தாலி மறுப்பு புரட்சிகர மண விழா, பழனி, வண்டிப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள பெரியார் படிப்பகத்தில் 14.4.2011 அன்று நடைபெற்றது. 200க்கும் மேற்பட்ட தோழர்கள் இந்த புரட்சிகர மண விழாவில் பங்கேற்று, மணமக்களை வாழ்த்தினர். மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

## நன்கொடை

16.4.2011 சனிக்கிழமை அன்று காலை 11 மணிக்கு திருப்பூர் மாவட்டம் பல்லடம் ஒன்றிய செயலாளர் விசயன் - ஜெய்சாந்தி ஆகியோரது "சமர் ஸ்டுடியோ" கழகத் தலைவரால் திறந்து வைக்கப்பட்டது. அதன் நினைவாக புரட்சிப் பெரியார் முழக்க ஏட்டிற்கு நன்கொடையாக ரூ.1000 வழங்கினர்.


சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் வசிக்கும் தோழர் மணி பிரகாசம் - நான்சி நிர்மலா இணையர்களுக்கு பிப்ரவரி 8 அன்று ஆண் குழந்தை பிறந்தது. அதன் நினைவாக புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கினார்.

திருப்பூர் கழகத் தோழர் அகிலன் - சரண்யா இணையருக்கு மார்ச் 29 அன்று பெண் மகவு பிறந்துள்ளது. அதன் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கியுள்ளார். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். - ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 21st April 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஏப்ரல் 28, 2011 | புரட்சி 10 | முழக்கம் 15 | விலை: ரூ.2.50


## இந்திய அரசே! தமிழர்களிடம் மன்னிப்புக் கேள்!

# ஆர்ப்பாட்டங்கள்







'ஈழத் தமிழர் இனப் படுகொலைகளை மூடி மறைத்து, இலங்கை அரசுக்கு துணை நின்ற இந்திய அரசே தமிழர்களிடம் மன்னிப்புக் கேள்' என்ற முழக்கத்தை முன் வைத்து, ஏப்.21 அன்று பல்வேறு ஊர்களில் பெரியார் திராவிடர் கழகம், தோழமை அமைப்புகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. ஏப்.17 ஆம் தேதி கோவையில் நடந்த மாவட்டக் கலந்துரையாடல் கூட்டத்தில் நான்கே நாட்கள் இடைவெளியில் ஏப்.21 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு எடுக்கப் பட்டது. தோழர்கள் உடனடியாக களத்தில் இறங்கி ஆர்ப்பாட்டத்தை எழுச்சியுடன் நடத்தி முடித்துள்ளனர். அய்.நா. குழு அறிக்கை வந்தவுடன் தமிழகத்தில் தமிழர்களிடம் இந்திய அரசு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற முதல் எதிர்ப்புக் கிளர்ச்சியை பெரியார் திராவிடர் கழகம் தொடங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.

**பொள்ளாச்சியில் :** போர்க்குற்றம் புரிந்த இனவெறி சிங்கள அரசுக்கு ஆதரவாக செயல்படும் இந்திய அரசு தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என வலியுறுத்தி, பொள்ளாச்சி நகர ஒன்றிய கழகம் சார்பாக 21.4.2011 வியாழன் அன்று காலை 11 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் வே.வெள்ளிங்கிரி தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில், "இவன் போர்க் குற்றவாளி" என்று எழுதப்பட்ட பதாகையை கழுத்தில் தொங்கவிடப்பட்ட ஒருவர் கையில் விலங்குடன் ராஜபக்சே வேடத்திலும், "தமிழர்களே மன்னி யுங்கள்" என்று எழுதப்பட்ட பதாகையை கழுத்தில் தொங்கவிட்டபடி ஒருவர் மன்மோகன் சிங் வேடத்திலும் கூட்டத்தின் முன்பு நிறுத்தப்பட் டிருந்தனர். பொது மக்கள் பெருமளவில் நின்று ஆர்ப்பாட்டத்தை கவனித்தனர்.

மன்னிப்புக் கேள்! மன்னிப்புக் கேள்! இந்திய அரசே, மன்னிப்புக் கேள்! போர்க் குற்றத்திற்குத் துணைப் போன இந்திய அரசே, தமிழர்களிடம் மன்னிப்புக் கேள்! போன்ற முழக்கங்கள் எழுப்பப் பட்டன. ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. நகர செயலாளர் குகன் மில் செந்தில், ஆதித் தமிழர் பேரவை தி.செ. கோபால், விடுதலை முன்னணி மாரிமுத்து, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை ரத்தின சபாபதி, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் வழக்கறிஞர் இளங்கோவன், தமிழ்நாடு மாணவர் கழகம் நல்லதம்பி ஆகியோரது தலைமை யில் இயக்கத் தோழர்களும், கழகப் பொறுப் பாளர்கள் சி. விசயராகவன், காசு. நாகராசன், வே. அரிதாசு, அப்பாதுரை, மணிமொழி, ஆனந்த், உத்தர ராசு, த. கண்ணன், இரா. சீனிவாசன், கஸ்தூரி, தோழர்கள் கலை இராசேந்திரன், த. இராசேந்திரன், கு. வெங்கடேசு, யாழ் மணி, கா.க.புதூர் உதயகிரி, முருகானந்தம், இராமகிருட்டிணன், அசோக், பேச்சிமுத்து உள்ளிட்ட ஏராளமான தோழர்கள், மாணவர்கள், சிறுவர்கள் என நூற்றுக்கும் மேற்பட் டோர் கலந்து கொண்டனர். முடிவில் மாணவர் கழக அமைப்பாளர் நல்லதம்பி நன்றி கூறினார்.

**ஈரோட்டில் :** 21.4.2011 அன்று இந்திய அரசைக் கண்டித்து மாலை 4.30 மணிக்கு ஈரோட்டில் தலைமை அஞ்சலகம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பெரியார் திராவிடர் கழகம் மற்றும் தோழமை அமைப்பு கள் சார்பாக நடை பெற்றது. மாநில செயற் குழு உறுப் பினர் இரத்தினசாமி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் இராம. இளங் கோவன், மாவட்ட தலைவர் நாத்திக சோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் உணர்ச்சி கரமாக முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பின்னர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் பூங்கொடி சாமிநாதன், ராமகிருட்டிணன் (ம.தி.மு.க.), தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் மோகன் ராசு, வழக்கறிஞர் சிதம்பரன், செழியன் (நாம் தமிழர் கட்சி), கணகுறிச்சி, இராம. இளங்கோவன், இமயவரம்பன் (ஆதித் தமிழர் பேரவை) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.




ஆர்ப்பாட்டம் முடிந்தவுடன் அனைத்து தோழர்களும், சமீபத்தில் தீக்குளித்து மாண்ட பொறியாளர் கிருட்டிண மூர்த்திக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் மவுன ஊர்வலமாக தலைமை அஞ்சலகம் முன்பாக புறப்பட்டு, பெரியார் சிலை, பன்னீர் செல்வம் பூங்கா, கடைவீதி, மணிக்கூண்டு வழியாக வந்த பெரியார் நினைவுத் தூண் அருகே மவுன ஊர்வலம் நிறைவடைந்தது. அங்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவரும், சீரிய இன உணர்வாளரும் ஆகிய வழக்கறிஞர் ப.பா. மோகன் உரையாற்றினார். பின்பு இரண்டு நிமிடம் மவுனமாக அனைத்து தோழர்களும் கிருட்டிணமூர்த்திக்கு அஞ்சலி மற்றும் வீரவணக்கம் செலுத்தினர். அத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. ஊர்வலத்தில் 200-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டது மிகவும் எழுச்சியாக இருந்தது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட இளைஞரணி செயலாளர் அர்ச்சுனன், கோபி நகரச் செயலாளர் செயராமன், ஈரோடு மாநகர பொறுப்பாளர் சிவா, சுப்பிரமணியன், தனராசு, முருகானந்தன், பிரபாகரன், மோகன், பழனிச்சாமி (பவானி), மாதுராசு, சுவாமிநாதன், கைலாசம், ஆர்.என்.புரம் குமார், கோபி ஜெகநாதன், கோபி நகர அமைப்பாளர் குணசேகரன், எலத்தூர் இரவி, நம்பியூர் ஒன்றிய தலைவர் அருளானந்தம், மாவட்ட இளைஞரணி தலைவர் புதுரோடு இராசேந்திரன், கோபி ஒன்றிய தலைவர் விசயசங்கர் மற்றும் ம.தி.மு.க., நாம் தமிழர், தமிழ் தேசிய விடுதலை இயக்கம், ஆதித் தமிழர் பேரவை ஆகிய அமைப்பைச் சார்ந்த தோழர்களும் பங்கெடுத்து சிறப்பித்தனர்.

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# புட்டபர்த்தி சாய்பாபா என்ற மனிதரின் மரணம்

புட்டபர்த்தி சாய்பாபா என்ற மனிதன் - ஏப். 24 ஆம் தேதி காலை மரணமடைந்தார். அவரை 'கடவுள் அவதாரம்' என்றுகருதி, மரணம் அவரை நெருங்கவே நெருங்காது என்று நம்பிக்கொண்டிருந்த அவரது சீடர்கள், பாபா மரணமடைந்துவிட்டார் என்பதையே நம்ப மறுத்து அதிர்ச்சியடைந்து விட்டார்கள். அவரது உடல் உறுப்புகளான கல்லீரல், இருதயம், சிறுநீரகம் எல்லாம் முதுமையின் காரணமாக செயலிழந்து போயின. மனிதர்களுக்கு தரப்படுகிற விஞ்ஞானம் கண்டுபிடித்த நவீன சிகிச்சைகள் தான் அவர் நடத்தும் மருத்துவமனையிலேயே அவருக்கும் தரப்பட்டன. ஏதோ 'அற்புதம் நடக்கப் போகிறது என்று செய்திகள் பரப்பப்பட்டன. ஒன்றுமே நடக்கவில்லை.

புட்டபர்த்தி சாய்பாபா – மனிதர்களைப் போலவே சாப்பிட்டார்; மலம் கழித்தார்; சிறுநீர் கழித்தார்; உறங்கினார்; அவ்வப்போது உடல் நோய்க்கு சிகிச்சை செய்து கொண்டார்.

ஷீரடி சாய்பாபாவின் மறு அவதாரம் என்று, இவர் தன்னைத் தானே கூறிக் கொண்டார். ஆனால், உண்மையான ஷீரடி சாய்பாபா சீடர்கள், அதை ஏற்கவில்லை. ஷீரடி சாய்பாபா நேர்மையானவர்; புட்டபர்த்தி போலி என்று கூறி, ஷீரடி பாபாவுக்கே தனி கோயில் கட்டி, இன்றும் வழிபட்டு வருகிறார்கள்.

தனக்கு 96 ஆம் வயதில் தான் மரணம் என்றார் புட்டபர்த்தி சாய்பாபா. ஆனால் 85 வயதிலேயே மரணமடைந்து விட்டார். இதுவும் அவரது சீடர்களுக்கு அதிர்ச்சிதான். பாபாவுக்கு, இந்து காலண்டர் காலப்படி (அதாவது சந்திரன் சூரியனை சுற்றி வருவதுதான் ஒரு நாளாம்; அதன்படி மாதம் ஒன்றுக்கு 27.3 நாட்கள் தானாம்) பாபாவுக்கு 94 வயதாகி விட்டதாம். எனவே பாபா வாக்கு பொய்க்கவில்லை என்று ஒரு பார்ப்பன ஏடு சமாதானம் கூறுகிறது. இப்படியானால் பாபா பிறந்த 1926 ஆம் ஆண்டுக்கு மட்டும் – ஆங்கில முறைப்படியான காலத்தை ஏன் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்? அதற்கும் – இந்து காலண்டரைக் கணக்கிட வேண்டியது தானே? தனது அடுத்த பிறவியை கர்நாடக மாநிலம் மாண்டியாவில் எடுக்கப் போவதாகவும் – சாய்பாபா ஏற்கனவே கூறி விட்டாராம். இதை உண்மை என்று நம்பி விட்டால், பிறகு ஏன் பக்தர்கள் கதற வேண்டும்; கண்கலங்க வேண்டும் என்பதும் நமக்குப் புரியவில்லை.

மக்களை தனது அற்புதங்களால் ஏமாற்றி, ஏமாற்றுத் திறனை ஒரு கலையாக்கி தொடக்கத்தில் சீடர்களை ஈர்த்தவர்தான் புட்டபர்த்தி சாய்பாபா. இவர் நடத்திய மோசடிகள் பல நேரங்களில் அம்பலப்படுத்தப்பட்டன என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மை. நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, அவர் பங்கேற்ற நிகழ்ச்சியில், கையசைப்பில் ஒரு தங்க செயினை வரவழைத்து பிரதமருக்கு தந்தார் சாய்பாபா. உண்மையில், தனது உதவியாளர் தாம்பூலத் தட்டுக்குக் கீழே வைத்து ரகசியமாக தந்த அந்த தங்க செயினை சாய்பாபா தந்திரமாக கையிடுக்கில் பதுக்கிக் கொண்டு, பிறகு, கையசைத்து வரவழைப்பதுபோல் ஏமாற்றிய காட்சி, அரசு தொலைக்காட்சிப் படப்பிடிப்பிலேயே பதிவானது. பிறகு உண்மைகள் அம்பலமாகி ரகசியமாக அய்தராபாத் தொலைக்காட்சி நிறுவனத்துக்குள்ளே முடக்கப்பட்ட அந்த படச் சுருள், எப்படியோ 'சிலரால்' வெளியே கொண்டு வரப்பட்டு, மக்கள் மன்றம் முழுதும் போட்டுக் காட்டியபோது, பாபாவின் குட்டு உடைந்து போனது.

அவரின் நெருக்கமான சீடர்களாக இருந்தவர்களே அவரது மோசடிகளை உணர்ந்து வெளியே வந்து, அவரது மோசடிகளை வெளிப்படுத்தி நூல்களை எழுதினர். கையசைப்பில் ஜப்பான் நாட்டின் 'சிட்டிசன்' கைக்கடிகாரத்தை சாய்பாபா கொண்டுவந்தபோது, அந்தக் கடிகாரத்தை தயாரிக்கும் நிறுவனத்துக்கே தலைசிறந்த நாத்திகரான கோவூர் கடிதம் எழுதினார். தங்கள் நிறுவனத்தின் தயாரிப்புகள் உற்பத்தி எண் இன்றி வெளிச்சந்தைக்குப்போக வாய்ப்புள்ளதா என்று கேட்டார். அப்படி ஒரு கடிகாரம்கூட வெளியே போக முடியாது; அத்தனையிலும் உற்பத்தி எண் வரிசை இருக்கும். பாபா வரவழைத்தது கூட எங்கள் தயாரிப்பாகத்தான் இருக்க முடியுமே தவிர, சூன்யத்திலிருந்து வந்திருக்கவே முடியாது என்று, அந்நிறுவனம் கோவூருக்கு பதில் எழுதியது. இந்த மோசடிக்கு பாபாவிடமிருந்து பதில் இல்லை.

பாபா பிறந்தது பிற்படுத்தப்பட்ட சமுதாயம் தான். அவருக்கு கிடைத்த செல்வாக்கை பார்ப்பனர்கள் தங்களுக்கு பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதே உண்மை. அவரைச் சுற்றி ஒரு அதிகார வட்டம் உருவாகி நின்றது. அவர்கள் சாமான்ய ஏழை எளிய மக்கள் அல்ல. நாட்டின் பெரும் பொறுப்பில் அதிகார உச்சத்தில் இருந்தவர்கள். பெரும் தொழிலதிபர்கள். சினிமா நட்சத்திரங்கள். அவர்களுக்குள் பாபா வழியாக 'அதிகாரப் பரிமாற்றங்கள்' நடந்து கொண்டிருந்தன. இப்போது சங்கிலித் தொடர் அறுபட்டுப் போய்விட்டதே என்பதுதான் 'அவாளின்' கவலை.

ஒரு கட்டத்தில் சித்து வேலைகள் பயன் தராது என்ற முடிவுக்கு வந்து, ஏதேனும் மக்கள் சேவைக்கு, தன்னிடம் குவியும் சொத்துக்களைப் பயன்படுத்த முன் வந்தது ஒன்றுதான், பாபாவின் பாராட்டுக்குரிய அம்சமாகக் கூறலாம். மக்களின் தேவைகளை 'பகவான்களால்' நிறைவேற்ற முடியாது; அதற்காக திட்டங்களைத் தான் போட வேண்டும் என்ற "பகுத்தறிவு" சிந்தனைக்குதான் கடைசியில் "பகவான்" வந்தார். அதன் மூலம் சரிந்து போய் விடாமல், தனது புகழை நிலை நாட்டிக் கொள்ள திட்டமிட்டார். 'ஆன்மீகத்தின் குரு'வாக வலம் வந்தவர் – பொருளை புறந்தள்ளவில்லை; பல லட்சம் கோடி சொத்துகளை பாதுகாப்புக் கருதி சட்டத்துக்குட்பட்ட அறக்கட்டளை யாக்கினார். எல்லா அறக்கட்டளையிலும் நடப்பது போலவே இவரது அறக்கட்டளையிலும் வாரிசுப் போட்டிகள் வரத் தொடங்கி விட்டன.

ஏற்கனவே பாபா, படுக்கை அறையில் நடந்த துப்பாக்கி சூட்டில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். வழக்கு மூடி மறைக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் மாநில அரசே சொத்துகளைக் கைப்பற்றி, மக்கள் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்தினால், மக்கள் பயனடையக் கூடும் என்பதே நமது கருத்து!

'பகவான்கள்' என்று நம்பப்படுகிறவர்கள், எவருமே சாதாரண மனிதர்கள்தான் – என்பதையே இந்த மனிதரின் மரணமும் உலகுக்கு உணர்த்தியிருக்கிறது.

# போர்க்குற்றம்: "எங்களை இந்தியா காப்பாற்றும்" - இலங்கை அரசு

போர்க்குற்றவாளியாக ராஜபக்சே அய்.நா. அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இந்த நிலையில் இந்தியா தங்களைக் காப்பாற்றி விடும் என்று இலங்கை அரசு உறுதியாக நம்புகிறது. இலங்கையின் மூத்த அதிகாரி ஒருவர் கருத்தை மேற்கோள் காட்டி, 'தினமணி' நாளேட்டின் கொழும்பு செய்தியாளர் பி.கே.பாலச்சந்திரன், 'தினமணி'யில் (ஏப்.26) இது குறித்து எழுதியுள்ளதாவது:

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அத்துமீறி நடந்து கொண்டதற்காக போர்க் குற்றவாளி என்று ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலால் தீர்மானிக்கப்படும் நிலை வந்தால், இந்தியா - அதிலும் குறிப்பாக - பிரதமர் மன்மோகன் சிங் தங்களைக் காப்பாற்றி விடுவார் என்று இலங்கை அரசு நம்பிக்கையோடு இருக்கிறது. இலங்கை அரசின் மூத்த அதிகாரியொருவர் தனது பெயரை வெளியிடக் கூடாது என்ற நிபந்தனையோடு இதை கொழும்பில் தெரிவித்தார்.

'இலங்கைக்கு சர்வதேச அரங்கில் நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் எல்லாம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உதவிக்கு வந்திருக்கிறார். இலங்கையுடான உறவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மற்றவர்களைவிட அவர் நன்றாகவே உணர்ந்திருக்கிறார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் மனித உரிமைகளையும் ஜெனீவா உடன்பாட்டு கோட்பாடுகளையும் இலங்கை அரசு அப்பட்டமாக மீறிவிட்டது. எனவே அதைக் கண்டிக்க வேண்டும் என்று ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சிலில் 2009 இல் முயற்சி நடந்தபோது அதை முறியடித்துக் காப்பாற்றியது இந்தியா தான். இலங்கையைக் கடுமையாக கண்டிக்கும் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து இந்தியா பேசியதால் கைவிடப்பட்டது.

பொருளாதார நிலைமை காரணமாக வெளி நாட்டு வர்த்தகப் பற்று - வரவில் பற்றாக்குறையால் இலங்கை அரசு தத்தளித்துக் கொண்டிருந்தபோது மேற்கொண்டு பண உதவி அளிக்க பன்னாட்டுச் செலாவணி நிதியம் (ஐ.எம்.எப்.) இழுத்தடித்துக் கொண்டிருந்தபோது இந்தியாதான் தலையிட்டு இலங்கைக்குக் கடன் வழங்குங்கள் என்று வலுவாகப் பரிந்துரைத்து வாங்கித் தந்தது. சமீபத்தில் இந்தியப் பெருங்கடல் டுனா கமிஷன் கூட்டத்தில் பிரிட்டனுக்குச் சொந்தமான கடல் பரப்பில் சர்வதேச சட்டங்களுக்கு விரோதமாக மீன் பிடித்ததற்காகக் கடுமையாகக் கண்டிக்கப்பட விருந்த தருணத்திலும் இந்தியாதான் தலையிட்டு இலங்கைக்கு ஆதரவாகப் பேசி மீட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் சீனாவும் ரஷியாவும் நிரந்தர உறுப்பு நாடுகள். வீட்டோ எனப்படும் ரத்து அதிகாரம் உள்ள சக்தி வாய்ந்த நாடுகள். ஆனால், மனித உரிமை மீறல் புகார்கள் தொடர்பாக பாதுகாப்பு கவுன்சிலில் விவாதம் வரும்போது இலங்கைக்கு ஆதரவாக அந்த இரண்டும் செயல்படும் என்று நம்ப முடியாது. இந்தியா இப்போது தற்காலிக உறுப்பு நாடாக சுழற்சி அடிப்படையில் இடம் பெற்றிருக் கிறது. ரத்து அதிகாரம் இல்லாவிட்டாலும் அது இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தை ஆதரிக்காமல் ஒதுங்கியிருந்தாலே இலங்கை காப்பாற்றப்படும்.

ஈரான், சூடான், லிபியா ஆகிய நாடுகளையும் இதேபோல மனித உரிமை மீறலுக்காகக் கண்டிக்கும் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்ட போது சீனாவும் ரஷியாவும் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இருந்து விட்டன. எங்கள் விவகாரத்திலும் அப்படிச் செய்யக் கூடும். ஆனால் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் எங்களைக் கண்டிக்கத் தீவிரம் காட்டுகின்றன. அமெரிக்கா கூட தனது நிலையை இறுதியில் மாற்றிக் கொள்ளலாம். ஐரோப்பிய நாடுகளால் தான் பிரச்சினை. இந்த நிலையில் இந்தியாவின் ஆதரவு எங்களைக் காப்பாற்றும். மனித உரிமைகள் கமிஷன் எங்களைக் குற்றஞ்சாட்டிய உடனேயே இலங்கைஅரசின் நிலையை விளக்க வெளிநாட்டுத் தூதர்களை அழைத்து கூட்டம் நடத்தினோம். சீனத் தூதர் அதில் பங்கேற்கவில்லை. காரணம் கேட்டபோது தங்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று பதில் கிடைத்தது.

நாங்கள் ஃபேக்ஸ் மூலம் அழைப்பை அனுப்பிவிட்டு தொலைபேசி மூலமும் அது வந்து சேர்ந்ததை உறுதி செய்து கொண்டோம். ஏதோ காரணத்துக்காக சீனா வரவில்லை. அத்துடன் அந்த அறிக்கை குறித்துகூட அது கருத்து தெரிவிக்கவில்லை. எனவே அது எங்களை ஆதரிக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. ரஷியாவைப் பற்றியும் உறுதியாக எதையும் கூற முடியவில்லை. ரஷியாவும் சீனாவும் எங்களுக்கு ஆதரவாக நடந்து கொள்ளாத நிலையில், இந்தியா எங்களை ஆதரித்தால் நாங்கள் மீண்டுவிடுவோம்' என்று அந்த இலங்கை உயர் அதிகாரி தெரிவித்தார். ✦

## இந்தியாவின் பாதுகாப்பை ஒட்டியே முடிவு எடுக்க முடியும் – கலைஞர்

ராஜபக்சே பற்றி இந்திய அரசு எடுக்கும் முடிவுகள் இந்தியாவின் பாதுகாப்பை ஒட்டியேதான் இருக்க முடியும் என்று - தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி பேட்டி அளித்துள்ளார். இது பற்றி அவர் அளித்துள்ள பேட்டி:

செய்தியாளர்: ராஜபக்சேவுக்கு ஆதரவான நிலையை மத்திய அரசு தொடர்ந்து எடுத்து வருகிறதே?

கலைஞர் : இவையெல்லாம் சர்வதேச அளவில் - சர்வதேச நிலையையொட்டி விவாதிக்க வேண்டிய விஷயங்கள். இந்தியாவின் பாதுகாப்பை ஒட்டியும் நல்லுறவு எப்படியெல்லாம் வளர்க்கப்பட வேண்டும் என்பதையொட்டியும் விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள். உங்களின் ஒரு கேள்வியிலும், என்னுடைய ஒரு பதிலிலும் இந்த விஷயங்களை அடக்கிவிட முடியாது.

'முரசொலி' நாளேடு, ஏப்.26

## மாவட்ட கழக கூட்டங்களில் முடிவு

# சாதி – தீண்டாமை ஒழிப்புக் கிளர்ச்சிக்கு தயாராவோம்

*கழகத் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்கள் பங்கேற்கும் மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை திருப்பூர், கோவை, சென்னை, ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றது. கழகத் தோழர்கள் செயல்பாடுகள், கழக வளர்ச்சிக்கான திட்டம் ஆகியவை ஒவ்வொரு மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்களிலும் விரிவாக பேசப்படுகிறது.*

*கலந்துரையாடல் கூட்டங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசும்போது –*

1999 ஆம் ஆண்டு சாதி பெயரை சொல்லி திட்டியதாக தொடரப்பட்ட வழக்கின் மேல் முறையீடு, உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டு, தற்போது 19.3.2011 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில், “தமிழ்நாட்டில் பரவலாக இரட்டைக் குவளை இருப்பதாக கேள்விபட்டு நீதிமன்றம் அதிர்ச்சி அடைகிறது. இதை வேடிக்கைப் பார்த்துக் கெண்டு நீதிமன்றம் அமைதியாக இருந்துவிட முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும் இதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தீண்டாமை இருப்பது தெரிந்த பின்னாலும் நடவடிக்கை எடுக்காவிட்டால், இவர்களை பணி இடை நீக்கம் செய்ய வேண்டும். இவர்கள் மீது வழக்கு தொடர வேண்டும். துறைசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாநில அரசுகளுக்கு வழி காட்டுகிறது” என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி வழங்கிய தீர்ப்பில் தெரிவித்திருக்கிறார்.

எனவே தோழர்கள் விரைவாக, தற்போது நிலவும் தீண்டாமை கொடுமைகளான, இரட்டை சுடுகாடு, இரட்டை குவளை பற்றிய பட்டியலை மீண்டும் ஒருமுறை மிகச் சரியாக துல்லியமாக கணக்கெடுத்து அதை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தீண்டாமை ஒழிப்புப் பிரிவு (சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு), மனித உரிமை ஆணையம், எஸ்.சி., எஸ்.டி. ஆணையம் ஆகியோருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என கழகத் தலைவர் பேசி வருகிறார்.

### சென்னையில்

தென் சென்னை வடசென்னை மாவட்டக் கழக கலந்துரையாடல்கூட்டம் ஏப்.23 ஆம் தேதி பகல் 12 மணியளவில் பெரம்பூரில் உள்ள கல்கி இரங்க நாதன், மான்ட்ஃபோடு உயர்நிலைப் பள்ளியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் குமாரதேவன், தென் சென்னை மாவட்ட தலைவர் தபசி குமரன், செயலாளர் உமாபதி, வடசென்னை மாவட்டத் தலைவர் கேசவன், செயலாளர் அன்பு, மாவட்டக் கழக பொறுப்பாளர்கள், கழகச்செயல் வீரர்கள் கழக வளர்ச்சி எதிர்கால திட்டங்கள் பற்றி கருத்துகளை முன் வைத்துப் பேசினர்.

கலந்துரையாடல் நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு மறைந்த கழகப் பிரச்சாரகர் கீசகன் மருமகன், மேடவாக்கம் இரவிக்குமார், மந்திரமா? தந்திரமா நிகழ்ச்சி நடத்தினார். தொடர்ந்து மதிய உணவுக்குப் பிறகு மாவட்ட கலந்துரையாடல் தொடங்கி, 3.30 மணி வரை நடைபெற்றது. மாவட்ட செயலாளர் அன்பு நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

### ஈரோடு

24.4.2011 ஞாயிறு அன்று காலை 11 மணிக்கு ஈரோடு ஹோட்டல் அபிநயா ரீஜென்சி அரங்கில் ஈரோடு மாவட்ட கலந்துரையாடல் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் முன்னிலை வகித்தார். மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி வரவேற்றுப் பேசினார். மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், தலைமை கழக ஆலோசனைக் குழு உறுப்பினர் இரத்தினசாமி, மாவட்ட துணைத் தலைவர் கோபி. வேலுச்சாமி, அமைப்பாளர் குமரகுரு, இளைஞரணி தலைவர் இராசேந்திரன், செயலாளர் அர்ச்சுணன், ஈரோடு நகரத் தலைவர் நாகப்பன், சுப்ரமணி, கோபி நகர அமைப்பாளர் குணசேகரன், வழக்கறிஞர் செகதீசன், கோபி செயராமன், ஆசை தம்பி, நிவாஸ், ஆசிரியர்கள் சுந்தரம், சிவக்குமார், சுரேஷ், காசிப்பாளையம் சுப்ரமணியம், சிவா, மோகன்தாஸ், ஆனந்தராஜ், விசு. பழனிச்சாமி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட கழகம் சார்பாக பிரச்சார வாகனம் வாங்குவது, பெரியார் முழக்கம் சந்தா வசூலிப்பது, அலைபேசியில் குறுந்தகவல் செய்தி பிரச்சாரம், தெருமுனைப் பிரச்சாரம், தோழர்களின் வீடுகளுக்கு சென்று சந்திப்பது, மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்களை சுழற்சி முறையில் அனைத்து கிளைகளிலும் நடத்துவது ஆகியவை பற்றி கருத்து தெரிவித்த தோழர்கள், கொள்கை அறிக்கை மற்றும் பாடல் ஒலிப் பேழைகளை (சி.டி.) தலைமை கழகம் வெளியிட வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்தனர். கழக செயல் பாடுகளைப் பார்த்து, ஆசிரியர் பணி புரியும் மூன்று தோழர்கள் தாமாக முன்வந்து கழகத்தில் இணைத்து கொள்வததாக அறிவித்தனர். மாவட்ட கழகம் சார்பாக வாழ்த்து தெரிவித்து வரவேற்கப் பட்டது.

### திருச்செங்கோடு (நாமக்கல் மாவட்டம்)

24.2.2011 ஞாயிறு அன்று மாலை 4 மணிக்கு திருச்செங்கோடு மருத்துவர் பழ. பாலகிருட்டிணன் இல்லத்தில் நாமக்கல் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சாமிநாதன் வரவேற்றுப் பேசினார். முன்னிலை வகித்த பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கலந்துரையாடல் கூட்டங்களின் நோக்கங்களை விளக்கிப் பேசினார். இம்மாவட்டத்தில் தலைமைப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளும், முதல் கலந்துரையாடல் கூட்டம் என்பதால் பல புதிய தோழர்களும், கழக ஆதரவாளர்களும், மாற்று அமைப்பைச் சார்ந்தவர்களும் கலந்து கெண்டனர். பெரியார் கொள்கைகளை பின்பற்ற வேண்டிய அவசியம். பெரியார் திராவிடர் கழகத்தின் நோக்கம், மாற்று அமைப்புகளுக்கும், கழகத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகியவைகளைப் பற்றி கழகத் தலைவர் விரிவாகப் பேசினார். மருத்துவர் பழ. பாலகிருட்டிணன், ஈரோடு இரத்தினசாமி, நாமக்கல் மாவட்டத் தலைவர் தி.க. கைலாசம் ஆகியோரும் உரையாற்றினர்.

பெரியார் கொள்கைகளை நாடக வடிவில் பரப்பி வந்த தோழர் திருப்பதி, திராவிடர் கழகத் தலைமையின் கொள்கை முரண்பாட்டால், பல ஆண்டுகளாக அமைப்பில் இருந்து விலகி இருந்ததாகவும், தற்போது கழகத்தில் இணைந்து கலை வடிவில் பெரியாரியலை கொண்டு செல்ல தயாராக இருப்பதாகவும் அறிவித்தார்.

கழகத் தோழியர் கலா, சிவக்குமார், வைரவேல், சதீஷ், குமாரபாளையம் மாதுராஜ், மோகன், திராவிட மணி, பூபதி, சீனிவாசன், செல்வம், ஞானசேகரன், தண்டபாணி, காந்தி உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி: கோகுல கண்ணன்**

# உண்மைகள் வெளியே வருகின்றன: ‘இந்து’ ராம் குடும்பத்தில் குடுமி பிடி

*‘இந்து’ ஏட்டில் பார்ப்பனக் குடும்பத்தில் மீண்டும் மோதல் வெடித்துள்ளது. ஏற்கனவே ஒரு முறை மோதல் உருவாகி, பிறகு, தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தலையிட்டு, சமரசம் செய்து வைத்தார். அதன்படி ‘இந்து’ ஏட்டின் தலைமை நிர்வாகப் பொறுப்பு என்.ராமிடம் வந்து சேர்ந்தது. இப்போது ‘இந்து’ ராமுக்கு எதிராக, ‘இந்து’ ஏட்டின் ஆசிரியராக இருக்கும் என். ரவி போர்க்கொடி உயர்த்தியுள்ளார். இவர் இந்து ராமின் சொந்த தம்பி ஆவார். (இவரது மகள்தான் தி.மு.க. அமைச்சர் தயாநிதிமாறனின் மனைவி) என். இரவி அவரது இணையதளத்தில் ‘இந்து’ ராம் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை சுமத்தி ஒரு கடிதம் எழுதியுள்ளார்.*

கடந்த 18 ஆம் தேதி ‘இந்து’ ஏட்டின் ஆசிரியர் பொறுப்பிலிருந்து என். ரவியை ‘இந்து’ ராம் நீக்கி விட்டார். அதேபோல் மேலாண்மை இயக்குனராக இருந்த என். ரவியின் தம்பி என். முரளி, இணை ஆசிரியராக இருந்த நிர்மலா லட்சுமணன், என். இராமின் சித்தி மகளான - நிர்வாக ஆசிரியராக இருந்த மாலினி பார்த்தசாரதி ஆகியோரையும் ராம் அதிரடியாக நீக்கியுள்ளார். இவர்கள் அனைவருமே இந்து பார்ப்பன அய்யங்கார் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பு நிர்வாகத்தில், இனி இல்லாத அளவுக்கு ‘இந்து’ ராம் அனைவரையும் வெளியேற்றி பத்திரிகையை முழுமையாக தனது பொறுப்பாக்கிக் கொண்டு விட்டார் என்றும், இது ‘இந்து’வின் பதிவுசெய்யப்பட்ட விதிகளுக்கு எதிரான நடவடிக்கை என்றும் கூறும் என். இரவி, ராம் மீது பல குற்றச்சாட்டுகளைக் கூறியுள்ளார். சீனாவின் ஏஜென்டாகவும், எல்லை மீறி கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவுப் பத்திரிகையாகவும், நேர்மையான பத்திரிகை தர்மத்துக்கு எதிராக தன்னைப் பற்றிய சுயதம்பட்டத்துக்கு பத்திரிகையைப் பயன்படுத்தி வருவதாகவும் என். ரவி குற்றம்சாட்டியுள்ளார். ‘இந்து’வின் தலையங்கங்கள் நேர்மையின்றி நடுநிலைத் தவறி எழுதப்படுவதாகவும், அதில் சார்பு நிலை மேலோங்கி நிற்பதாகவும் கண்டித்துள்ள என். ரவி, ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஆ. இராசாவின் பேட்டியை வெளியிட்டு, அவரை குற்றமற்றவர் என்று காட்ட முயன்று, அதற்கான பலனாக தொலை தொடர்புத் துறையின் முழு விளம்பரத்தையும், ‘இந்து’ ராம் பெற்று வெளியிட்டார் என்று, என். ரவியின் குற்றச்சாட்டு பட்டியல் நீளுகிறது.

ஊழல் வழக்கில் ஆ. இராசா கைது செய்யப்பட்ட பிறகு ‘இந்து’ எழுதிய தலையங்கத்தில் அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தாதது ஏன்? என்ற கேள்வியை என். ரவி எழுப்புகிறார். ரவி எழுதிய இந்த கடிதத்தை ‘இந்து’ ஏடு வெளியிடவில்லை. ஆனால், ரவிக்கு பதிலளித்து, ‘இந்து’ ராம் டெல்லியில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்ததை மட்டும் ‘இந்து’ ஏட்டில் பெரிய அளவில் வெளியிட்டுக் கொண்டார். நேர்மையான பத்திரிகையாளராக இருந்தால் ரவியின் குற்றச்சாட்டு கடிதத்தையும் வெளியிட்டு, அதற்குப் பிறகு தானே தனது பதிலை வெளியிட்டிருக்க வேண்டும் என்று மூத்த பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். தொலை தொடர்புத் துறை விளம்பரம் ‘இந்து’வில் வெளி வந்ததற்கும், ஆ. ராசா பேட்டிக்கும் தொடர்பில்லை என்று மறுத்துள்ள இராம், ‘இந்து’வைத் தவிர வேறு சில ஏடுகளிலும் அந்த விளம்பரம் வந்துள்ளது என்று பதில் கூறுகிறார். ஆனால், ஆ. இராசா பதவி விலக வேண்டும் என்று, ஏன் தலையங்கத்தில் குறிப்பிடவில்லை என்ற கேள்விக்கு - ‘இந்து’ ராம் - அது ஆசிரியர் குழு அந்த நேரத்தில் எடுத்த கருத்து என்று சமாதானம் கூறியுள்ளார்.

இடதுசாரி போல தன்னைக் காட்டிக் கொள்ளும் ‘இந்து’ ராம் பார்ப்பன உணர்விலிருந்து விடுபட்டவர்

(4 ஆம் பக்கம்)

# பார்ப்பனியத்தை வளர்க்கும் பன்னாட்டு நிறுவனங்கள்

பார்ப்பனிய சாதிய கட்டமைப்பு நிலை நிறுத்தியுள்ள சமூக ஏற்றத் தாழ்வுகளை பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் மீண்டும் உறுதி செய்து வருகின்றன. புறக்கணிக்கப்பட்ட பிரிவு மக்களுக்கு சமூக நீதியையும், சம வாய்ப்புகளையும் உறுதி செய்ய வேண்டிய மத்திய மாநில அரசுகள் தங்கள் கடமைகளைக் கை கழுவிவிட்டதோடு, பார்ப்பன பன்னாட்டு நிறுவனங்களின் தாராள சுரண்டலுக்கு கதவுகளைத் திறந்துவிட்டதால், சமூகம் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. பெரியார் – அம்பேத்கர் முன் வைத்த சாதி ஒழிப்பு சமத்துவக் கருத்துகளுக்கு கடும் சவாலாக எழுந்திருப்பவை மத்திய பார்ப்பன ஆட்சியின் இந்த சுரண்டல் கொள்கைகள் தான். இந்தக் கருத்தை நடுநிலையுடன் சிந்திக்கும் ஆய்வாளர்களும் முன் வைத்து எச்சரிக்கத் தொடங்கி யுள்ளனர். அண்மையில் இது தொடர்பாக இரண்டு பெண் ஆய்வாளர்கள் முன் வைத்துள்ள கருத்துகளை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

புது டில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியரும், தேசிய மைனாரிட்டி ஆணைய உறுப்பினருமான சோயா அசன் சென்னையில் ஏசியன் பத்திரிகையாளர் பயிற்சிக் கல்லூரியில் நிகழ்த்திய உரையின் சுருக்கத்தை 'இந்து' நாளேடு (மார்ச் 26) வெளியிட்டுள்ளது. அவர் வெளியிட்ட கருத்துகள்:

"அடிப்படை உரிமைகள், அடிப்படைத் தேவைகள் என்ற நோக்கில் சமூக வளர்ச்சி மற்றும் சமூக நலத் திட்டங்களை அணுகத் தொடங்கி யிருக்கிறோம். இது ஒரு புதிய அணுகுமுறை. இந்தக் கண்ணோட்டம் நல்ல மாற்றங்களை உருவாக்கி வருகிறது என்று கூறினாலும், இதைப் பின்னுக்குத் தள்ளிவிடும் பேராபத்தைக் குறிப்பிட வேண்டும். அரசின் கொள்கைகளை உருவாக்குவதில் பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டிருப்பது, மிகப் பெரும் ஆபத்தாகும். மக்களை சமத்துவமாக்க வேண்டும் என்ற அரசின் இலக்கை, இந்த நிறுவனங்கள் சீர்குலைத்து, பின்னோக்கித் தள்ளிவருகின்றன.

இந்தியா, இப்போது பொருளாதார வளர்ச்சியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதற்கு அன்னிய முதலீடுகளும், அரசு முதலீடுகளும் ஒன்றாக இணைந்து அதிகரித்து வருவது ஒரு காரணம். ஆனால், பன்னாட்டு நிறுவனங்களிடம் பொருளா தார அதிகாரங்கள் மய்யம் கொண்டிருப்பது ஆபத்தானது. அதிகாரங்கள் அவர்களின் பிடிக்குள் போய் விட்டதால், கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள், மாநிலங்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகள், சமூத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் மேலும் மேலும் அதிகரித்து வருகின்றன. இதனால் சமத்துவமின்மை வளர்ந்து வருகிறது. தொழில் துறையில் மட்டுமே, தனியார் மூலதனம், சொத்துகளாக குவிந்து வருவது பெரும் சவாலாகும். இதன் காரணமாக முதலாளித்துவத்தை நோக்கி அரசு வேகமாக முன்னேறுகிறது. விவசாயத் துறை புறக்கணிக்கப்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் காரணம், கொள்கைகளை உருவாக்குவதில் பன்னாட்டு நிறுவனங்கள் செல்வாக்கு செலுத்து வதே. இப்போது, இந்தியாவில் நடக்கும் பொருளாதார வளர்ச்சி எப்படி இருக்கிறது?

ஒரு பக்கம் சமத்துவத்தைக் குலைத்து, மக்களிடம் வறுமையை வளர்த்துக் கொண்டே மற்றொரு பக்கத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் சொத்து களை குவித்துக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தில் மக்களிடையே இந்த ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்துக் கொண்டிருப்பதாலேயே, பெரிய அளவில் ஊழல்கள் தீவிரமாகின்றன. தொழிலதிபர்கள், அரசியல் வாதிகள், அதிகாரிகள் என்ற முக்கூட்டு பரிமாணம் உருவாகியுள்ளது. அநேகமாக அரசாங்கத்தையே தங்கள் வசமாக்கிக் கொள்ளும் எல்லைக்கு பன் னாட்டு நிறுவனங்கள் நெருங்கிவிட்டன. இயற்கை வளங்கள் மிக மோசமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

1990-களில் ஜனநாயகத்தில் ஒரு புதிய எழுச்சி உருவானது (மண்டல் அறிக்கை அமுலாக்கம் - ஆர்) அப்போதுதான். ஏற்கனவே புறக்கணிக்கப்பட்ட பிரிவினர், அரசியல் அரங்கிற்குள் நுழைந்தனர். அப்படி அரசியலுக்குள், அவர்கள் வந்தாலும், சமூகக் கட்டமைப்பில் கீழ் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த சமூகப் பிரிவினரோடு (தலித், சூத்திரர்கள்) அதிகாரப் பங்கீடு நிகழவில்லை; செல்வங்களும், வசதிகளும், அவர்களை சென்றடையவில்லை.

இப்போது அய்க்கிய முற்போக்கு ஆட்சியில் நடக்கும் பொருளாதார வளர்ச்சியானாலும், உரிமைகள் மற்றும் தேவைகளுக்கான கண்ணோட் டமானாலும் சரி; உண்மையான பயன்களைத் தருவது மிகவும் கடினம். காரணம், பெருமளவில் பணம் சுருட்ட வேண்டும் என்ற போக்கு, அதிகார மய்யத்தில் ஆழமாக புரையோடி நிற்கிறது. இந்திய அரசியலின் போக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். பொருளாதாரக் குவியல் தடுக்கப்பட்டு, அனைவருக் கும் மறு பங்கீடு செய்யும் கொள்கைகள் செயல் படுத்தப்படும்போது தான் சமூகநீதி என்ற கொள்கை அர்த்தம் பெறும். இந்தியா, ஜனநாயக நாடு என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சி நடக்கிறது என்றும் கூறிக் கொண்டாலும், உண்மையான ஜனநாயக அரசியல் வரவில்லை; அந்த ஜனநாயக அரசியல் தரும் அழுத்தத்தின் காரணமாக சமத்துவத்துக்கு எதிரான இந்தப் போக்குகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்" - என்று பேராசிரியர் கூறினார்.

மற்றொரு பெண் அரசியல் ஆய்வாளர் ஜெயத்தி கோஷ், "இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சியால் சமூகப் பாகுபாடுகள் அதிகரித்து, தீண்டப்படாத மக்கள் மேலும் புறக்கணிப்புக்கு உள்ளாகி விட்டனர் என்று எழுதியுள்ளார். 'பிரன்ட் லைன்' ஏட்டில் ஒவ்வொரு இதழிலும் ஆய்வு கட்டுரைகளை எழுதி வரும் அவர், அண்மையில் வெளி வந்த அந்த இதழில் (ஏப். 22, 2011) 'சந்தைப் பொருளாதாரம் விரும்புகின்றன. உருவாக்கும் வளர்ச்சியால் சமூகத்தில் நிலவி வந்த சாதி ஒடுக்கு முறைகள் ஆண், பெண் ஏற்றத் தாழ்வுகள் போன்ற பழமைவாதங்கள் தானாக விடைபெற்று விடும் என்று ஆய்வாளர்கள் கூறி வந்த கருத்து பொய்த்துப் போய் விட்டது" என்று குறிப்பிட் டுள்ளார்.

உண்மையில், ஏற்கனவே இருந்த நிலையை பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் வரவு மேலும் மோசமாக்கியுள்ளது என்று கூறும் அவர், இதற்கு பல சான்றுகள் ஆய்வுகளை முன் வைத்துள்ளார். குறைந்த செலவில், குறைந்த கூலியில் உற்பத்தி செய்யவே இந்த நிறுவனங்கள், உற்பத்திக்கான செயல்பாடுகளை தங்களிடம் வைத்துக் கொள்ளாமல் ஒப்பந்தப் பணிகளாக்கி (out sourcing) வெளியில் தந்துவிடுகின்றன. இந்த முறையில் குறைந்த கூலி கொடுத்து பெரும் கொள்ளையடிக்கின்றன. மென்பொருள் துறையில் குறைந்த ஊதியத்தில் செயல்படக்கூடிய தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் மலிவாக கிடைத்து விடுகிறார்கள். அலுவலகத்தை சுத்தம் செய்தல், நிர்வகித்தல், போக்குவரத்து வசதிகளை செய்தல், உணவு வழங்குதல், பாதுகாப்பு வசதிகள் போன்ற அனைத்து பணிகளும் ஒப்பந்தப் பணிகளாக குறைந்த விலைக்கு ஏற்பாடு செய்து விடுகிறார்கள். சாதி மற்றும் சமூக பாகுபாடுகள் நிறைந்த இந்தியாவில், பாரம்பர்யமாக தொடரும் இந்த சமூக பாகுபாடுகள் பெரும் முதலீட்டுக் குவியலுடன் களமிறங்கியுள்ள தொழில் நிறுவனங்களிடம் கையேந்தி வேலைக்காக நிற்கும்போது, ஏழ்மையில் உழலும் ஒடுக்கப்பட்ட சாதிக் குழு, அதே அடையாளத்துடன் இந்த வேலைகளை செய்ய வேண்டியிருக்கிறது. குறைந்த கூலியில் வேலை செய்யக்கூடிய பிரிவினராக தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மதச் சிறுபான்மைப் பிரிவினராகவே உள்ளார்கள் என்று தேசிய மாதிரி ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கிராமம் மற்றும் நகர உழைப்புச் சந்தைகள், இரண்டிலுமே இந்த சாதிய வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த நிறுவனங்களின் 'தொழில்நுட்பம் சாராத' சேவை தொடர்பான வேலைகளில் குறைந்த கூலியில் மிகவும் கீழ்நிலையில் வைக்கப்பட்டுள்ள சாதிப் பிரிவினரே ஈடுபடுத்தப் பட்டு, காலங்காலமாக நிலைநாட்டப்பட்டு வந்த சமூகப் பாகுபாடு மீண்டும் உறுதிபடுத்தப்படுகிறது. கிராமங்களில் சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகி, உள்ளூர் வளங்களைப் பகிர்ந்து கொள்ளும் உரிமை மறுக்கப்பட்ட நிலையில், ஏதேனும் கிடைத்த வேலையைச் செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்ட இந்த மக்கள், பன்னாட்டு நிறுவனங்களில் ஒப்பந்தக் கூலிகளாகி விடுகிறார்கள்.

இந்திய கிராமங்களில் நிலவும் தீண்டாமை பற்றி தமிழ்நாடு உட்பட 11 மாநிலங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகள் நூலாக வெளி வந்துள்ளது. கிராமங்களின் சாதி ஆதிக்க பழக்க வழக்கங்களினால், தலித் மக்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல், ஊருக்கு வெளியே மிக மோசமான சூழல்களில் குறைந்த கூலியில் வேலை செய்யக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

சமூகத்தில், ஏற்கனவே நிலவி வரும் சாதியப் பாகுபாடுகளை பன்னாட்டு நிறுவனங்கள் தனது தொழில் நலனுக்கு பயன்படுத்திக் கொள்கிறது என்றும், அவர்கள் தொழிலாளர்களிடம் நெகிழ்ச்சியாக தடையின்றி பேரம் பேசி, குறைந்த கூலி தருவதற்கான வாய்ப்பை இந்த சாதி ஏற்றத் தாழ்வுகள் எளிதில் உருவாக்கித் தருகின்றன என்றும் இந்த ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. (Capitalism in India, especially integrated variant, has used past and current modes of social discrimination and exclusion to its own benefit to facilitate the extraction of surplus and ensure greater flexibility and bargaining to employers when dealing with workers) பெண்களும் இதேபோல் மோசமாக பாகுபாடுக்கு உள்ளாக்கப்பட்டு, குறைந்த கூலியில் அவர்கள் சுரண்டப்படுகிறார்கள்" - என்று ஜெயந்தி கோஷ் கட்டுரை கூறுகிறது.

பன்னாட்டு நிறுவனங்கள், பார்ப்பன அதிகார வர்க்கத்தின் பிடியில்தான் செயல்படுகின்றன. இந்தியாவில், அரசுத் துறைகளில் உயர் பதவிகளில் இருந்த பார்ப்பனர்கள் பதவி ஓய்வு பெற்ற உடனேயோ, அல்லது பதவியை விட்டு விலகியோ, இந்த பன்னாட்டு நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகளாக வந்து விடுகிறார்கள். இதனால் இந்திய ஆட்சி அதிகார அமைப்பில் செல்வாக்குள்ள பார்ப்பன அதிகாரிகளை, தங்கள் வளையத்துக்குள் எளிதாக, பன்னானட்டு நிறுவனங்கள் கொண்டு வந்து விடுகின்றன. பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதி நிதிகள், அமைச்சர்களாக சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்தாலும், அவர்களுக்கு விலை நிர்ணயயீக்கப்பட்டு, அதிகாரம் பன்னாட்டு நிறுவனங்களின் பிடிக்குள் வந்து விட்டன.

ஆளும் கட்சியானாலும், எதிர்கட்சியானாலும் இதில் போட்டிப் போட்டு நிற்கின்றன. பண்பாட்டுத் துறையில் வேதம், கோயில், பூணூல், சாதி என்று பார்ப்பனியம் மக்களை அடிமைப்படுத்திய நிலையில், மேம்போக்கான சிறு மாற்றங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன. இந்த நிலையில் நாட்டின் பொருளாதார அதிகாரத்தை பன்னாட்டு நிறுவனங்கள் வழியாகக் கைப்பற்றிக் கொண்ட பார்ப்பனர்கள், அரசியலையும், தங்கள் பிடிக்குள் கொண்டு வந்து விட்டார்கள்.

---

(4 ஆம் பக்க தொடர்ச்சி)

அல்ல. பெரியார் திராவிடர் கழகத்தின் செய்திகள் 'இந்து'வில் இடம் பெற அவர் அனுமதிப்பதே இல்லை! ஜெயேந்திர சரசுவதி கொலைக் குற்றத்தில் கைது செய்யப்பட்டபோது, 'கைது செய்தது மனித உரிமை மீறல்' என்று மார்க்சிஸ்ட் பொலிட் பீரோ உறுப்பினரும், தனது நெருக்கமான நண்பருமான சீத்தாராம் எச்சூரியிடமிருந்து அறிக்கை வாங்கி வெளியிட்டவர் 'இந்து' ராம். அப்போது ஜூனியர் சங்கராச்சாரி விஜயேந்திரன், கொலைக் குற்றத்தில் கைது செய்யப்பட இருந்த நிலையில், தனது சொந்தக் காரில் ஆந்திர எல்லையிலிருந்து தமிழ் நாட்டுக்கு நேரில் சென்று வரவேற்று, தானே காரை ஓட்டி பத்திரமாக அழைத்து வந்தவர் 'இந்து' ராம்.

மேட்டூரில் 'கெம் பிளாஸ்ட்' என்ற சுற்றுப்புற சூழலைக் கெடுக்கும் ஆபத்தான அமிலம் தயாரிக் கும் நிறுவனத்துக்கு பெரியார் திராவிடர் கழகம் உட்பட சுற்றுப்புற சூழல் பாதுகாப்பாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராடி வருகிறார்கள். இந்நிறுவன உரிமையாளர்கள் 'இந்து' ராமின் உறவினர்கள் என்பதால், மக்களை பாதிக்கும் இந்த ஆபத்தான தொழிற்சாலைக்கு பாதுகாப்பும், ஆதரவும் கேட்டு, முதல்வர் கலைஞர் கருணாநிதி யிடம் நிறுவன உரிமையாளர்களுடன் தூதுபோய், அதை படத்துடன், தனது பத்திரிகையிலும் வெளியிட்டுக் கொண்டவர்தான் 'இந்து' ராம்.

# ‘இரட்டை தம்ளர்’ தீண்டாமை: தமிழக காவல் துறைக்கு உச்சநீதிமன்றம் எச்சரிக்கை

*தமிழ்நாட்டில் ‘இரட்டை தம்ளர்’ வடிவத்தில் தீண்டாமை கடைபிடிக்கப்படுவதை உச்சநீதிமன்றம் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க தமிழக அரசு முன் வர வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் வலியுறுத்தி யுள்ளது. ‘தீண்டாமை’ தொடர்பாக உச்சநீதி மன்றத்துக்கு வந்த வழக்கு ஒன்றில் தீண்டாமை சாதியமைப்புக்கு எதிராக உச்சநீதிமன்றம் மிகச் சிறப்பான தீர்ப்பை வழங்கி யிருக்கிறது.*

மதுரை அருகே ‘ஜல்லிக்கட்டு’ நடந்தபோது, இரு சமூகத்தினருக்கு இடையே நடந்த மோதலில் ஆறுமுகம் சேர்வை, அஜீத் குமார் என்ற இரண்டு பேரும், பன்னீர் செல்வம், மேகமணி ஆகிய தலித் சமுதாயத் தோழர்களை சாதிப் பெயரைச் சொல்லி இழிவுபடுத்தி தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். இந்த வழக்கில், மதுரை மாவட்ட நீதிமன்றமும் சென்னை உயர்நீதிமன்றமும் தண்டனையை உறுதிப்படுத்தியது. குற்றம்சாட்டப்பட்ட ஆதிக்க சாதியினர் உச்சநீ மன்றத்துக்கு மேல் முறையீடு செய்தனர். மேல் முறை யீட்டு மனுவை உச்சநீதிமன்ற நீதிபதிகள் மார்க்கண்டய கட்ஜு, கியான் சுதா மிஸ்ரா ஆகியோர் அமர்வுக்கு முன் விசாரணைக்கு வந்தது. தண்டனையை உறுதி செய்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், சாதியைக் கூறுவதே இழிவுபடுத்தும் நோக்கம் கொண்டது தான் என்று குறிப்பிட்டுள்ளனர். ‘சமார்’ என்ற சொல், வடநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிக்கும் சொல். அது இழிவுபடுத்தும் நோக்கத்துடனேயே கூறப்படுகிறது. அப்படிச் சொல்வதற்கு வரலாற்றுப் பின்புலம்தான் காரணம். இழிவுபடுத்துவது அல்ல என்ற விளக்கத்தை ஏற்க உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது. இத்தகைய விளக்கங்களை ஏற்றுக் கொண்டால், அது தீணடாமை ஒழிப்புச் சட்டத்தின் நோக்கத்தையே சீர்குலைப்பதாகும் என்று நீதிபதிகள் கூறியுள்ளனர். (தமிழ்நாட்டில் ‘பறையன்’ என்று கூறிவிட்டு பிறகு, நீண்டகாலமாக பறை அடிக்கும் தொழிலைச் செய்ததால், அப்படிக் கூறியதாக விளக்கம் கூறினால், அதை ஏற்க முடியாது என்பதே உச்சநீதிமன்றம் தந்துள்ள விளக்கம். - ஆர்) வழக்கு தமிழ்நாடு தொடர்புடையது என்பதால், “உச்சநீதி மன்றம், தமிழ்நாட்டில் நிலவி வரும் தீண்டாமை பற்றி கீழ்க்கண்ட கருத்துகளை தீர்ப்பில் பதிவு செய்துள்ளது:

14. “தமிழ்நாட்டில் பல பகுதிகளில் இப்போதும் நடைமுறையில் இருக்கும் - மிகவும் கண்டிக்கத்தக்க இரட்டை தம்ளர் முறைபற்றியும் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். பல தேனீர்க் கடைகள் உணவு விடுதிகளில் இந்த முறை நீடிக்கிறது. பட்டியல் இனப் பிரிவினருக்கு (தாழ்த்தப்பட்டோர்) தனிக் குவளையிலும், பிற சாதியினருக்கு தனிக் குவளை யிலும் - தேனீரோ அல்லது குடிக்கும் பானங்களோ வழங்கப்படுகிறது. இந்த செயல்பாடுகள் மிகவும் கண்டிக்கத்தக்கவை. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் சட்டங்களுக்கு எதிரானது. இப்படி தீண்டாமையைப் பின்பற்றுவோர் மீது, கிரிமினல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்றம் நிரூபிக்கப்பட்டால், கடுமையாக தண்டிக்க வேண்டும். இதற்கான பொறுப்பு அனைத்து நிர்வாக அதிகாரி களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் உண்டு. இந்த அதிகாரிகளின் நிர்வாக வரம்புக்கு உட்பட்ட பகுதிகளில், இந்தக் குற்றங்கள் நடப்பது குறித்து தெரிந்திருந்தும், நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(All administrative and Police officers will be accountable and departmentally proceeded against if, despite having knowledge of any such practice in the area under their Jurisdiction they do not launch criminal proceedings against the culprits.)

சாதி விட்டு சாதி நடைபெறும் சாதி மறுப்பு திருமணங்களை தடுப்பதும், மிரட்டுவதும் குற்றம் என்றும், இதே தீர்ப்பில் உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

16. “சாதிக்கு வெளியே திருமணம் செய்து கொள்ளும் இளம் ஆண்களும் பெண்களும் அச்சுறுத்தப்படுவது; வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு வருவது தொடர்பான பல சம்பவங்கள் எங்கள் கவனத்துக்கு வருகின்றன. இது தொடர்பாக நாங்கள் சில கருத்துகளைப் பதிவு செய்வது தேவையானது என்று கருதுகிறோம். நமது தேசத்தின் வரலாற்றில் இது ஒரு முக்கிய காலகட்டம்; மாறுதலுக்கான முக்கிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்; எனவே சமூகத் தொடர்பான முக்கியமான பிரச்சினையில் இந்த நீதிமன்றம் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

17. இந்த தேசத்தில் சாதி அமைப்பு ஒரு ‘சாபக் கேடு’; எவ்வளவு சீக்கிரத்தில் இது அழிந்து ஒழிகிறதோ, அதுவே தேசத்துக்கு நல்லது. சவால்களை எதிர்கொள்ள, நாம் இணைந்து நிற்க வேண்டிய தருணத்தில் இந்த சாதி அமைப்பு கூறு போடுகிறது. உண்மையில் தேசத்தின் நன்மைக்கு சாதி மறுப்புத் திருமணங்கள் தான் தேவை. அவற்றினால்தான், சாதி அமைப்பை ஒழிக்க முடியும். ஆனால், சாதிக்கு வெளியே திருமணம் செய்து கொள்ளும் இளைஞர்கள் அச்சுறுத்தப்படுவதும், வன்முறைத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதுமான கவலை தரும் செய்திகள் வருகின்றன. இந்த வன்முறைகளோ, அச்சுறுத்தல்களோ, அலைக்கழித்து தொல்லை கொடுப்பதோ முழுமையான சட்டவிரோத செயல்களாகும். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். இது, சுதந்திரமான ஜனநாயக நாடு. வயதுக்கு வந்த எந்த ஒரு பிரிவினரும், தாங்கள் விரும்பியவரை திருமணம் செய்து கொள்ள உரிமை உண்டு. இதை ஏற்றுக் கொள்ள விரும்பாத பெற்றோர்கள், அதிகபட்சமாக, அவர்களுடன் தங்களுக்கான உறவை வேண்டுமானால் துண்டித்துக் கொள்ளலாம்.

அதற்காக, அவர்களை அச்சுறுத்தவோ, தாக்கவோ, அவமதிக்கவோ முடியாது. மதத்துக்கு வெளியே நடக்கும் திருமணங்களுக்கும் சேர்த்தே கூறுகிறோம். எனவே நாடு முழுதும் உள்ள நிர்வாக அதிகாரிகளுக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் நாங்கள், இதன் மூலம் உத்தரவாக கூற விரும்புகிறோம். வயதுக்கு வந்த இளம்பெண்கள் - இளம் ஆண்கள், சாதி மதத்துக்கு வெளியே திருமணம் செய்யும் போது, அவர்கள் மிரட்டலுக்கோ வன்முறைக்கோ உள்ளா கிறார்களா என்பதை கவனிக்கவேண்டியதும், அப்படி உள்ளாக்காமல் தடுக்க வேண்டியதும், அப்படி, சட்ட விரோதமாக செயல்படுவோர் மீது, கிரிமினல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் காவல்துறையின் பொறுப்பு; சட்டப்படி, கடுமையான தண்டனைக்கு உட்படுத்த வேண்டும்.

We therefore, direct that the administration / police authorities throughout the country will see to it that if any boy or girl who is a major undergoes inter-caste or inter-religious marriage with a woman or man who is a major, the couple are not harassed by any one nor subjected to threats or acts of violence, and anyone who gives such threats or harasses or commits acts of violence either himself or at his instigation, is taken to task by instituting criminal proceedings by the police against such persons and further stern action is taken against such persons as provided by law.

16. இப்படி சாதி மதத்துக்கு வெளியே திருமணம் செய்தவர்களை பஞ்சாயத்துகூட்டி, மரண தண்டனை வழங்குவதாகவும், அதை ‘கவுரவக் கொலை’ என்று கூறுவதாகவும் கேள்விப்படுகிறோம். இவை ‘கவுரவக் கொலைகள்’ அல்ல. உண்மையில் கொடூரக்காரர் களால் நிலப்பிரவுத்துவ சிந்தனையாளர்களால் நடத்தப்படும் காட்டுமிராண்டித்தனமான அவமான கரமான படுகொலைகளேயாகும். இவர்கள், கடுமையான தண்டனைக்கு உரிய குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதன் வழியாகத்தான், இந்தக் காட்டுமிராண்டி செயல்களை அறவே துடைத்தெறிய முடியும்.

17. அண்மைக் காலமாக தமிழ்நாட்டிலும் - இவை ‘கட்ட பஞ்சாயத்துகள்’ என்ற பெயரில் நடப்பதாக கேள்விப்படுகிறோம். சாதி - மதத்துக்கு வெளியே திருமணம் செய்வோரை, பஞ்சாயத்து அமைப்புகள் வழியாக தண்டிப்பது, அவர்களின் தனி வாழ்க்கையில் குறுக்கிடுவது மட்டுமல்ல; முழுமையான சட்ட விரோத நடவடிக்கை...

இந்த கொடூரமான நடவடிக்கைகளைத் தடுக்க கடும் நடவடிக்கைகளை எடுக்க நிர்வாக அதிகாரி களும், காவல்துறை அதிகாரிகளும் முன்வரவேண்டும் என்று இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. இந்த கடமையைச் செய்ய முன்வராத மாவட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல்துறை அதிகாரிகள் தொடர்புடைய அதிகாரிகள் மீது மாநில அரசு உடனடியாக, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று, இதன் மூலம் ஆணையிடுகிறோம்” என்று நீதிபதிகள் தீர்ப்பில் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

தீண்டாமைக் கொடுமைகளை சுட்டிக்காட்டி, பெரியார் திராவிடர் கழகம் போராட்டக் களத்தில் நிற்கும்போது, தமிழக அரசு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் கழகத்தின் முயற்சிகளை முடக்கத் துடிக்கும் நிலையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு தெளிவான வெளிச்சத்தைத் தந்துள்ளது. 19.4.2011 அன்று இத் தீர்ப்பை உச்சநீதிமன்ற நீதிபதிகள் வழங்கியுள்ளனர். +

## ஆத்திகனும், நாத்திகனும்!

ஆத்திகன் என்பவன் சுயநல வாதி;
நாத்திகன் என்பவன் அறிவு ஜீவி!

ஆத்திகன் என்பவன் பொதுஜன விரோதி;
நாத்திகன் என்பவன் மக்கள் தொண்டன்!

ஆத்திகன் என்பவன் குழப்ப வாதி;
நாத்திகன் என்பவன் சிந்தைத் தெளிந்தவன்!

ஆத்திகன் என்பவன் பிறரைக் கெடுப்பவன்;
நாத்திகன் என்பவன் தீமையைத் தடுப்பவன்!

ஆத்திகன் என்பவன் பொய்யுரைப் போனே;
நாத்திகன் என்பவன் உண்மை விளம்பி!

ஆத்திகன் என்பவன் குறுகிய நெஞ்சன் ;
நாத்திகன் என்பவன் ஆய்வு மனத்தன் !

ஆத்திகன் என்பவன் குதர்க்க வாதி ;
நாத்திகன் என்பவன் நயத்தகுப் பேச்சினன் !

ஆத்திகன் என்பவன் எதற்கும் அஞ்சுவான் ;
நாத்திகன் என்பவன் வெளிச்ச சுடர்வான் !

ஆத்திகன் என்பவன் காட்டிக் கொடுப்பவன் ;
நாத்திகன் என்பவன் அணைத்துக் காப்பவன் !

ஆத்திகன் என்பவன் தேங்கியக் குட்டை ;
நாத்திகன் என்பவன் புதுமை விரும்பி !

ஆத்திகன் என்பவன் பள்ளம் பறிப்பவன் ;
நாத்திகன் என்பவன் மே(ட்)டைப் படைப்பவன் !

ஆத்திகன் என்பவன் ஆசை மிகுந்தவன் ;
நாத்திகன் என்பவன் அன்பு கொண்டவன் !

ஆத்திகன் என்பவன் அடுத்துக் கெடுப்பவன் ;
நாத்திகன் என்பவன் தடுத்து நிறுத்துவான் !

ஆத்திகன் என்பவன் வஞ்சகம் உள்ளவன் ;
நாத்திகன் என்பவன் நெஞ்சுரம் மிக்கவன் !

ஆத்திகன் என்பவன் புறமேப் பேசுவான் ;
நாத்திகன் என்பவன் துணிவாய் பேசுவான் !

ஆத்திகன் என்பவன் குறிக்கோள் அற்றவன் ;
நாத்திகன் என்பவன் இலட்சிய மிக்கவன் !

ஆத்திகன் என்பவன் விலங்கை யொப்பான் ;
நாத்திகன் என்பவன் ஒழுக்கம் மிகுந்தவன் !

ஆத்திகன் என்பவன் அயோக்கியன் ;
நாத்திகன் என்பவன் நல்லவன் பாரீர் !

**ஆதாரம்: “அறிவுவழி” மாத இதழ்**
**டிசம்பர் 1988**
**தகவல்: தங்க. சங்கரபாண்டியன்**

# இந்திய துரோகம் அம்பலமானது

(முதல் பக்கத் தொடர்ச்சி)

**சென்னையில் :** சென்னையில் ஏப்.21 ஆம் தேதி பகல் 11 மணியளவில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் எழுச்சியுடன் ஆர்ப்பாட்டம் நடந்தது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர்



குமாரதேவன், ஊடகவியலாளர் அய்யநாதன், உடுமலை தமிழ்ச் செல்வன், வழக்கறிஞர் அமர்நாத் ஆகியோரை தொடர்ந்து விடுதலை இராசேந்திரன், அய்.நா. குழுவின் அறிக்கை இந்தியாவின் துரோகங்களை விரிவாக விளக்கி உரையாற்றினார். மாவட்ட செயலாளர் உமாபதி நன்றி கூறினார். இடையில் - மழை வந்த நிலையிலும் ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடந்தது.

**கரூரில் :** கரூரில் இந்திய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் கு.கி. தனபால் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் கு. ராசா, மாவட்ட செயலாளர் க. முருகேசன் முன்னிலை




வகித்தனர். கூட்டத்தில் நாம் தமிழர் கட்சி செல்வ. நன்மாறன், நகர ம.தி.மு.க. செயலாளர் பாலமுருகன், பெண்கள் முன்னணி செயலாளர் டானியா, ஆதி தமிழர் பேரவை வீரமுருகு, முல்லையரசு, துரை அமுதன், திருமதி ராணி, தமிழர் தேசிய இயக்கம் சந்திரன், வழக்கறிஞர் இராசேந்திரன், காமராஜ், கழகத் தோழர்கள் குப்புசாமி, முகமது அலி, சரவணன் மற்றும் திரளான பெண்கள் கலந்து கொண்டனர். இரா. அதியமான் நன்றி கூறினார்.

**மதுரையில் :** ஈழத் தமிழர் இனப் படுகொலை அய்.நா. மன்றத்திற்கு பொய்யான தகவல் அளித்த இந்திய அரசைக் கண்டித்து ஏப்.21 அன்று மாநகர் மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் அ. பெரியசாமி தலைமையில் கண்டன




ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. மு. தமிழ்ப் பித்தன், வெண்மணி, அ. முருகேசன், விடுதலை சேகர், ஸ்டாலின் இளங்கோ, கைவண்டிக் கறுப்பு, மா.மாயாண்டி, நசீர், தோழர்கள் தமிழ்க் கூத்தன் (புரட்சிக் கவிஞர் பேரவை), மு. கருப்பையா கதிர் நிலவன் (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்), வழக்கறிஞர் அருணாச்சல், இராசேந்திரன் (தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி), பரிதி (தமிழ் தமிழர் இயக்கம்), வேம்பன் (ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்), பொன்மாறன் மற்றும் வழக்கறிஞர்கள் பகத்சிங், பாரதி, பெரியார் வேந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். அம்பதுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மயிலாடுதுறையில்:** ‘இந்திய அரசே தமிழர்களிடம் மன்னிப்புக் கேள்’ என்ற கோரிக்கையை வலியுறுத்தி மயிலாடுதுறையில் ஏப்.21 ஆம் தேதி அஞ்சலகம் எதிரில் நாகை மாவட்டக் கழகத் தலைவர் இரஷீத்கான் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் இரமேஷ், இளையராசா, நகர கழகப் பொறுப்பாளர்கள் நாஞ்சில் சங்கர், இயற்கை, மு. அன்பரசன், ராஜராஜன், சீர்காழி நகர செயலாளர் ரமேஷ், நகர துணைசெயலாளர்




ராஜராஜன், சீர்காழி நகர தலைவர் பிரபாகரன், மாரியப்பன், தமிழர் உரிமை மீட்பு இயக்கத்தைச் சார்ந்த இரா. முரளீதரன், தமிழர் உரிமை இயக்கத்தைச் சார்ந்த அன்பு. மகேஷ், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைச் சார்ந்த தனவேந்திரன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

**தூத்துக்குடியில்:** ஈழப் போரில் ராஜபக்சே போர் குற்றம் புரிந்துள்ளார் என ஐ.நா. ஆய்வுக் குழு அறிவித்துள்ள நிலையில் போர் குற்றத்தை மூடி மறைந்த இந்திய பார்ப்பன அரசு தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கக் கோரி தூத்துக்குடி




மாவட்ட கழக சார்பில் 21.4.2011 அன்று மாலை 5 மணியளவில் தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தூத்துக்குடி மாவட்ட கழக செயலாளர் கோ. அ.குமார் தலைமை வகித்தார். நெல்லை மாவட்ட செயலாளர் சி.ஆ. காசிராசன், ஆழ்வை ஒன்றியத் தலைவர் நாத்திக பா. முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாட்டாளி மக்கள் கட்சியின் தத்துவ விளக்க அணி தலைவர் அ. வியனரசு ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். தொடர்ந்து புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பில் சுஜித், தூத்துக்குடி மாவட்ட கழக மாவட்ட ணைத் தலைவர் வே. பால்ராசு, மாவட்ட தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு ஆகியோர் உரைக்குப் பின் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் ஆர்ப்பாட்டத்தை விளக்கி விளக்கவுரையாற்றி, ஆர்ப்பாட்ட நிறைவுரை ஆற்றினார். தூத்துக்குடி மாநகரத் தலைவர் சா.த. பிரபாகரன் நன்றி கூறினார்.

நிகழ்வில் தூத்துக்குடி மாநகர செயலாளர் பால். அறிவழகன், மாவட்ட துணைச் செயலாளர் க. மதன், மாவட்ட அமைப்பாளர் ச.கா. பாலசுப்பிரமணியன், அமிர்தராஜ், ரவிசங்கர், வ. அசுரன், தமிழ்ப் புலிகள் மார்க்ஸ்,சோசப், தமிழரசன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சேலத்தில்:** சேலம் தலைமை தபால் நிலையம் முன்பு இந்திய அரசே! தமிழர்களுக்கு இழைத்த துரோகத்துக்கு மன்னிப்பு கேள்! இலங்கை அரசின் போர்க் குற்றங்களை உடனே விசாரிக்க வலியுறுத்து! ஐ.நா.வின் விஜய் நம்பியார் போன்றோரின் துரோகப் போக்குக்கு உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்! ஈழத் தமிழர்களின் உரிமைகளை அங்கீகரி! ஆகிய முழக்கங்களோடு கண்டன ஆர்ப்பாட்டம், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க மாவட்டச் செயலாளர் இளமாறன், அறிஞர் அம்பேத்கர் அமைப்புச் சாரா தொழிலாளர் முன்னேற்ற சங்கத் தலைவர் அரங்க. செல்லதுரை, வழக்கறிஞர் ஆனந்தராஜ், தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம் மாநில தலைவர் பூமொழி, சேலமே குரல் கொடு அமைப்பின் நிறுவனர் பியூஸ், சேலம் மக்கள் குழு லக்ஷ்மி, பாபிகுன்னு, சிவப்பிரியன் ஆகியோரும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். ✦

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 28th April 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.